# நீ நதி போல ஓடிக்கொண்டிரு...





பாரதி பாஸ்கர்

Pustaka
Digital Media

http://www.pustaka.co.in

# நீ நதி போல ஓடிக்கொண்டிரு

# Nee Nadhi Pola Odikondiru

Author:

**பாரதி பாஸ்கர்**

**Bharathi Baskar**

For more books

http://www.pustaka.co.in/home/author/bharathi-baskar-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

# பொருளடக்கம்

1. வீடு பாராட்டாவிட்டாலும், நேசிக்கிறது!

2. சுயமை

3. மௌன வாழ்த்து!

4. 'ஷட் அப் அண்ட் மூவ் ஆன்'

5. இளமையெனும் கூழாங்கல்லே, கூல்... கூல்!

6. அழகு... எது?

7. 'அநித்ராக்களை பலி கொள்ளாமல் இருப்பாயாக!

8. விதைக்க வேண்டியது வெறியல்ல... வெற்றி!

9. அக்னி மூலையின் அறை... பெண்களுக்கெல்லாம் சிறை!

10. கமலாம்மாவும் கடன் அட்டையும்!

11. வீசப்பட வேண்டியது... எதிர்பார்ப்பு... விரும்பப்பட வேண்டியது... விவேகம்!

12. 'வலி' நிரம்பிய இழப்புகள்... வராமல் இருக்கக் கடவோம்!

13. மோதி மிதிக்க... முகத்தில் உமிழ...

14. பிரியாத நட்பென்னும் பெரு வரம் வாய்க்குமோ?

15. ஓர் இனிய மைல் கல்!

16. பயணம் செய்ய விரும்பு!

17. பெண்ணுக்கு எதிரி பெண்ணேதானா?

18. அச்சம் தவிர்!

19. போராட்டமே பெண்ணின்

20. நேரில் நின்று... பேசும் தெய்வம்

# இதயத்திலிருந்து ஒரு சொல்!

என்னுடைய பேச்சுத் திறனுக்கு, அம்மாதான் பிள்ளையார் சுழி போட்டாள். சிறுவயதில், பள்ளிப் பேச்சுப்போட்டி என்றால் அம்மாவிடம் போய் நிற்பேன். வேலையெல்லாம் முடித்துவிட்டு, இரவின் அமைதியில் அம்மா எழுதுவாள். அடுத்த நாள் காலையில் நான் பேசவேண்டியவை, வெள்ளைத்தாளில் நீலப்பூக்களாக மலர்ந்து எனக்காகக் காத்திருக்கும். அப்படியே படித்து, ஒப்பித்து, சிலசமயம் பரிசும் வாங்கி வரும்போது, அம்மாவின் கண்களில் ஒரு மின்னல் தோன்றும். பின்பு சின்னதாகச் சிரிப்பாள். அதுகூட அவளைப் போல் மென்மையானதே.

அப்படி ஆரம்பித்தவள், அம்மாவின் ஆசிகளால், வாழ்த்துகளால் வளர்ந்து 'அவள் விகடன்' இதழில் எழுதும் வரை வந்துவிட்டேன்.

கட்டுரை வரையத் தொடங்கி பல வாரங்கள் கடந்தபின், அவள் விகடனில் இருந்து ஓர் அழைப்பு. "தொடர், அடுத்த இதழோடு முடியப் போகிறது. தொடரின் இறுதிக் கட்டுரை மிகுந்த நுணுக்கமாகவும் அழுத்தமாகவும் இருந்தால் நன்றாக இருக்கும்..." என்றனர். அழைப்பு வந்த நாளிலிருந்து அலை மோதினேன், எதை எழுத நினைத்தாலும், இடுப்பை விட்டு இறங்கமாட்டேன்' என்று அடம் பிடிக்கும் பிடிவாதக் குழந்தை மாதிரி, பேனாவை விட்டு வார்த்தைகள் வர மறுத்தன.

2010-ன் தீபாவளி. உடல் நலமின்றி இருந்த அம் மாவைப் பார்த்து வந்தேன். அன்று இரவு, எழுத உட்கார்ந்தவுடன் நெஞ்சமெல்லாம் அம்மாவைப் பற்றிய நினைவுகளே நிறைந்து வழிந்தன. எழுத உட்கார்ந்ததுதான் எனக்குத் தெரியும். வழக்க மான காலதாமதங்கள், 'நாளை பார்க்கலாம்' என்று தள்ளிப்போடும் குட்டிச் சோம்பல்கள், வார்த்தை களுடன் குஸ்திச் சண்டை எதுவுமின்றி கட்டுரை களைகட்டத் தொடங்கியது.

'ஓர் எழுத்தாளனின் எழுத்தனுபவம் எத்தனை மகத்தானது' என்று அன்றுதான் உணர்ந்தேன். கட் டுரை தன்னைத்தானே எழுதிக்கொண்டது என் றுதான் சொல்ல வேண்டும். மனதின் ஏதோ ஒரு மூலையில் திறக்கப்படாத அறையைத் திறந்தது போல், அம்மா பற்றிய செய்திகளும் நினைவுகளும் கொட்டின, கட்டுரை வடிவில். அச்சுக்கு உடனே கொடுத்துவிட்டேன். ஆனால், அடுத்த இரண்டு நாட்களில், என் அம்மா உலக வாழ்க்கைப் பய ணத்திலிருந்து விடை பெற்றுக் கொண்டாள்.

நான் அம்மாவுக்குச் சொன்ன நன்றியாக ஆகி விட்டது அந்தக் கட்டுரை. 'நேரில் நின்று... பேசும் தெய்வம்' என்று 'அவள் விகடன்' இதழ் கொடுத்த கட்டுரைத் தலைப்பு, காலங்களைத் தாண்டி என் நினைவில் உறைந்து நின்றுவிட்டது; அம்மாவின் ஞாபகங்கள் போலவே...

*********

'நீ நதி போல ஓடிக்கொண்டிரு...' தொடர் வந்த காலங்களில் எனக்கு எத்தனையோ தரிசனங்கள்...

'எங்க ஆபீஸ் லன்ச் ரூம்ல பேசினது உங்களுக்கு எப்படித் தெரியும்?', 'என் பொண்ணு இதேதான் சொல்லுவா', 'என் மருமகளைப் பத்தி சரியா எழுதிட்டீங்க, இன்னும் கூட கொஞ்சம் புத்தி சொல்லியிருக்கலாம்...' என்று ஏகப்பட்ட பெண்கள் என்னோடு பேசிக்கொண்டே இருந்தார்கள்.

அதுமட்டுமல்ல, கட்டுரை எழுத எனக்கு களம் அமைத்துக் கொடுத்தவர்களே பெண்கள்தானே. மாற்றுத் திறனாளி, வங்கிக்கு வந்த வாடிக்கையாளர், சக ஊழியர், பள்ளி/கல்லூரித் தோழியர்... மொத்தத்தில், தெவிட்டாத தரிசனங்கள்தான்! தொடரின் பயணத்தில் நான் அறிந்து கொண்ட விஷயம், 'பெண் என்பவள் பிரமாண்டமானவள்' என்பதைத்தான். காலமே, ஒரு நதி போல அவளின் காலடியில் தான் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த நதியாகவும், அதில் மிதக்கும் சருகாகவும், ஆங்காங்கே துள்ளும் மீனாகவும், அதில் கல்லெறியும் கரையோரத்துச் சுட்டியாகவும்... அனைத்துமாக வியாபித்து நிற்பவள் அவளே. என்னைப் பெண்ணாக்கிய இயற்கைதான் எத்தனை கருணையுடையது!

- பாரதி பாஸ்கர்

# 1. வீடு பாராட்டாவிட்டாலும், நேசிக்கிறது!

சரோ என் பள்ளித் தோழி. ஒரு மாலை வேளையில் சென்னை, மவுன்ட் ரோட்டில் அவளைச் சந்தித்தபோது, அந்த சந்தோஷத்துக்கு இன்னும் கொஞ்சம் ஆயுள் கொடுப்பதற்காக, 'சற்று நேரம் பேசிக் கொண்டிருக்கலாமே' என்று இருவரும் ஸ்பென்சர் பிளாசாவுக்குள் நுழைந்தோம். போன இடத்தில் என் அலுவலக மேலதிகாரி ஒருவரைச் சந்தித்தோம்.

அமெரிக்கரான அவர், என்னைப் பார்த்து 'ஹாய் சொல்ல... பதிலுக்கு நானும் சொல்லிவிட்டு, என் தோழியை அறிமுகப்படுத்தினேன்.

உடனே அவர், "உங்கள் உடை மிக அழகாக உள்ளது" என்றார் சரோவைப் பார்த்து. மெஜந்தா நிறத்தில் கறுப்பு பார்டர் போட்ட பட்டுப் புடவை கட்டியிருந்தாள் சரோ. புடவை நிஜமாகவே நன்றாக இருந்தது என்பதும், எதையும் பாராட்டுகிற அமெரிக்கர்களின் வழக்கமும் மட்டுமே நடந்த சம்பவத்துக்குக் காரணம்.

ஆனால், மேலதிகாரி போய் வெகுநேரம் ஆன பின்பும் சரோ சகஜமாகவில்லை. பேச்சிலும் கலகலப்பு இல்லை. "என்ன ஆச்சு சரோ..?" என்று துளைத்த பிறகு சொன்னாள்.

"உன் பாஸ் பாராட்டினப்போ ஒரு தேங்க்ஸ்'கூட சொல்ல முடியல என்னால..."

"ஆமா, கவனிச்சேன். 'தேங்க்ஸ் சொல்லியிருக்க லாம்ல..."

"இல்ல... யாரும் பாராட்டியே பழக்கமில்லையா... அதான் என்ன சொல்றதுனே தெரியல..." என்றாள் சரோ.

அன்று இரவு எனக்குத் தூக்கம் வர ரொம்ப நேரம் ஆனது. 'யாரும் பாராட்டியே பழக்கமில்லையா...' என்று சொன்னது 'ஒரு' சரோதானா..? அங்கீகா ரத்துக்கு ஏங்கும் ஆயிரம் சரோக்கள், கமலாக் கள், ஃபாத்திமாக்கள், ஸ்டெல்லாக்கள்... நம்மு டன் கலந்திருக்கிறார்கள்.

அங்கீகாரத்துக்கான ஏக்கம் ஆண்களின் குரோ மோசோம்களை விட, பெண்களின் குரோமோ சோம்களில் அதிகம் என்று விஞ்ஞானம் சொல்கி றதாம். உண்மையாகத்தான் இருக்க வேண்டும்.

"ஏங்க... புதுப் புடவை எப்படியிருக்கு?"

"புதுசா... சூப்பர்!"

கணவர் கண்களால் புடவையைப் பார்த்துச் சொன்னாரா, இல்லை இந்த உரையாடலை இதைவிடச் சீக்கிரம் முடிக்க வேறு வழியில்லை என்று சொன்னாரா என்பது... கடவுளுக்கே வெளிச்சம்!

“இன்னிக்கு ரசத்துல ஒரு சேஞ்ச் இருக்கே... தெரி யலையா?"

"அப்படியா... எனக்கு எப்பவும் போலத்தான் இருந்தது..."

தோழி சொன்ன புதுவித ரெசிபிப்படி பருப்பு வேகப் போடும்போதே தக்காளியையும் பூண்டையும் கூட வேக வைத்து, மொத்தமாக மசித்து, புளித் தண்ணீரில் கொதிக்க வைத்து, சீரகம், மிளகுப்பொடி போட்டு, கடுகு தாளித்து... 'எப்பவும் போல இருந்தது' க்காகத்தானா இத்தனை பாடு..!

எப்போதோ நேரம் கிடைத்து பியூட்டி பார்லரில் போய் செய்து கொண்ட கூந்தல் சீரமைப்பு, ஒரு ரசனையில் வாசலில் மலர்ந்த மயில் கோலம், ஏதோ ஒரு புக்கைப் பார்த்துச் செய்த ஸ்பெஷல் அடை - அவியல் டிபன், பார்த்த உடனே பிடித்து வாங்கிய ஒரு பச்சை கலர் சில்க் காட்டன், அலுவலகத்தில் வாங்கிய ஒரு பரிசு... எதுதான் முழுதான நிறைவைத் தரும்... வீட்டில் உள்ள நெருங்கியவர்களின் பாராட்டு படியாதபோது?!

'பெண்களின் குரோமோசோம்களில் பாராட்டு எதிர்பார்க்கும் குணம் அதிகம்' என்று வேலை மெனக்கெட்டு கண்டுபிடித்தவர்கள், 'ஆண்களின் குரோமோசோம்களில் பாராட்டும் உணர்வு கம்மி' என்றும் கண்டுபிடித்திருக்கலாமோ?

'அன்றாடம் பார்க்கும், உணரும் விஷயங்களுக்கு என்ன பாராட்டு வேண்டியிருக்கிறது' என்பது ஆணின் எண்ணம். 'ஒரு வார்த்தை, ஒரு சிரிப்பு, ஒரு துளி அங்கீகாரம்...' என்று ஏங்குவது பெண்ணின் மனம். இந்த இரண்டுக்கும் நடக்கும் கண்ணுக்குத் தெரியாத போராட்டத்தில் தோற்றுக்

கருகி, குமைந்து, வெம்பி, கசப்புத் திரண்ட மன சாகிவிடுகிறது, பெண் மனசு. அந்த நிலையிலேயே ஊறிக் கிடக்கும் மனசுக்கு, யாராவது எதேச்சை யாக பாராட்டினால் கூட என்ன சொல்வது என்று தெரியாமல் போகிறது, சரோவைப் போல!

'ஆமா. சரோ மாதிரிதான் நானும்...' என்று சொல் லும் என் தோழியே... உன் கையைக் கொடு கொஞ்ச நேரம். கை குலுக்கிப் பாராட்டுகிறேன். உன் ரசனை, உன் ஆர்வம், மாக்கோலம் போடு வது போல நீ அழகாக வேலை செய்யும் நேர்த்தி, உன் டிரெஸ் சென்ஸ்... எந்தத் திறமையோ அதை, அதற்குப் பின்னால் இருக்கும் உன்னை வியக்கி றேன்; ரசிக்கிறேன்.

ஆனால், பாராட்டுகளைக் பெற்றுக்கொள்ளும் போதும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நுட்பம் சிலதும் இருக்கின்றன. வீட்டில் கிடைக் காத பாராட்டு வெளியில், குறிப்பாக மற்ற ஆண் களிடம் கிடைக்கிறதா? மனது அதை விரும்பத் தான் செய்யும். 'போதும்' என்று மனதை அதட்டும் தைரியம், அவசரத் தேவை. 'மேடம், நீங்க மஞ்சள் கலர் புடவை கட்டினா அந்த காலத்து ஸ்ரீதேவி மாதிரி இருக்கீங்க' என்று சொல்லும் ஆணிடம் நாம் சொல்ல வேண்டியது, ஒரு 'தேங்க் யூ' மட்டுமே. நிச்சயமாக 'போங்க சார், பொய் சொல்லாதீங்க' இல்லை.

இந்த ஏக்கங்கள், பாராட்டுகளை தாண்டிய இன் னொரு பக்குவமும் இருக்கிறது. 'ஓவியன் வான்கா, கவிஞன் பாரதி ஆகியோருக்கெல்லாம் கிடைக்

காத அங்கீகாரம், நமக்கு கிடைக்காததா பெரிசு?" என்று யோசித்தால், மனசு லேசாகி விடும்தானே?

ஆம்... 'அங்கீகாரம் இல்லை ' என்ற ஏக்கம் பெண்களின் தனிச் சொத்து இல்லை. யோசித்துப் பார்த்தால் மனித குலத்தின் மிகப்பெரிய ஏக்கம் அது தான்.

பக்கத்து வீட்டுக் கோலம் நன்றாக இருந்தால், காலிங் பெல் அடித்துப் பாராட்டலாம். 80 மார்க்குடன் வரும் குழந்தையிடம் 'குட். இதை விடவும் அதிகமாக வாங்க உன்னால முடியும்' என்று சொல்லி அதன் விழிகளின் வெளிச்சத்தை ரசிக்கலாம். நமக்குக் கிடைக்காத ஒன்றைக்கூட நாம் மற்றவருக்குக் கொடுக்க முடியும் என்பதுதானே வாழ்வின் சுவாரஸ்யம்!

வீடு பாராட்டாவிட்டாலும், நேசிக்கிறது. ஓர் ஆபத்து என்றால் பதறுகிறது. இதுவே சுகம்! மனித வாசனையே இல்லாத இடத்தில் பூக்கும் பூக்கள், 'எங்கள் அழகை யாரும் ரசிக்கவில்லையே' என்று மலராமலும், அடர்வனத்தின் மையத்தில் புரளும் நதிநீர், 'யார் இருக்கிறார் இங்கு நம்மை அள்ளிப் பருக" என்று சலசலக்காமலுமா இருக்கின்றன? அந்த மலர்களைப்போல, நதியைப்போல நம்மால் இருக்க முடியாதா என்ன?!

# 2. கயமை

சாமியார் சர்ச்சை ஒன்று நடந்தது. ஸ்பெஷல் காட்சிகள், செய்தித் தொகுப்புகள், சமாதி நிலையில் இருந்ததாகச் சொல்லப்பட்ட சமாதானங்கள், பேரங்கள் என்று நீண்டுகொண்டே போன இந்தப் பிரச்னைக்கு சில நாட்களில், ஒரு கட்டத்தில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனால், அதன் பிறகும் ஒன்று மிச்சமிருக்கும். அது, சம் பந்தப்பட்ட பெண்ணுக்கு நேர்ந்த அவமானம்!

அரசியல் சச்சரவோ, ஆன்மிகப் பரபரப்போ... அடிபடுவதும், அலசப்படுவதும், அவமானப்படுவதும் இங்கு எப்போதுமே பெண்தான். சம்பந்தப்பட்ட பெண் செய்தது சரியா, தவறா - அது வேறு விஷயம். ஆனால், குறிவைக்கப்படுவது யாருக்காக இருந்தாலும், அதிகம் பொசுங்கிப்போவது பெண் என்பது சுடும் நிஜம்.

நான் முன்பு குடியிருந்த அடுக்குமாடி வீட்டில், கோபாலன் என்பவர் இருந்தார். கொரியர் கொடுக்கும் பையனுக்கும் அவருக்கும் எப்போதும் சண்டை வந்து கொண்டே இருக்கும். ஒரு கட்டத்தில், அவன் வேலை செய்த கம்பெனிக்கு தொலைபேசி மூலம் ஒரு புகார் அளித்துவிட்டார் கோபாலன். அடுத்த நாளிலிருந்து அவனைக் காணவில்லை.

ஆனால், மூன்று நாள் கழித்து, அவர் வீட்டுக்குப் போகும் மாடிச் சுவரில் பளிச்சென்று நீல நிறப்

பெரும் எழுத்துகளில் அவர் மனைவியின் பெயரெழுதி, வக்கிரமான ஆபாச வார்த்தை ஒன்று எழுதப்பட்டிருந்தது. பதறி ஓடி, சுவரில் வெள்ளையடித்து கோபாலன் அதை மறைப்பதற்குள் குடியிருப்பு வாசிகள் அனைவரும் அதைப் படித்துவிட்டனர். வழக்கம்போலவே, 'குட்டி மாநாடு' போட்டு காரண காரியங்களை விவாதித்தனர். எழுத்துக்கூட்டிப் படித்த சிறு குழந்தைகள், "அப்படினா என்ன?" என்று அம்மாக்களிடம் கேட்டு, "படிக்கிற வேலையைப் பார்" என்று பதில் பெற்றார்கள்.

சண்டை யாருக்கும் யாருக்கும்? இதில் சம்பந்தமில்லாத கோபாலனின் மனைவி எப்படி டார்கெட் ஆனார்? இங்கு மட்டுமா? எப்போதுமே ஓர் ஆணைத் திட்டுவதற்கு, காட்சியிலேயே இல்லாத அவனின் தாயோ, சகோதரியோ, மனைவியோ சம்பந்தப்படுத்தப்படுவது எவ்விதம்? அது சரி... ஆணை அவமானப்படுத்த உருவாக்கப்பட்ட திட்டு வார்த்தைகளில், அவன் வீட்டுப் பெண்களை இழிவு செய்யும் வார்த்தைகள் இல்லாத மொழிகள் ஏதாவது உலகில் உண்டா என்ன?

ஓர் அலுவலகத்தில் ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் புரமோஷன் வந்தது. அது பொறுக்காத சக ஊழியர்களின் ஆணைப் பற்றிய பேச்சு... "அவனுக்கென்ன காக்கா பிடிச்சே வாங்கிட்டான்!". பெண்ணைப் பற்றிய பேச்சு... 'காக்காய் பிடித்தாள்' என்று நீங்கள் யூகித்தால் உங்களுக்கு சைபர் மார்க். எதிர்பார்க்கக்கூடிய கமென்ட்... "இதெல்லாம் எப்படி புரமோஷன் வாங்கிச்சுனு தெரியாதா என்ன..?"

மார்க்கெட்தோறும் கொட்டிக் கிடக்கும் காய்க நிகளோடு பெண் உடலைச் சம்பந்தப்படுத்தும் 'கருத்து நிறைந்த சினிமாப் பாடல்கள், அலுவ லக பாத்ரூம்களில் எழுதப்படும் கதைகள், கார்ட் டூன்கள், பிடிக்காத பெண்ணின் மொபைல் நம் பரை தவறாக வெப்சைட்டில் விளம்பரப்படுத்தும் கயமைகள்... என்று காலந்தோறும் இந்த அவமா னங்களுக்கு எத்தனை வடிவங்கள்? இன்று நேற்று நடப்பதா என்ன?

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி - இந்தியாவின் முதல் பெண் மருத்துவர். அவர் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தபோது, இவர் மட்டுமே பெண் என்பதால் 'உடன் படிக்கும் ஆண் மாணவர்களின் கவனம் கலையும்; மனம் கெட்டுவிடும். அதனால் முத்து லட்சுமியை கல்லூரியில் இருந்து நீக்க வேண்டும்' என்று மாணவர்களின் பெற்றோர் மனு கொடுத் திருக்கிறார்கள். அப்போது டீனாக இருந்த ஓர் ஐரோப்பியர், "கவனம் கலைகிற மாணவர்கள் வீட் டில் இருக்கட்டும். இந்த ஒரு மாணவி படித்தால் போதும்" என்று சொல்லியிருக்கிறார்.

இந்தச் சம்பவத்தைப் பற்றிப் படித்ததில் இருந்து, என் மனதில் ஒரு காட்சி அடிக்கடி விரியும். நீண்ட தலைப்பு வைத்த புடவையும், எண்ணெய் தடவி அழுந்த வாரிய தலைப் பின்னலுமாக தனியே ஒரு பெண் படித்துக் கொண்டிருக்க, பலர் பார்த்துப் பார்த்து கேலி செய்யும் காட்சி. எளிமையாகவும், பலம் அற்றவளைப் போலும் காட்சி தரும் அந் தப் பெண், இதற்கெல்லாம் அசராமல் தொடர்ந்து பறந்து சிகரம் தொடும் காட்சி. ஆம்! அவமானம், கேலி என்று காலில் தைத்த முட்களைப் பற்றிக்

கவலையில்லாமல் முத்துலட்சுமி ரெட்டி போன்றவர்கள் அன்று நடந்த நடைதான், பின்னால் வந்த நமக்குப் படிக்கப் பாதை அமைத்தது, இல்லையா?

என்ன பெரிய அவமானம்? அது என்ன தூக்க முடியாத பெரும்பாரமா அல்லது விழுங்க முடியாத களிமண் உருண்டையா? யார் அசுத்தம் செய்தாலும், கழிவுப் பொருட்களைக் கலந்தாலும் நதிகள் அதைத் தாங்கி ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன. 'ஐயையோ, அசுத்தம் ஆகிவிட்டேனே' என்று நதி நின்று விட்டால், அது நாற்றம் பிடித்த குட்டையாகிவிடும். சுடும் வரைதான் சூரியன் என்பது போல, ஓடும் வரைதான் நதி.

ஒன்றை நினைவு கொண்டால் போதும். விடியாத இரவென்று ஏதுமில்லை. விடுதலையாக முடியாத அவமானம் என்று எதுவுமேயில்லை.

இரண்டு நாள் வீட்டுக்குள் அடைந்து, அழுது கொண்டிருந்த கோபாலனின் மனைவி கல்பனாவை மூன்றாம் நாள் நானே தேடிப்போய்ப் பார்த்தேன்.

"சுவர்ல எவனோ எழுதினதுக்காகவா வீட்டுக்குள்ளே அடைஞ்சு அழறீங்க?"

"என் விதி. இனிமே நான் எப்படித் தெருவுல தலை காட்ட முடியும்?" - மீண்டும் பெருங்குரலெடுத்து, முகத்தில் அறைந்து அழ ஆரம்பித்தார்.

"உங்களுக்கு 40 வயசா? மொத்த ஆயுசு 80 வருஷம்னு வெச்சுக்கங்களேன். இன்னும் 40 வருஷம்

வெளியே போகாம வீட்டுக்குள்ளே அழப் போறீங்களா?"

கல்பனா அதிர்ந்தாற்போலப் பார்த்தார்.

"என்னிக்காவது வெளியே வந்துதானே ஆகணும் கல்பனா. அதை ஏன் இன்னிக்குச் செய்யக்கூடாது'? என்ன, உங்க முதுகுக்குப் பின்னாடி, 'இவங்களைப் பத்திதான் சுவர்ல எழுதியிருந்ததுனு எவனாவது பேசுவான். அதுதானே பயம்? 'ஆமாம், என்னைப் பத்திதான் எவனோ கிறுக்கினான்'னு பதில் சொல்லலாம் கல்பனா" என்றேன். அவரிடமிருந்து பதிலே இல்லை.

இரண்டு நாள் கழித்து வெளியே வந்தார். என்னைப் பார்த்துச் சிரித்தார். அந்தச் சிரிப்பில் உயிர் திரும்பப் பூத்திருந்தது!

# 3. மௌன வாழ்த்து!

எங்கள் காலனியில் பக்கத்து வீட்டுப் பெண் உஷா. ப்ளஸ் ஒன் மாணவி. என் மகள் அவளைவிட ஆறு வயது சிறிய வள். ஆனால், இந்த இரண்டும் தான் ஜோடி கட்டி ஆடும்... ஓயாத விளையாட்டு, ஒன்றாகக் கதைப் புத்தகம், இடையிடையே அடிதடி என்று!

ஒருநாள் உஷாவிடமிருந்து எனக்கு போன். "ஆன்ட்டி... உங்ககூடப் பேசணும். இப்போ வரவா?" என்றாள்.

'இரண்டு பேருக்கும் ஏதாவது சண்டையாக இருக் குமா... சமாதானம் செய்யும் நடுவர் வேலையோ..?' என்றெல்லாம் கணக்குப் போட்டபடி வரச் சொன் னேன்.

என் பெண்ணைக் கேட்கிறேன் - "என்னம்மா விஷ யம்? எதுக்கு என்னைப் பார்க்க வர்றா?"

"அவளே சொல்லுவாம்மா" - சஸ்பென்ஸ் வைக்கி றாள் இவள்."

"டென்த்ல நல்ல மார்க் வாங்கினதுனால சிங்கப் பூர் யூனிவர்சிட்டியில் எனக்கு இடம் கிடைச்சிருக்கு ஆன்ட்டி... ஸ்காலர்ஷிப்போட மூணு வருஷ டிப் ளமோ முடிச்சா அங்கேயே வேலை. நாளைக்குக் கிளம்பணும்" என்கிறாள் உஷா.

எனக்குக் கண்ணில் நீர் முட்டுகிறது. 'இந்தக் குழந் தையா... அவ்வளவு தூரமா?'

"ஏம்மா... அம்மா, அப்பா, ஃப்ரெண்ட்ஸ் எல்லாரை யும் விட்டுட்டா?"

"என்ன ஆன்ட்டி செய்றது? என்னோட ஃபியூச்ச ருக்கு அதுதானே நல்லது!" என்ற உஷா, பை' சொல்லிப் போகிறாள். "படிக்கறதுக்காக உஷா சிங் கப்பூர் போறாம்மா... ஜாலியோ ஜாலி!" என்கிறாள் என் பெண்.

இரண்டும் அழுதிருந்தால் கூட கொஞ்சம் ஆறு தலாக இருந்திருக்கும் போல என்று எனக்குத் தோன்றிய நிமிடத்தில்... பிரபல எழுத்தாளர் அமரர் தி. ஜானகிராமனின் 'தீர்மானம்' கதை நினைவுக்கு வந்தது. பல காலம் முன்பு எழுதப்பட்ட கதை. குழந்தைத் திருமணம் செய்விக்கப்பட்ட பத்து வய துச் சிறுமி ராதை. கணவன் வீட்டுக்குப் போகாமல் அப்பா வீட்டிலேயே ஜாலியாக சோழி விளையாடிக் கொண்டு இருக்கிறாள். காரணம், அப்பாவுக்கும் கணவன் வீட்டு மனிதர்களுக்கும் சண்டை.

ஒருநாள் அப்பா வெளியே போயிருக்கும்போது, அவளை அழைத்துப் போக கணவன் வீட்டு உற வினர்கள் வந்து விடுகிறார்கள். "உடனே வராவிட் டால் பிறகு சேர்க்கமாட்டோம்" என்கிறார்கள்.

"அவள் எவ்வளவு சின்னப் பெண்... அவளுக்கு என்ன தெரியும். அவள் அப்பா வந்தபிறகு பார்க் கலாம்..." என்று ராதையின் அத்தை சொல் லிக் கொண்டிருக்கும் போதே, தன் சாமான்களை மூட்டை கட்டிக்கொண்டு அவர்களோடு கிளம்பி விடுகிறாள் ராதை. “இந்த வயசிலே என்ன தீர் மானம்! இனிமே தனக்கு அந்த வீடுதான்னு

சோழியைக்கூட விட்டுட்டுப் போயிடுத்தே" என்று அத்தை அதிசயிக்கிறாள்.

சிங்கப்பூர் போகும் உஷாவும், புருஷன் வீடு போன ராதையும் இரண்டு வேறு யுகங்களின் பிரதிநி திகள் மாதிரித் தோன்றும். ஆனால், இருவரும் ஒன்றுதான்! எதையும் உதறிவிட்டு, எது எதிர்கால பத்திரமோ, அதை நோக்கித் தீர்மானத்தோடு பய ணிப்பதுதான் இரண்டு பேரின் இயல்பு. சொல்லப் போனால் பெண்மையின் இயல்பு. இங்கே மாறிப் போனது - 'புருஷன் வீடுதான் எதிர்காலம்' என்கிற நம்பிக்கை. இனிமேல் 'நல்ல வேலைதான் எதிர் காலம்' என்று இந்தத் தலைமுறைப் பெண்கள் நம்ப ஆரம்பித்துவிட்டார்கள்.

போன தலைமுறையின் பத்தொன்பது, இருபது வயதில் என்ன கனவு இருந்திருக்கும்? கம்பீர மான கணவன், அவன் தோளில் தலை சாய்க்கும் இனிமைகள், ஆபீஸ் விட்டு வரும்போது அவன் வாங்கி வரும் மல்லிகையின் வாசம், இனிமை யான இரண்டு குழந்தைகள். இன்றைய பெண் ணுக்குக் கனவு இதுவல்ல. சரியான வேலை, சௌகரியமான சம்பளம். அதுவரை ஆண் ஒரு வீண் தொல்லை. காதலிக்க சந்தர்ப்பம் இருந்தால், பார்க்கலாம்... பழகலாம். முடியாவிட்டால் பரவா யில்லை, பிரிந்தாலும் பிரச்னையில்லை. 'காதல், பெரிசு; சுதந்திரம், அதைவிடப் பெரிசு; வேலை, இவை அனைத்தையும்விடப் பெரிசு.'

இதுதான் அவர்களின் நிலைப்பாடு என்றால், இன் னொருபுறம், இவர்களின் அம்மாவாக இருப்பது சவால்களில் எல்லாம் பெரிய சவால்.

"ஏய், என்னம்மா... துப்பட்டா எங்கே?"

"ஐயோ அம்மா... இது குர்த்தி. இதுக்கு மேலே துப் பட்டா போட்டா, தெரு நாய்கூட என்னைப் பார்த் துத் திருப்பிக்கிட்டு போகும்."

தெரு நாய்களுக்கெல்லாம் தெரிந்தது நமக்குத் தெரியாமல் போனதே என்று வருத்தப்படுவதா, இல்லை... 'போய் மாத்திட்டு வா' என்று நேற்று நம் அம்மாக்கள் கர்ஜித்தது போல சத்தம் போடுவதா... என்ன செய்வது?

"அம்மாவுக்கு முடியலம்மா. இன்னிக்கு ஒருநாள் பாத்திரம் விளக்கித் தர்றியா?"

"நான் பல்லு விளக்கறதே ஜாஸ்தி. பாத்திரமெல் லாம் விளக்க முடியாது. சாரி!"

பேச்சில் கொப்பளிக்கும் குறும்பை ரசிப்பதா... இல்லை, பொறுப்பைத் தூக்கி எறியும் தன்மை யைக் குறை சொல்வதா... என்ன செய்வது?

"ஏம்மா... இந்த சப்பாத்தி, பனீர் மசாலா இப் படி எல்லாம் உலகத்திலே பேசிக்கறாங்களே.. அப்படினா என்னம்மா? (இதை, சிம்மக்குரலோன் சிவாஜி கணேசனின் 'என்னம்மா' பாணியில் படிக் கவும்) உப்புமாவும் இட்லியும் தவிர வேறு ஏதாவது வைன்னு, நான் சொல்லலம்மா. என் டிபன் பாக்ஸ் அழுவுது..."

ஐந்து மணிக்கு எழுந்து மாங்கு மாங்கென்று ஒருத்தி சமைத்தால், அவள் மீது வீசப்படும் கேலியை மென்று தின்பதா... பளாரென்று கன்னத்

தில் வைப்பதா... என்ன செய்வது? மேலே மேலே போ என்று இவர்களைப் பறக்க அனுமதிப்பதா... அல்லது பார்த்துப் போ என்று வேகத்தடை போடு வதா? என்ன செய்வது?

ஏதோ ஒரு சாதனை இலக்கைத் தொடப் போகி றார்களே... அதற்காக எது எதையோ இழக்கிறார் களே, இலக்கை அடைந்த பிறகு, அடைந்தது சிறு சாயும், வழியில் இழந்தது பெரிசாயும் இவர்களுக்கு ஒருவேளை தெரிந்தால்... என்ன செய்வது?

இப்படி அடுக்கடுக்கான என்ன செய்வது?'கள்தான் இன்றைய அம்மாக்களின் கவலைகள்.

இதற்கு நடுவில் இலவசமாகக் கிடைக்கிற அறிவு ரைகள் வேறு... 'கண்டிப்பையும் கனிவையும் சேர்த் துதான் பெண் குழந்தைகளை வளர்க்கணும்' இத் யாதிகள். இந்த சமையல் குறிப்பில் எத்தனை ஸ்பூன் கனிவு, எத்தனை ஸ்பூன் கண்டிப்பு என்று யார் சொல்வார்கள்?

ஐ.பி.எல். ஆட்டங்களுக்கு நடுவே, இடுப்பின் கீழ்ப் புறம் டாட்டூ போட்டுக் கொண்டு, அதை அம்மாவி டம் காட்டும் பெண் பற்றிய ஒரு விளம்பரம் வருமே... 'அந்த இடத்தில் போய் இத்தனை பெரிய டாட்டு வைப் போட்டுக் கொண்டாளே...' என்ற அருவருப் பும், அதிர்ச்சியும், கோபமும் பரவினாலும், உடனே அதை மாற்றிக் கொண்டு, 'வெரி நைஸ்' என்று சொல்கிறாள் அந்த அம்மா. 'நீங்கள் விரும்புவ தையே கேளுங்கள்' என்று மகள்களிடம் சொல்கி றது அந்த விளம்பரம். நான் அம்மாவைப் பார்க் கிறேன். 'அட அசடே! அவள் விரும்புவதையெல்

லாம் சொல்ல நீ என்ன ரேடியோவா? நீ நினைத் தவதை எப்போது அவளிடம் பேசப் போகிறாய்?'

இதே அம்மா புத்திசாலியென்றால், அப்போது 'வெரி நைஸ்' என்றாலும், இரவுச் சாப்பாடு எல் லாம் முடிந்தபிறகு, பெண்ணின் பக்கத்தில் உட் கார்ந்து, அவள் தலையை மடியில் சாய்த்து, "இந்த டாட்டு சூப்பர்டா. ஆனா, இதைப் போட றது ஸ்கின்னுக்கு நல்லதில்ல. தேவையில்லாத இன்ஃபெக்ஷன் வரும். அதுவும் தவிர, இந்த இடத் திலே டாட்டு போட்டு, டாட்டு தெரிய ஜீன்ஸை இறக்கிப் போட்டு... எதுக்குடா? உன்னைப் பாக் கறவங்க, 'காலேஜ் செமஸ்டர்ல நிறைய மார்க் வாங்கின பொண்ணுனு அடையாளம் சொல்ல ணும். 'பின்னால டாட்டு போட்ட பொண்ணு'னு சொன்னா... அவ்வளவு நல்லாயில்ல பாரு... இனிமே வேணாம். ஓகேயா..." என்று பேசியிருப் பாள்.

இதுதான் உத்தி! பிடிக்காததை பெண் செய்யும் போது உடனே கத்தி, ஆர்ப்பாட்டம் செய்து, 'என் பேச்சை இந்த வீட்ல யாரு கேக்கறாங்க'வில் முடிக் கும் அம்மாக்கள் இங்கு ஜெயிக்கவே முடியாது. ஆறப்போட்டு, தனியாகப் பேசி, 'நீ சாதிக்கப் பிறந் தவள்' என்று நினைவூட்டினால் மட்டுமே இந்தத் தலைமுறைப் பெண் குழந்தைகளை வழி நடத்து தல் சாத்தியம்.

நம் பாட்டிகளும், நம் அம்மாக்களும், நாமும் நடந் தோம், கொஞ்சம் ஓடினோம், தாவ முயற்சித்தோம். அதோடு நின்று விட்டோம். நம் பெண்கள் பறக்க வேண்டி இருக்கிறது. அவர்கள் முன் வாய்ப்புகள்

எனும் வானம் விரிந்திருக்கிறது. அவர்கள் பறக்கட்டும்.

மலையில் பிறக்கும் எந்த நதியும் மலையின் பத்திரமான மடியைத் துறந்து, குதித்து ஓடுவது தான் இயற்கையின் சட்டம். அப்படி ஓடும் நதிகளின் பாதையில் எந்தக் குறுக்கீடும் இல்லாமல் இருக்க, கம்பீரமாகவும் மௌனமாகவும் வாழ்த்திக்கொண்டு இருக்கும் மலைகள்தான் அம்மாக்கள், இல்லையா?

# 4. 'ஷட் அப் அண்ட் மூவ் ஆன்'

ஒரு ஞாயிற்றுக் கிழமைப் பொழுது, ஃபிரிட்ஜையும் ஹேண்ட்பேக்கையும் ஒழித்து வைக்கிற பொழுதாக மலர்ந்தது.

ஒரு நப்பாசை... 'பேசாம, இன்னிக்கு விட்டுட்டு, அடுத்த ஞாயிறு பாத்துக்கலாமா..?' உடனே, இதே போல ஏற்கெனவே 37 ஞாயிறுகளைத் தள்ளிப் போட்ட ஞாபகமும், மற்றும் இந்த வாரமும் செய்யாவிட்டால் இரண்டும் வெடித்துவிடும் என்ற ஞானோதயமும் உந்தித் தள்ள, செயலில் துணிந்தேன்.

அது என்ன ஃபிரிட்ஜ் மற்றும் ஹேண்ட்பேக் காம்பினேஷன்? இரண்டுக்கும் கவித்துவமான ஓர் ஒற்றுமை உண்டு. இரண்டுமே ஒருவகையில் குப்பைத் தொட்டிகள். நம் காலால் அதன் காலை ஒரு மிதி மிதித்ததும், 'ஆ' என்றுகூடக் கத்தாமல், வாயை மௌனமாகப் பிளந்து வயிற்றை எக்கிப் பார்க்கிறதே அந்த அசல் குப்பைத் தொட்டிக்கும் இந்த இரண்டு வஸ்துகளுக்கும் உருவ ஒற்றுமை இல்லாமல் போகலாம். உபயோக ஒற்றுமை உண்டே! இவை இரண்டிலும் என்னென்ன இருக்கக்கூடும் என்று நாம் நினைப்போமோ... அதைவிடக் கூடுதலாக இன்னும் என்னென்னவோ இருக்கும்.

முந்தாநாள் காலை செய்த சட்னியின் பாதியைத் தூக்கிக் கொட்ட மனசு வராமல் உள்ளே வைத்தோமே, நாசமாய்ப் போன ஞாபக மறதியில் இரவு

திரும்பவும் சட்னி அரைத்தோமே... அது இருக்கும். மகன் பாதி பூஸ்ட் குடித்துவிட்டு 'போறும்' என் றானே, 'பாக்கியை என் தலையிலே கொட்டு' என்று சொன்னோமே, நம் தலையில் கொட்டுவதற்குப் பதிலாக ஃபிரிட்ஜில் வைத்தானே... அது இருக்கும். இவை தவிர, இரண்டு அழுகிய பச்சைமிளகாய், பாதித் தக்காளி, குளுமை தேடி உள்ளே நுழைந்த சில கட்டெறும்புகள்... இவையும் லிஸ்டில் உண்டு.

ஹேண்ட்பேக் கதை இன்னும் பரிதாபம். என்றோ வாங்கி, எதற்கும் இருக்கட்டும் என்று போட்டு வைத்த தலைவலி மாத்திரைகள் (நல்லவேளை... காலாவதியான மருந்துகளைக் கடை கடையாகத் தேடும் அரசாங்க அதிகாரிகள் யாரும் இன்னும் லேடீஸ் ஹேண்ட் பேக் செக்கிங் வரவில்லை), எப்போதோ விமானப் பயணம் செய்தபோது பணிப் பெண் கொடுத்த புளிப்பு மிட்டாய், எவர் வீட் டுக்கோ போனபோது 'வெள்ளிக்கிழமை வந்திருக் கிறாளே' என்று அவர்கள் கொடுத்த வெற்றிலை யும் மஞ்சளும், அந்த மஞ்சள் மகிமையில் தாமும் மஞ்சள் குளித்த பெண் போல இருக்கும் மகாத்மா கொண்ட ரூபாய் நோட்டுகள், அவசரத்துக்கு இருக்கட்டும் என்று போட்டு, ஆனால்... எந்த அவ சரத்துக்கும் கிட்டாத ஸேஃப்டி பின்கள், ஸ்டிக்கர் அட்டை, டஜன் பேனாக்கள்... அப்பப்பா! எத்தனை எத்தனை பொருட்கள்!

ஃபிரிட்ஜையும் ஹேண்ட் பேக்கையும் சரி செய்து, முதுகு வலியும் மூட்டு வலியும் போட்டுத் தள்ள, மெதுவாக நிமிரும்போது... வாராது போல வந்த மாமணியாம் ஞாயிறு காலை மறைந்து, பகலெல்

லாம் போயோடி, மாலை மலர்ந்து திங்களின் கத வைத் தட்டிக் கொண்டிருக்கும்.

ஒரே கதவு அல்லது ஒரு ஜிப் கொண்ட, அன் றாடம் நூறு முறை திறக்கப்பட்டும், மூடப்பட்டும் உபயோகத்தில் இருக்கும் குளிர்சாதனப் பெட்டிக் குள்ளும், ஹேண்ட்பேக்குக்குள்ளும் இத்தனைக் குப்பைகள் சேர முடியும் என்றால்... ஆயிரம் வாசல் கொண்ட, அடைப்பும் திறப்பும் இல்லாத நம் மனங் களுக்குள் எத்தனை குப்பைகள்? ஞாயிற்றுக்கி ழமை ஒழிப்பாவது கிட்டும் மேற்படி ஃபிரிட்ஜ், ஹேண்ட்பேக் குப்பைகளைவிட அவை பெருங் குப்பை பல வருஷக் குப்பை!

வயதான ஜென் குரு ஒருவரும் இளம் துறவி ஒருவரும் பயணம் போனார்கள். பாதிப் பயணத் தில் ஓரிடத்தில் நிறைய சேறு. நீளமான வெள்ளை கவுன் அணிந்திருந்த அழகான இளம் பெண் ஒருத்தி, 'சேற்றில் நடந்தால் ஆடை அழுக்காகிவி டுமே' என்று தயங்கி நிற்க... முதிய துறவி சற்றும் தயங்காமல் அந்தப் பெண்ணைத் தூக்கி, அவள் உடையில் கறையில்லாமல் மறுபக்கம் இறக்கிவிட் டாராம். பாவம்! 'கறை நல்லது' கதையெல்லாம் அப்போது அவர்கள் அறியார்கள்.

இளம் துறவி கொதித்தே விட்டான். ஒரு பெண் ணைத் தொட்டு தூக்கி... இந்த வயசான சாமியார் நம் மடத்தின் மதிப்பையே காலி செய்து விட்டாரே என்று குமைந்தான். சில நாள் பயணம் செய்து அவர்கள் தமது மடம் வந்து சேர, அத்தனை பேர் எதிரிலும் முதிய துறவியைத் திட்டித் தீர்த்தான்

இளம் துறவி. முதிய துறவி, சொற்களின் முனை முறியாமல் சொன்னார்...

"நான் அந்தப் பெண்ணை அங்கேயே இறக்கிவிட்டேனே... நீ இன்னமுமா சுமந்து கொண்டிருக்கிறாய்?"

நாமும் அந்த இளம் துறவி போல்தான், அங்கங்கே விட்டுவிட்டு வர வேண்டிய பல விஷயங்களை வாழ்வெல்லாம் சுமந்தெடுத்துச் சென்று கொண்டிருக்கிறோம். 'என் தங்கையைத்தான் நல்லா படிக்க வைச்சாங்க. அந்த அளவு என்னய படிக்க வைக்கல!', 'கல்யாணம் ஆகி வந்த மூணு வாரத்திலேயே 'நீ உன் அம்மா வீட்டுக்குப் போ'னு சொன்ன ஆளு தானே எங்க மாமியார்?', 'எங்க நாத்தனார் வீட்டுக் கல்யாணத்திலே நாலு நாள் வேலை செஞ்சேன். பந்தி பரிமாறி, வடைச் சட்டியிலே காஞ்சு, எச்சில் இலை எடுத்து... கடைசியிலே மகராசி ஒரு முந்நூறு ரூபா பெறாத கண்றாவிப் புடவையை வைச்சுக் கொடுத்தாளே... செத்தாலும் மறக்காது எனக்கு இன்ன பிற.

எங்கள் உறவுக்காரப் பெண்மணி ஒருவர் யாரைப் பார்த்தாலும், தன்னை ஏமாற்றிக் கல்யாணம் செய்து கொண்டு விட்டார் தன் கணவர் என்று மறக்காமல் சொல்வார். மில் தொழிலாளியான கணவர், 'சூப்பர்வைசர்' என்று பொய் சொல்லிவிட்டதாகப் புலம்புவார். கணவர் நிஜமாகவே சூப்பர் வைசராகி, அதற்கு மேலும் போன பிறகும் அவர் வருத்தம் தீரவில்லை. அவருக்கு வயது சுமார் எழுபது இருக்கும். ஐம்பது வருடங்களாகத் தான் ஏமாற்றப்பட்டோம் என்கிற எண்ணத்தை இத

யத்திலிருந்து எடுத்து வீச அவருக்கு முடியவே இல்லை... பாவம்.

பல்வலி வரும்போது, வலிக்கும் பல்லை நாவால் நெருடினால் இன்னமும் வலிக்கும் என்று தெரிந்தும், ஒரு தீராத இச்சையோடு நாவு போய் அதே பல்லை நெருடுவது போல்... மனதில் வலிக்கும் பகுதிகளை, என்றோ சிந்திய கண்ணீரை, யார் மீதோ இருந்த வெறுப்பை, புறக்கணிப்பை பத்திரமாக வைத்து அவ்வப்போது எண்ணத்தால் தொட்டுப் பார்த்து 'ஸ்... வலிக்குது' என்று சொல்வதில் ஒரு சுடும் சுகம் நமக்கு.

ஒரு நதி தன் போக்கைத் தானே அறிவதில்லை என்பார்கள். மனித மனமும் நதி போலத்தான்; அது தன் போக்கைத் தானே அறியாது. எந்த ரகசிய இன்பங்களை மனசு மடியில் வைத்துக் கொஞ்சுகிறது; எந்தக் குப்பைகளை எடுத்துக் கொண்டாடுகிறது என்பதை யார்தான் அறியக்கூடும்? அதேநேரம் குப்பைகளும் கழிவுகளும் மிக அதிகமாகி கூவம் மாதிரி மூச்சு நின்று போன நதியாக மனசைக் கெடுக்காமல் இருப்பது நம் கடும் முயற்சியில்தான் சாத்தியம். மனசுக்குள் இருக்கும் குப்பைகளை நீக்க, ஒரு ஜப்பானிய ஆலோசனை முறையை அங்கே இருக்கும் மனோதத்துவ மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள். 'சுமோ" (Sumo) என்று அந்த முறைக்குப் பெயர். 'ஷட் அப் அண்ட் மூவ் ஆன்' என்பதுதான் அதன் விரிவாக்கம். மனசுக்குள் இருக்கும் கசடுகளைப் போக்க ஒரே வழி, அவற்றை அப்படியே தள்ளி, யாரிடமும் ஏன் நமக்குள்ளேகூட அதைப் பற்றிப் பேசாமல், புலம்பாமல் அடுத்த வேலையைப் பார்க்கும் பயிற்சிதான் இது.

எங்கே செய்யலாமா? கண்ணை மூடலாம். மன சுக்குள்ளே என்ன கசப்பு இருக்கிறது? 'என் ஃப்ரெண்ட் என்னை இன்சல்ட் செய்துட்டா', 'பத்து வருஷம் முன்னால எங்க உறவுக்காரங்க வீட்டிலே என்னைக் கண்டுக்கல...' - இத்யாதி விஷயங்க ளைப் பொறுக்கலாம்.

ஃபிரிட்ஜிலிருந்தும், ஹேண்ட்பேக்கிலிருந்தும் வெளியேற்றிய பொருட்கள் மாதிரி இந்தக் குப்பை களையும் வெளியேற்றலாம். அப்பா, மனசு லேசா கிவிட்டதே..! நடுநடுவே திரும்ப நினைவு வந்தால்? நினைவு வந்தால் நமக்குள்ளேயே சொல்லலாம் - 'ஷட் அப் அண்ட் மூவ் ஆன்'. இப்போது தொடர்ந்து நடக்கலாம்தானே?

# 5. இளமையெனும் கூழாங்கல்லே, கூல்... கூல்!

"கல்யாணம் பண்ணிக்காத ஆன்ட்டிக்கு, குழந்தை பிறக்குமாம்மா?" என்று கேட்ட மகள் தாரிணிக்கு வயது எட்டு. கேட்டவுடன் பதறிப்போன அம்மா, எனக்கு போன் செய்கிறாள் - அவளுடைய தோழிகளில் நானும் ஒருத்தி என்பதால்.

"இப்படியெல்லாம் சின்னக் குழந்தை கேட்டா என்ன பதில் சொல்லுறதுப்பா..?"

"ரேவதி, மணி ஒன்பது. இப்போ இந்தப் பிரச்னையை அப்படியே விட்டுட்டு ஆபீஸுக்கு ஓடு. லஞ்ச் நேரத்துல உன் ஆபீஸுக்கு நான் வரேன். பேசலாம்."

ரேவதியின் அலுவலகம் என்னுடைய ஆபீஸ் பக்கத்தில்தான். மதியம் சாப்பாட்டு வேளைக்கு அங்கு போவது சுகம். லக்னோ தொடங்கி நாகர்கோவில் வரையிலான பல ஊர்களை சொந்த பூமியாகக் கொண்ட 12 பெண்கள்... சென்னை, அண்ணா சாலையின் ஓர் அலுவலகத்தின் இரண்டாம் மாடியில் வேலை செய்து, அவரவர் ஊர்களின் மழையை, வெம்மையை, அங்கு அவர்கள் வாழ்ந்த வாழ்வை சப்பாத்தியோடும் புளியோதரையோடும் சேர்ந்து அசை போடுவது பெரும் சுகம். இங்கே நான் அவ்வப்போது ஆஜராகும் விருந்தாளி.

அன்று மதியம் ரேவதியின் பெண் தாரிணி கேட்ட கேள்வி லஞ்ச் அறையில் வட்டமிட்டது.

"கேள்விக்கு நீ பதில் சொல்றது இருக்கட்டும். இந்தக் கேள்வி அவளுக்கு எப்படி வந்தது?" - இது பானு.

"ஏதோ டி.வி. சீரியல்ல பார்த்திருப்பா. எங்க மாமியார் இருக்காங்களே, ஓயாம சீரியல் பார்த்துட்டே இருப்பாங்க. 'நான் கார்ட்டூன் பாக்கணும்னு சொல்ற பேத்திகிட்ட, 'சீரியல் பார்க்கப்போறேன்னு ரிமோட் கன்ட்ரோலைக் கேட்டு சண்டை போடற பாட்டியைப் பார்த்திருக்கியா நீ?"

"ஏன் பார்க்காம? இப்போ நிறைய வீடுகள்ல இது தான் நடக்குது. குழந்தைகளுக்குக் கதை சொல்றது, நாலு நல்ல விஷயம் சொல்றது எல்லாம் கிடையாது. பாட்டியும் தாத்தாவும் பேரப் பிள்ளைகளோடு சதா ரிமோட்டுக்கு மல்லுக்கட்டுறாங்க" - சொல்வது நாகு.

'பாட்டிக்கு விட்டுக்கொடு'னு நான் தாரிணிகிட்ட சொல்லிடுவேன். இப்போ, ஸ்கூல் வேற லீவ் விட்டாச்சா... நாளெல்லாம் இவளும் சீரியல் பார்க்கறா. தேவையில்லாத விஷயங்களைப் பார்த்து தப்புத் தப்பா கேள்வி கேக்கறா" – ரேவதி ஆதங்கப்பட்டாள்.

"எங்க வீட்டுலேயும் பிரச்னைதான். ஒரே நேரம் நானும் அவரும் ஆபீஸிலிருந்து வர்றோம். 'என்னடா சிவா, இவ்வளவு சோர்ந்து போயிருக்க... காபி கொண்டு வரட்டா?"னு எங்க மாமியார் அவர்

கிட்ட ஒரே கொஞ்சல்ஸ். என்னடா, காலையில் எந்திரிச்சு, சமையல் முடிச்சு, வேலைக்கும் ஓடி, வெந்து போயி ஒருத்தி வந்திருக்காளே... அவளுக்கும் வேணுமானு கேட்டா என்ன குறைஞ்சுடும்..?" - தீபாவின் புலம்பல்.

"எங்க வீட்டுல மட்டும்... பாதி நாளு நான் வீட்டுக்கு வரும்போது என் பையன் அழுதுகிட்டு நிப்பான். 'அதோ உங்கம்மா வந்துட்டா. இனி நீயாச்சு, அவளாச்சு'ம்பாங்க. அந்த 'உங்கம்மா' அப்படியே கன்னத்தில் இடிக்கும். பேரனுக்கு நான் அம்மான்னா, அவங்களுக்கு நான் உறவில்லையா என்ன?" - இது சுஷ்மா. ராஜஸ்தான் பூமிக்காரியான அவளின் கொச்சைத் தமிழும் அவள் போலவே அழகு.

"அது தப்பு, இது தப்பு, காலையிலேயே நைட்டி போடறேன், பிரியாணி செய்யத் தெரியல, தலையில அடிச்ச மாதிரி வீட்டுக்காரர் பேரை சொல்லிட்டேன். அப்பப்பா... தப்பு, தப்பு... எல்லாம் தப்பு எங்க வீட்டுல " நசீமா கோபமாகப் பேசும்போது இரு புருவங்களும் ஒரே கோடாகவே ஆகிவிடும்.

"நான் கஷ்டப்பட்டு கையில் கால்ல விழுந்து ஒருத்தியை வேலைக்கு ஏற்பாடு செய்தா, 'என் புடவையை ஏன் வெயில்ல உலர்த்தினே? ஏன் இந்தப் பாத்திரத்துல சாம்பாரை எடுத்து வச்சே? ஏன் பூஜையறைக்குள்ள காலு வச்சே?'னு ஓயாம குத்தம் சொல்லி, போதாதகுக்கு அவ வேலை முடிஞ்சு போறப்போ மெட்டல் டிடெக்டர் இல்லாமலேயே ஸ்கேன் செய்து... அவ நாலு நாள்லயே நின்னு போயிட்டா" - இது ரேகா.

முக்கால் மணி லஞ்ச் முடிவதற்குள் முந்நூறு பிரச்னைகள். வீட்டில் இருக்கும் பெரியவர்கள் முதுமை என்னும் போர்வைக்குள் ஒளித்து வைத்திருக்கும் ஈகோ, அவர்களின் பிடிவாதம், அதீதப் பெருமை பேசுதல், சுயநலம் என்று பட்டியல் விரிந்து கொண்டே போனது. எல்லா டிபன் டப்பாக்களிலும் உணவு மீதமானது.

ரேவதியிடம், "மாமியார்கிட்ட பேசு ரேவதி. வேற வழியில்லை. குழந்தைகிட்ட, 'நீ இன்னும் கொஞ்சம் பெரிசானப்புறம் இது பத்தித் தெரிஞ்சுக்கலாம்'னு சொல்லு" என்றபடி வெளியே வந்தேன்.

அடுத்த நாள், 'அன்னையர் தினம்'. முதியோர் இல்லம் ஒன்றில் பட்டிமன்றம். நடுவராக நான். பாட்டிகளும் அந்த அமைப்பை நடத்தும் சங்க உறுப்பினர்களும் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். முதியோர் இல்லங்களின் அந்த முகங்கள் சுவாரஸ்யமானது. பாட்டிகளின் கிண்டல், கேலி... இதைத் தாண்டி முதல் கட்டுக்குள் போனால் தெரிவது வருகிறவர்களைப் பார்த்து வணக்கம் சொல்லும் அவர்களின் நடுங்கிய கைகள், நீர் வடிந்தபடியே இருக்கும் கண்ணைப் பொத்தியபடியே அவர்கள் செய்யும் பிரார்த்தனைகள், அன்றைய உணவை அளித்த நன்கொடையாளர்களுக்கு அவர்கள் சொல்லும் வாழ்த்து, உறவுகளால் கைவிடப்பட்ட பிறகும் இங்கே வந்து அவர்கள் சேகரித்திருக்கும் நட்பு, வரிசையாகத் தட்டு வைத்து நகர்ந்தபடி அவர்கள் பெறும் சாப்பாடு. ஏதோ ஒரு கல்லூரி மலரில் படித்த கவிதை நினைவுக்கு வருகிறது...

'சாப்பிட ஏதாவது

கிடைக்கும்போதெல்லாம்

வந்துவிடுகிறது

பிள்ளைகள் ஞாபகம்

முதியோர் இல்லத்தில்

இருந்த போதும்!"

இரவு நெருங்க நெருங்க, அங்கே கவியும் மௌனம், வெறுமை, கண்ணீர்க் கறை படியாத தலையணைகள் எந்த முதியோர் இல்லத்திலாவது இருக்க முடியுமா என்ன?

இந்த முதல் கட்டைத் தாண்டி உள்ளே போனால், கடும் நோயால் பாதிக்கப்பட்டு, எழுந்திருக்கக்கூட முடியாமல் முதியோர் இருக்கும் இரண்டாம் கட்டு. புறக்கணிப்பின் உயிர் வலியை அனுபவித்தபடி, தனிமை என்னும் பாழ் இருட்டுக்குள், மரணத்துக் காக அம்புப் படுக்கை இல்லாமல் காத்திருக்கும் பீஷ்மர்கள்.

பெருகி வரும் முதியோர் இல்லங்களின் வேர்க் காரணம் என்ன? தவறு முதுமையிடமா? இளமை யிடமா? முதுமைக்கு என்னதான் தேவை? அது ஏன் ஓயாது சலிப்புறுகிறது? தான், தன் தேவைகள், தன் ருசிகள் என்று இவற்றை மட்டும் ஏன் முன்னி லைப்படுத்துகிறது? ' என்கிட்ட எதையும் சொல்ற தில்லை. மதிக்கிறதில்லை ' என்பதுதான் முதுமை யின் ஒருமித்த குரலாக இருக்கிறது. முதியோரின் பிடிவாதம், சில சமயம் அவர்களின் வார்த்தைக ளில் உள்ள உக்கிரம்... இவை எல்லாமே, 'நான்

இனி தேவையில்லையோ' எனும் பயத்தில் அணியப்படும் முகமூடிகள்தானோ?

இளமை ஏன் இவ்வளவு எரிச்சல் அடைகிறது? ஒரு பிரியமான வார்த்தை எந்த பேதத்தையும் வெல்ல முடியும் என்கிற உணர்வு ஏன் இளமையிடம் அற்றுப் போனது? அவர்களும் பாவம்தானோ? மென்று தின்னும் அவசர யுக வாழ்க்கைச் சக்கரத்தின் பற்களில் சிக்கி, பொடிப்பொடியாகும் பரிதாபம்தானே இவர்கள் வாழ்க்கை?

விஷயம் பட்டிமன்றமல்ல... விளக்கு அணையக் காரணம், தீர்ந்து போன எண்ணெயா - குறைந்துவிட்ட திரியா? விவாதம் தேவையில்லை. நாம் செய்யக்கூடியது, இந்த தீபத்தைப் பாதுகாத்து ஒளிக்கு உயிரூட்டுவதுதான். ஒரு நாளைக்கு ஒரு நேரப் பேச்சு; முதியோர், பட்டியல் போடும் வியாதிகள் பற்றிய சிறு அக்கறை; சிற்சில விசாரிப்புகள்... இவை போதும். தேவை, முதலில் நீளும் ஒரு கை. இது யாருடைய கையாக இருக்க வேண்டும்? இளமையின் கையாகத்தான் இருக்க வேண்டும். ஏன் இளமை? காலம் அவர்களையும் முதுமையிடம்தான் கொண்டு சேர்க்கப் போகிறது என்பதால்!

நதியின் ஆழத்தில் இருக்கும் கூழாங்கற்களை எடுத்துக் கன்னத்தில் பதித்து அதன் குளிர்ச்சியையும் வழவழப்பையும் ஒரு நிமிஷம் கண்மூடி அனுபவித்திருக்கிறீர்களா? இந்தக் கல்லும் ஒரு காலத்தில் கூர் முனைகளோடு குத்திக் கொண்டு இருந்த கல்தானே? ஆற்றின் மகத்தான வேகத்தில் தன் கிழிக்கும் முனைகளை வழவழப்பாக்கிக் கொண்டது கல். வாழ்வெனும் பெருநதியிடம் நம்மையும்

ஒப்புக்கொடுத்து அமைதியும் குளிர்ச்சியும் பெறுவதுதான் முதுமையை நோக்கிய பயணத்தை சுகமாக்கும் ஒரே வழி, இல்லையா?

ரேவதியிடமிருந்து போன். மாமியாரிடம் பேசி தாரிணியின் கேள்வியைச் சொன்னாளாம். பதிலே இல்லையாம்.

'நாளெல்லாம் நான் என்ன செய்வது' என்று முனகினாராம். ஆனால், அடுத்த நாளிலிருந்து சீரியல் பார்ப்பது கொஞ்சம் குறைந்திருக்கிறதாம்.

இவள் ஆபீஸிலிருந்து வந்தபோது தாரிணியும் மாமியாரும் பரமபதம் விளையாடிக் கொண்டிருந்தார்களாம்!

# 6. அழகு... எது?

'அன்புள்ள பாரதி,

ஒரு கட்டுரையில், இடுப்பின் கீழ்ப்புறம் டாட்டூ வரைந்து கொள்ளும் பெண் பற்றிய ஒரு விளம்பரம் குறித்து எழுதி இருந்தீர்கள். இது எவ்வளவோ பரவாயில்லை. ஒரு ஸ்ப்ரேயை தெளித்துக் கொண்ட ஆண், கிரிக்கெட் பந்தைப் பிடிக்கக் காத்திருக்கும்போது, நூறு பெண்கள் மேலே விழுவது மாதிரி காட்டுகிறார்களே..... இதையெல்லாம் நீங்கள் கவனிக்கவில்லையா?

-திருச்சியிலிருந்து ஒரு தோழி எழுதிய கடிதம் இது.

நம் விளம்பரங்களில் பெண் பற்றிய சித்திரிப்பு என்பது ஒரே மாதிரியான சில பிம்பங்களே.

'அவள் சிறந்த தாய். தன் மகனின் உயரத்தை சில சென்டிமீட்டர்கள் அதிகரித்தாள்!'

'அவள் சிறந்த குடும்பத்தலைவி. கணவரின் ஷர்ட் கறையை நீக்க அவளுக்குத் தெரியும்.'

'அவள் வீட்டு டாய்லெட்டின் 'பளிச்' மற்றும் சாம்பாரில் அவள் பயன்படுத்தும் மசாலாப் பொடி இவை அவள் கணவரை மோப்பம் பிடித்தபடியே வரச் செய்யும்'

இப்படி சூப்பர் மாம் மற்றும் சூப்பர் குடும்பத் தலைவி பிம்பம் ஒன்று.

இன்னொன்று, கவர்ச்சி ராணி. அங்கங்களையே அங்காடியாக்கி எதையோ விற்றுக்கொண்டே இருக்கும் பிம்பம். ஆண்கள் பயன்படுத்தும் ரேஸர் பிளேடிலிருந்து உள்ளாடைகள் வரை, அவளு டைய கவர்ச்சிதான் அதற்கான விளம்பரங்களின் மூலம்.

மூன்றாவது, சிவப்பாக இல்லாத ஒரு பெண் அல் லது பரு ஒன்றைக் கன்னத்தில் கண்டுவிட்ட டீன் ஏஜ் கேர்ள். அவள் ஒரு சாதனத்தை உபயோகித்த உடன் சில நாட்களில் அவள் சிவப்பாகலாம், அழ காகலாம். உடனே காதல் கிடைக்கும். காதலுக்குப் பின் வேலை கிடைக்கும். வேலையோடு வெற்றி வரும். பிறகு, எந்நாளும் சந்தோஷமே!

கிராமங்களிலும் நகரங்களிலும் வாழும் உழைக் கும் பெண்கள் பற்றிய சித்தரிப்பு இங்கு பெரும் பாலும் கிடையாது. அவள் கண்டிப்பான டிராஃ பிக் இன்ஸ்பெக்டரோ, டிக்கெட் கலெக்டரோ... ஓர் அசட்டுப் பையன் வாயைப் திறந்தவுடன் அவன் மூச்சின் நறுமணத்தில் மயங்கி, வேலையை அப் படியே விட்டுவிட்டு, அந்த அசடு பின்னால் இந்த அசடு போக வேண்டும். இந்த விளம்பரங்கள் காட் டும் மாய பிம்பப் பெண்கள் போல நாம் ஆக மாட்டோமா என்ற இச்சைதான் இன்றைய இளம் பெண்களை ஆட்டிப் படைக்கிறது. இந்த விளம் பரங்களின் வெற்றியே, அவர்கள் காட்டும் பிம்பங் களை யாரும் அடையவே முடியாது என்பதுதான். இப்படி 'சத்தியங்களை விற்கும் விளம்பரங்கள், அந்த சத்தியங்களின் சாத்தியங்களைச் சந்தேகிக் கத் தெரியாத நாம். 'இந்த க்ரீமை யூஸ் பண் ணிப் பார்ப்போம்...' எனும் இச்சை, ஆனா, விளம்

பரத்துல வர்ற பொண்ணு மாதிரி நாம் சிவப்பாக லையே...' எனும் மனச்சோர்வு, சோர்வு தரும் தாழ்வு மனப்பான்மை. இது ஒரு மீள முடியாத விஷ வட்டம்.

இந்தப் பிரச்னையின் இன்னொரு வடிவம்தான், பேட்டை தோறும் நடக்கும் அழகிப் போட்டிகள், ஃபேஷன் ஷோக்கள் என்னும் இம்சைத் திருவி ழாக்கள். பிறந்ததில் இருந்தே சாப்பிடாதது மாதிரி தோற்றமளிக்கும் பத்து, இருபது பெண்கள். எல் லோரும் ஒரே தலைவிரி கோலம், ஒரே மாதிரி நடை, முதுகில் சுளுக்குப் பிடித்த மாதிரி திரும்பி அவர்கள் கொடுக்கும் லுக். எதிரே நோட்டு வைத் துக் கொண்டு கண்களால் அளவெடுத்து கச்சித மாக மார்க் போடும் ஒரு கும்பல். கொடுமையிலும் கொடுமையாக இந்தப் பெண்களின் 'புத்திசாலித் தனத்தை அறிய கேள்விகள் கேட்பதும், எல்லோ ரும் அன்னை தெரசா போல் 'சமூக சேவை செய்ய ஆசைப்படுவதும்'... போதும்டா சாமி.

இவை எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருக்கும் சித்தாந்தம், பெண் சிவப்பாக, இளமையாக, ஸ்லிம் மாக இருக்க வேண்டும். இவைதான் 'அழகு' எனும் திணிப்பு. சீனாவில் கடந்த முறை ஒலிம்பிக்ஸ் நடந்தபோது, அதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்கப் பாடலைப் பாடியது ஒரு சிறு குழந்தை. ஆனால், தேன் போன்ற அவளின் குரலில் அந்தப் பாடல் துவக்க விழாவில் ஒலித்தபோது, மேடை யில் வாயசைத்தது வேறு ஓர் 'அழகான' குழந்தை. ஒரிஜினலாகப் பாடிய குழந்தை, தன் வீட்டில் அழுது கொண்டு இருந்தாள்.

இங்கும் அதே கதைதான். பள்ளி விழாக்களில் தலைமை விருந்தினரை வரவேற்கப் பூங்கொத்து டன் நிற்கும் குழந்தைகள் யார்? முதல் ரேங்க் குழந் தைகளா? இல்லவே இல்லை. சிவப்புக் குழந்தை களே முன் வரிசையில். இது மட்டுமா? 'கறுப்புதான் எனக்குப் பிடிச்ச கலரு' என்று கறுப்புக் கதாநா யகனைப் பார்த்து கதாநாயகி பாடலாம். ஆனால், கதாநாயகி பெரும்பாலும் வடநாட்டிலிருந்து இறக் குமதியான சிவப்புப் பெண்.

என் சின்ன வயதில் நாங்கள் இருந்த தெருவில் இருந்தவள் வள்ளி. அவளைப் பற்றி நான் அறிந் ததே அவளின் மரணத்தின் போதுதான். அவள் வாழ்ந்ததையே அவளின் மரணம்தான் எனக்குத் தெரிவித்தது. எப்படிப்பட்ட மரணம்? சொந்த மாமா வால் திருமணம் செய்து கொள்ளப்பட்டு, நிறம் ரொம்பவும் கறுப்பு என்று ஓயாது அவமானப்ப டுத்தப்பட்டு, ஒருநாள் தன்னை எரித்துக்கொண்டு விட்டாள். இன்றும் திருமண விளம்பரங்களில் வரும் 'வான்டட் வெரி ஃபேர்' பார்க்கும் போதெல் லாம் எரிந்துபோன வள்ளியே என் நினைவில்.

அழகு என்பது சிவப்பு மட்டும்தான் என்று மொத் தமாக மூளைச் சலவை செய்யப்பட்ட சமூகமா நாம்? முகத்தை, உடலை, கூந்தலை கவனித்து அவற்றில் இருக்கும் குறைகளைக் களைய முயற்சி எடுப்பது மனித நாகரிகம் தோன்றிய காலத்தில் இருந்து தொடரும் வழக்கம். இதில் எதுவும் தவ றில்லை. அழகிய தோற்றத்துக்கான ஆர்வம் உயி ரியற்கை. வீட்டில் இருந்தால் ஒரு நைட்டியும், கலைந்த தலையும், வெளியே போனால் நிறத்துக் குப் பொருத்தமில்லா உடையும் - தவிர்க்கப்பட

வேண்டியதே. நல்ல தோற்றம் நமக்குள் ஏற்படுத்தும் தன்னம்பிக்கையை குறைத்து மதிப்பிட முடியாது. ஆனால், இது எல்லைகளைத் தாண்டி, நேர விரயம், பண விரயம், ஆத்ம சக்தியின் விரயம் என்று விரிந்து, இதைத்தவிர வேறு ஆக்கபூர்வமான சிந்தனையே இல்லாத வறட்சியில் உறைந்து, 'அழகாக இருக்க வேண்டும்' எனும் எண்ணம் போய், தன்னைக் கவர்ச்சியாக வெளிப்படுத்திக் கொள்ளும் விழைவு விஸ்வரூபம் எடுக்கும்போது, விஷயம் திசை திரும்பி விடுகிறது.

காக்கரே என்று ஒரு நதி இருக்கிறது. நேபாளத்துக்குப் பக்கத்தில் புறப்பட்டு, மேற்காக ஓடி ஓடி, இறுதியில் தார்ப் பாலைவனத்தில் விழுந்து தற்கொலை செய்து கொள்கிறது அந்த நதி. கடலில் கலக்காமல் பாலைவனத்தில் பலியாகும் ஒரே நதி இதுதான். பல சமயம் அழகை மட்டும் முன்வைத்துப் பயணப்படும் வாழ்வும் இப்படியே ஆகிவிடுகிறது.

புற அழகை மிகவும் பிரதானப்படுத்தி, அதையே தன் வாழ்வின் மூலதனமாகவும் வெற்றியாகவும் நினைத்த எந்தப் பெண்ணும் சந்தோஷமாக வாழவும் இல்லை. நிறைவாக மரணம் எய்தவும் இல்லை என்பதே வரலாறு சொல்லும் பாடம். இது, கிளியோபாட்ராவிலிருந்து மர்லின் மன்றோ வரை தொடரும் இயற்கையின் குரூர விதி.

அழகைப் பற்றிய 'சம்பிரதாயமான' பார்வை இல்லாமல் பார்த்தால், எத்தனை அழகு நம்மைச் சுற்றி! ஒருநாளும் நெயில் பாலிஷ் உபயோகித்திராத கிரண்பேடியின் விரல்கள் அழகு. ஏதோ ஒரு ராகத்தின் அபூர்வப் பிடியில் சஞ்சாரம் செய்யும் நித்

யஸ்ரீயின் மூடிய கண்கள் அழகு. காலையில் சுத்தமான சீருடையும், மடித்துக் கட்டிய பின்னலுமாக ஸ்கூலுக்குப் போய் - மாலை, புழுதியில் புரண்டு, விளையாடி, வியர்வையில் நனைந்து அநேகமாக ஒரு பின்னல் அவிழ்ந்து தோளில் புரள, பள்ளியில் இருந்து ஓடிவரும் என் சின்னப் பெண் அழகு.

இன்னும், எங்கள் தெருவில் போலியோ பாதித்த கணவனை வைத்து ட்ரை சைக்கிளை மிதித்தபடி போகும் பெயர் தெரியாத பெண் அழகு. ரொம்ப நேரம் கம்ப்யூட்டரில் வேலை செய்யும் சாஃப்ட்வேர் பெண் கழுத்தை அப்படியும் இப்படியும் திருப்பி சுளுக்கெடுப்பது அழகு. யாரோ ஒரு கல்லூரிப் பெண், நடக்கையிலேயே ஒரு குதி குதித்து மரத்தைத் தட்டி, மஞ்சள் பூக்களைச் சிதறச் செய்த போது சிரித்தாளே, அந்த சிரிப்பு அழகு. எல்லாவற்றையும்விட நம் அம்மாவின் வயதான, சுருக்கம் மிகுந்த முகமும் அந்த முகத்தில் இருக்கும் நமக்கான பிரத்தியேக அன்பும் எந்த ஐஸ்வர்யா ராய்களையும் தமன்னாக்களையும் விட, பேரழகானது!

# 7. 'அநித்ராக்களை பலி கொள்ளாமல் இருப்பாயாக!

'பத்தொன்பது வயதுக் கல்லூரி மாணவி அநித்ரா தற்கொலை. கல்லூரியில் சக மாணவரோடு பேசியதைக் கண்கா ணிப்பு கேமராவில் பார்த்து விசாரணை செய் தது கல்லூரி நிர்வாகம். விடுதி அறையிலிருந்து அழைத்துச் சென்று, இரண்டு மணி நேரம் சேர்மன் மற்றும் உதவியாளர் இருவரும் விசாரித்ததாகத் தெரிகிறது. அவமானம் தாங்காமல், கடிதம் எழுதி வைத்துவிட்டு, மாணவி இந்த முடிவை எடுத்ததா கச் சொல்லப் படுகிறது!

- செய்தி

அநித்ரா, ஏன் தற்கொலை செய்து கொண்டாய்? தற்கொலைக்கு முன் என்ன நினைத்தாய்? விசா ரணை என்ற பெயரில் நேர்ந்த அவமானத்தை நினைத்துப் பார்த்து அழுதாயோ?

நீ பிறந்தபோது அத்தனை நேரம் தான் பட்ட வலி களை மறந்து, உன் முகம் பார்த்து உன் அம்மா சிரித்திருப்பாளே... அந்தச் சிரிப்பை நினைவின் அடுக்கில் இருந்து எடுத்துப் பார்த்தாயோ?

உன் பாதத்தை பூமியில் பட விடாமல், தன் தோளில் தூக்கிச் சுமந்திருப்பாரே உன் அப்பா... அந்தத் தோளிலிருந்து தொங்கும் கொலுசு அணிந்த உன் பிஞ்சுப் பாதம், அவர் நெஞ்சில் மோதிய மென் அசைவை நினைத்தாயோ? உன்

அண்ணனோடு ஓடி விளையாடிய இளமைக் கால இனிமைகளை அசை போட்டாயோ?

இத்தனைக்குப் பிறகும்கூட, உனக்கு நேர்ந்த அவமானத்துக்குப் பழி வாங்க, 'தற்கொலை' என்ற ஆயுதம் தான் சரி என்று எப்படி முடிவு செய்தாய்?

சென்னைக்கு அருகேயுள்ள ஒரு கல்லூரியில் தற்கொலை செய்து கொண்ட, முகம் தெரியாத அநித்ராவுக்காக... என் நெஞ்சில் இப்படி அடுக்கடுக்காகக் கேள்விகள்! சம்பந்தப்பட்ட கல்லூரியின் தரப்பில் என்ன சொல்லப்படுகிறது.? விசாரணையில் என்ன வெளிவரும்..? நமக்குத் தெரியாது. ஆனால், இதுபோன்ற பல விதிமுறைகள் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கும் பல தனியார் கல்லூரிகளில் உண்டு என்பது என்னவோ நிஜம். 'ஆணோடு, பெண் பேசுகிறாளா?' என்று கண்காணிக்க 'சி.சி.டி.வி. கேமராக்களாம்; பஸ்களில் தனித்தனிப் பகுதிகளாம்; நோட்ஸ் பரிமாறினால், 'டெஸ்ட் என்னிக்கு?' போன்ற உபத்திரவம் இல்லாத கேள்விகள் கேட்டால்கூட குற்றமாம்; அபராதமாம்!

"ஆம்பளைப் பையனோடு சேர்ந்து விளையாடினா... காதறுந்து போகும்' என்ற போன தலைமுறை பயமுறுத்தல்களின் நீட்சியே, இன்றையக் கல்லூரிகளில் இருக்கும் இதுபோன்ற கெடுபிடிகள். ரொம்ப சென்சிட்டிவ்வான வளர் பருவத்தில் இருக்கும் பெண்களை ஆண்களை எப்படி நடத்துவது என்ற அடிப்படை தெரியாதவர்களின் கைகளில் கல்வி நிறுவனங்கள் போயிருக்கும் அவலத்தின் பலன் இது. இந்த நிர்வாகிகளுக்கெல்லாம்

கல்லூரிக்குள் 'ஒழுக்கத்தை' நிலை நாட்டுவதில் இருக்கும் ஆர்வத்தைக் கேட்பானேன்?

கல்லூரிகள் நடத்துகிறவர்களுக்கும் சங்கடங்கள் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. 'நேற்றைய மாணவர்கள் போல், இன்றைய மாணவர்கள் இல்லை' என்கிறார்கள் எல்லா கல்லூரி நிர்வாகிகளும் ஒரே குரலில். தன் காம விரல்களால் சதா இளைஞர்களைச் சீண்டிக் கொண்டேயிருக்கும் மீடியாக்களின் வலைகளில் விழுந்திருக்கும் வெறும் பூச்சிகள்தான் இன்றைய மாணவர்கள் என்பது இவர்களின் கணிப்பு. இதையும் தள்ளிவிடுவதற்கு இல்லை. கல்லூரிக்குள் டிரெஸ் கோட் வேண்டும், செல்போன் கூடாது போன்ற கட்டுப்பாடுகள் நியாயமானவைதான். ஆனால், சிறைக் கைதிகளுக்குக்கூட இல்லாத கண்காணிப்புக் கேமராக்கள், பேசக்கூடாது என்ற கட்டுதிட்டங்கள்... இவை மனித உரிமை மீறல் இல்லையா?

'காதலைத் தாண்டி, ஆணுக்கும் பெண்ணுக்குமான நட்பு சாத்தியமா... இல்லையா?' என்பது பல ஆண்டு பழமை நிறைந்த கேள்வி! 'அது, காதல் என்கிற திசைக்கு சடுதியில் மாறிவிடும். ஆபத்து அதில் நிறைந்திருக்கிறது' என்பது போன்ற எண்ணங்கள் தான் அத்தகைய நட்பை எதிர்க்கச் செய்கிறதா? 'காதலில்லாத நட்பு சாத்தியம்' என்று இளைஞர்களும், 'சாத்தியமே இல்லை' என்று இளமை தாண்டியவர்களும் பிடிவாதமாக நினைப்பது எந்த விதம்? உறவுகளின் தூய்மை பற்றி இளமைக்கு இருக்கும் நம்பிக்கை, வயதாக வயதாக வற்றிவிடும் சோகம்தான் வாழ்வின் பயணமா?

"தாவணியின் தலைப்பை

விளையாட்டாக முறுக்கும்போதும்,

கோயிலுக்குப் போக

கூடுதல் ஒப்பனை செய்யும்போதும்,

தனியே அமர்ந்து

பாடங்களைப் படிக்கும்போதும்

அவனை நினைத்தே அவ்வளவும் செய்வதாக

அடித்துவிட்ட தந்தையே,

நீ அடித்த பிறகுதானப்பா...

அவனை நினைத்தேன்..!! –

ஒரு கிராமத்து மாணவி எழுதிய கவிதை இது! –

பல வருடங்களுக்கு முன், ஐந்தே பெண்களும், ஐம்பது ஆண்களுமாக இருந்த என் பொறியியல் கல்லூரியின் வகுப்பறையை இப்போது நினைக்கிறேன். பெண்கள் எல்லாம் கேர்ள்ஸ் ஸ்கூலில் இருந்தும், ஆண்கள் பாய்ஸ் ஸ்கூலில் இருந்தும் வந்தவர்கள். ஆரம்பத்தில் தயக்கம். அவ்வப்போது ஆர்வம். பேச வேண்டும் என ஒரு குறுகுறுப்பு. தன்னைச் சிறப்பாக வெளிப்படுத்திக் கொள்ள ஒரு முனைப்பு. ஆனால், எங்கள் கல்லூரியில் கேமராவோ, பேசக்கூடாது என்ற கட்டுப்பாடுகளோ கிடையாது. எங்களிடையே இருந்த மனத்தடைக

ளும் பூச்சுக்களும் முதல் செமஸ்டரில் இயல்பாக விலகியதும், நட்புப் பூக்கள் எங்கும் மலர்ந்தன.

ஜெயகாந்தன் சொன்னதுபோல், 'பாய் ஃப்ரெண்ட்' என்பது 'ஆண் நண்பன்' என்பதைவிட, 'நண்பனாக இருக்கும் ஆண்' என்று உணர்ந்த காலங்கள் அவை. அந்தக் காலங்களில் எங்கள் வகுப்பறையே சிரிப்பொலிகளால் நிறைந்திருக்கும். எங்களின் கனவுகள் அந்த இடத்திலிருந்து தான் கிளம்பின. தாயின் கருப்பை போல் பத்திரமானது கல்லூரி வகுப்பறைகள். வெளியே வந்த பின்தான் தடைகள், அடிகள், துரோகங்கள், போக விரும்பிய இடங்களுக்குப் போக முடியாத மனச் சோர்வுகள். கல்லூரி அறைகள் நமக்குத் தரும் கதகதப்புக்குக் காரணமே, அங்கே கிடைக்கும் நட்புதான். அந்த நட்புக்கு ஏது பால் வேறுபாடு? அண்மையில் எங்கள் வகுப்பின் அத்தனை மாணவர்களும், குடும்பங்களுடன் எங்களின் வளர்ந்த குழந்தைகளோடும் சந்தித்தோம். எங்களின் வயதுகளை உதிர்த்து, திரும்பவும் கல்லூரி நாட்களில் சிரித்தது போலவே எங்களால் சிரிக்க முடிந்ததற்கு, கல்லூரி கால நட்பின் வலிமை மட்டுமே காரணம்.

பெண்ணை, சரிகைத்தாளில் சுற்றிய இனிப்புப் பண்டம் போல் தனியே பத்திரப்படுத்தினால், இது என்ன என்ற ஆர்வக்கோளாறே ஆணிடத்தில் அதிகரிக்கும். அப்படியில்லாமல், ஆணுக்குப் பெண் ஒரு தோழியாக இருந்தால் மட்டுமே, அவனுக்குப் பெண் பற்றிய சரியான அறிமுகம் கிடைக்கும். அவளின் வலிகள் பற்றியும் வாழ்க்கை பற்றியும் தெளிவு பிறக்கும். 'இது உடல் மட்டுமல்ல, என் போன்ற உயிரும்தான்' எனும் எண்ணம் அரும்

பலாம். அதன்பிறகு, தனியே ஒரு பெண்ணைப் பார்த்தால், விசில் அடிக்கும் அசட்டுத்தனங்கள் அரங்கேறாது போகலாம். பஸ்ஸில் உரசும் அவலங்கள் மறையக்கூடும். ஸ்கூட்டியில் முன்னால் போகும் பெண்ணுக்கு மிகப் பக்கத்தில் பைக்கைச் செலுத்தி, பயங்கரமாக ஹார்ன் அடிக்கும் கயமைகள் குறையலாம்.

'நட்பு... நட்பு... என்று உருகுவதுதான் காதலில் முடியும்' என்கிறீர்களா? நட்பு பெருக பெருகத்தான் காதலும் உருப்படும். பார்க்கிற முதல் ஆணிடம் அல்லது முதல் பெண்ணிடம் ஒரு பதின் பருவக் குழந்தை காதல் கொண்டுவிடும் அபத்தங்களை, நட்பின் தூய கரம் ஒருவேளை அழித்துவிடக்கூடும். அந்த நட்பு சாத்தியம் என்று நம்பி, அர்த்தம் இல்லாத கட்டுப்பாடுகளை நீக்குவது ஒன்றே அறிவுடைய ஒரு சமூகத்தின் செயல். அந்தச் சமூகத்தில்தான் அநித்ராக்கள் தற்கொலை செய்து கொள்ளாமல் பட்டாம்பூச்சிகளாக சிறகடித்துக் கொண்டிருப்பார்கள்.

அநித்ராவுக்கு நடந்த சம்பவத்தில் யாரும் கவனிக்காத விஷயம் ஒன்று உண்டு. சம்பந்தப்பட்ட மாணவனுக்கு விசாரணை ஏதும் இல்லை என்பதுதான் அது. காலம் காலமாக 'ஒழுக்க மீறல்' எல்லாவற்றிலும் தண்டனைக்கு உரியவளாக பெண்ணே நிறுத்தப்படுகிறாள்.

இது போலத்தான், உறவுக்காரர்கள் வீட்டில் அதிகம் பேசியதற்காக வாயாடி' என்று அழைக்கப்பட்ட பக்கத்து வீட்டுக் குழந்தை என்னிடம் ஓடிவந்து ஒருநாள் கேட்டாள்.

"ஆன்ட்டி, வாயாடின்னா என்ன?"

"அதிகமா பேசற கேர்ள்."

"அப்போ அதிகமா பேசற பாய்க்கு என்ன பேர்?"

என்னிடம் பதில் இல்லை. தமிழிடமும் இல்லை. தமிழ் என்ன செய்யும்? சொற்களை உருவாக்கு வது மொழி இல்லையே. மனிதர்கள் தானே! எந்த மொழியானாலும், பல சொற்களில் வீசுவது காலம் காலமான ஆண்களின் ஆதிக்க வெறியின் முடை நாற்றம். 'வாயாடன்' என்ற சொல் ஏன் இல்லை? 'மலடன்' ஏன் இல்லை! 'வாழாவெட்டி' என்ற சொல்லுக்கான ஆண் பால் என்ன? விடை இல் லாத கேள்விகள்.

பெண்ணை தெய்வமாக்கும் தொன்மைகள் நம்மி டையே உண்டு. நதிகளுக்கெல்லாம் பெண்ணின் பெயர் என்பது வழக்கம். ஆனால், நம் நாட்டில் இழிவுபடுத்தப்படாத நதியே இல்லை என்பதுதான் யதார்த்தம்!

# 8. விதைக்க வேண்டியது வெறியல்ல... வெற்றி!

ப்ளஸ் டூ பரீட்சை ரிசல்ட் வந்த மறு நாள்... மீனலோசனி ஆபீஸ் வரும்போதே, 'அவளிடம் ஏதோ சரியில்லையே' என்று தோன்றியது எனக்கு. தள்ளாடிய நடை, எதிரே இருப்பவர்களைப் பார்க்கிறாளா? அவர்கள் ஊடாக அண்ட சராசரத்தை வெறுக்கிறாளா? அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டர் அருகே நின்று சுமார் பத்து நிமிஷம் தன் கைப்பையில் பேனாவைத் தேடிவிட்டு, பக்கத்து ஸீட் பெண் இரவல் கொடுத்த பேனாவில், இன்னும் அலுவலகம் வராத யாரோ ஒரு பேருக்கு எதிராகக் கையெழுத்தைப் போட்டு, ஞாபகமாக இரவல் பேனாவைத் தன் கைப்பையில் வைத்தபடி நகர்ந்தவள் டமாலென்று வேரற்ற மரம் போல விழுந்து மயக்கமானாள்.

அலுவலகமே பதறி, அவள் முகத்தில் நீர் தெளித்து, காபி வரவழைத்து, ஆளாளுக்குக் கத்திக் கதறி அவளை எழுப்பிய பிறகு, மெல்லக் கேட்டேன்...

"என்ன ஆச்சு?"

"பப்லு (ப்ளஸ் டூ எழுதியிருந்த அவள் மகன் பத்மநாபன்) இன்ஜினீயரிங் கட் ஆஃப் 200-க்கு 187-தான் எடுத்திருக்கான். என்ன காலேஜ் கிடைக்குமோ... ஒரு மார்க் போனா கவுன்சிலிங்ல ஒரு

நாள் போகுமே..." என்றாள் உயிரே போனாற் போல.

மீனா, பப்லுவோடு தானும் ப்ளஸ் டூ பரீட்சைக்கு ஒரு வருடம் படித்தாள். பப்லுவின் பரீட்சைக்கு ஆறு மாதம் முன்பே வீட்டுக்கு வந்த விருந்தினர் களை வாசலோடு துரத்தினாள். டி.வி-யைக் கட் டிப் பரணில் போட்டு, மாமியாரின் வயிற்றெரிச்ச லைக் கொட்டிக்கொண்டாள். மார்ச் மாதம் வந்த பரீட்சைக்கு, பிப்ரவரியிலிருந்து லீவ் போட்டாள். பரீட்சை முடிந்ததும் அத்தனை சாமிக்கும் மனு போட்டாள். மார்க் வந்ததும் மயக்கம் போட்டாள்.

இந்த மீனாக்கள்... புது யுகத்து அம்மாக்கள். தங் கள் குழந்தைகளின் வெற்றிக்காகத் தங்களையே கரைத்துக் கொள்ளும் கற்பூரங்கள். 'அம்மாக்கள் தான் இப்படி.... அப்பாக்கள் பரவாயில்லை' என்று யாராவது நினைத்துவிடப் போகிறீர்கள்! பிள்ளை களுக்குப் பரீட்சை வந்தால், அம்மாக்களுக்குக் குறையாமல் அவர்களும், திருவிழாவில் நேர்ந்து விடப்பட்ட ஆடுகள் போல ஆகிவிடுகிறார்கள்.

சிறியவர்களுக்கான பாட்டு மற்றும் டான்ஸ் போட் டிகளை டி.வி-யில் நீங்கள் பார்த்ததுண்டா? பூமியி லிருந்து இரண்டு அடி உயரமே உயர்ந்துள்ள சிறு பிள்ளைகளைக்கூட எம்.கே.டி பாகவதர் முதல் டி. ஆர்.மகாலிங்கம் வரை பல கட்டைகளில் பாடிய பழைய பாடல்களையெல்லாம், ஏழு கட்டையில் பாட வைக்கிறார்கள். இல்லையெனில் இன்னும் நடக்கவே கற்காத பிஞ்சுகளை ஜோடியாக ஆட வைத்து 'கெமிஸ்ட்ரி சூப்பர்' என்கிறார்கள். போட் டியில் பிள்ளை சரியாக ஆடாவிட்டால், பாடா விட்

டால் அல்லது பேசாவிட்டால் சுட்டு விரல் காட்டி எச்சரிக்கிறார்கள்.

இதில் சில குழந்தைகளின் திறமை ஆச்சரியமானது. ஈகோ, கவலை, குறை, பயம் இவற்றால் நெய்யப்பட்ட நம்முடைய அன்றாட வாழ்வென்னும் சலிப்புப் பால்வெளியை ஒரு கணத்தில் கடக்க வைத்து, கலையென்னும் ஆனந்த வான்வெளியில் நம்மை நீந்தச் செய்யும் அசாதாரண ஆற்றல் இவர்களுடையது. சக குழந்தைகள் 'எலிமினேட்' ஆகும்போது இவர்கள் சிந்தும் கண்ணீரின் உண்மை நம்மையும் புனிதப்படுத்துகிறது.

ஆனால், நான் இப்போது பார்ப்பது... வென்ற அல்லது தோற்ற குழந்தைகளையல்ல; அவர்களின் பெற்றோரைத்தான்! தங்கள் குழந்தையின் இயல்பான ஒரு திறமை அரியாசனம் ஏற இவர்கள் எடுக்கும் முயற்சிகள் வணக்கத்துக்குரியவை. ஆனால், ஜெயிக்க வேண்டும் என்ற ஆசை போய், வெறி வந்தது போல் இருக்கிறதே பல சமயம்!

'பட்டாசு கம்பெனியில் வேலை செய்து, என் மதுக் கோப்பையை நிரப்பு' என்கிறவர்கள் படிக்காத அப்பாக்கள். 'டி.வி. போட்டியில் ஜெயித்து என் புகழ்க் கோப்பையை நிரப்பு' என்கிறவர்கள் படித்த அப்பா, அம்மாக்கள். இந்த சிறு வயதில் ஆபாசமான பாடல்களுக்குத் தங்கள் குழந்தைகள் ஆட வைக்கப்படும் வக்கிரங்களை பெற்றோர்கள் அனுமதிப்பதை நினைத்துத் தூக்கம் தொலைக்கிறேன் நான்.

இரவெல்லாம் ராஜாவாக நடித்து, 'மந்திரி, புலவருக்கு ஆயிரம் பொற்காசுகள் தாருங்கள்' என்று

வசனம் பேசியவன், காலையில் கசங்கிய ஐந்து ரூபாய் நோட்டுடன் பஸ் ஸ்டாண்டில் நிற்பது போல, போட்டி முடிந்த அடுத்த நாளிலிருந்து தன் முக் கியத்துவம் முடிந்துபோனதை சமர்த்தாகப் புரிந்து கொண்டு, சாதாரணமாகப் பள்ளிக்குப் போக இந் தக் குழந்தைகளுக்கு யார் சொல்லித் தருவார்கள் என்று பயப்படுகிறேன்.

நான் மூன்றாம் வகுப்பு படிக்கும்போது, மாணவர் மன்றம் நடத்திய ஒரு பேச்சுப் போட்டிக்கு பள்ளி யில் அழைத்துச் சென்றார்கள். எனக்கு மூன்றாம் பரிசு. பைக்குள் இருந்தது பரிசாக வந்த திருக்கு றள் புத்தகம். பஸ் ஸ்டாப்பில் என்னை அழைத்துச் செல்ல சைக்கிளோடு நிற்கும் அப்பா, பஸ்ஸிலி ருந்து கை பிடித்து இறக்கிவிட்டார்.

"பத்திரமா போய் வந்தியா?" - முதல் கேள்வி... "மத்தியானம் சாப்பிட்டியா?" - இரண்டாம் கேள்வி. சைக்கிளில் தூக்கி வைத்து, சைக்கிளை உருட் டியபடியே சாலையைக் கடந்தார். அதுவரை "பரிசு வந்ததா?" என்ற கேள்வியில்லை. நான் உள்ளே பொங்கும் பரிசு உற்சாகத்தை வெளியே கொட்டக் காத்திருக்கிறேன். எனக்குத் தேவை ஒரே கேள்வி. அது வந்தபாடில்லை. வீடு வந்தது. வாசலில் இறக்கி விடும் போது, தாங்காமல் நானே கொட்டி னேன்...

"அப்பா எனக்கு மூணாவது பிரைஸ்..."

"சந்தோஷம். கலந்துக்கறதுதான் முக்கியம்... பரிசு முக்கியமில்லை " என்றார்.

'ஏன் பரிசில்லை?' என்று தோல்விகளுக்காக கர்ஜிக்கும் வீடு, நல்லவேளையாக எனக்கு அமையாததே நான் பேச்சாளராகக் காரணமோ என்னவோ!

பள்ளிகளில் மிகச் சிறப்பாகப் படிக்கும் சில குழந்தைகளைத் தவிர, மீதிப் பிள்ளைகள் இன்றைக்கும் கடும் மனச்சோர்வுக்கு ஆளாகிறார்கள். சில மதிப்பெண்கள் குறைந்தாலும் "நாளைக்கு உன் ஃப்யூச்சர்..." என ஆரம்பிக்கும் மிக நீண்ட நீதி வசனங்கள். ப்ளஸ் டூ-வுக்குப் பின்பு எழுத வேண்டிய ஐ.ஐ.டி. நுழைவுத் தேர்வுக்காக எட்டாம் வகுப்பிலிருந்தே தங்கள் பெற்றோரின் ஐ.ஐ.டி. கனவுகளைத் துரத்துகிறார்கள் சில பிள்ளைகள்.

ஏன் இந்த ஆவேசம்? என் குழந்தை எல்லாப் பாடத்திலும் நூறு வாங்கி, எல்லாப் பரிசும் பெற்று, டி.வி. நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு, விளையாட்டில் சச்சினாகி... எத்தனை எத்தனை ஆசைகள்! சாதாரண குழந்தைகளுக்கு தினம் வசை, "பக்கத்து வீட்டு சுரேஷோட மார்க்கைப் பாரு. நீயும் வாங்கியிருக்கியே..?", "டி.வி-யில பாடற சின்னக் குழந்தையைப் பாரு. நீயும் இருக்கியே..?" - இன்ன பிற.

"பக்கத்து வீட்டு சுரேஷோட அப்பாவ பாருங்க... எவ்வளவு சம்பளம் வாங்கறாரு. நீங்களும் இருக்கீங்களே..." என்று பதில் சொல்லும் அளவுக்கு, நல்லவேளை நம் பிள்ளைகள் இன்னும் நாகரிகம் தொலைக்கவில்லை. ஒப்பிடலைப் பற்றிய வைரமுத்துவின் கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது...

'ரோஜாவோடு மல்லிகையை அல்ல

ரோஜாவோடு இன்னொரு

ரோஜாவைக்கூட ஒப்பிடாதீர்கள்...'

தாம் எய்தா உயரங்களை, வாழ்க்கையின் ஓட் டத்தில் கரைந்துபோன தம் கனவுகளைத் தன் பிள்ளைகள் மீது சுமத்துவது, தமக்குக் கிடைக் காத அங்கீகாரத்தை பிள்ளைகள் மூலம் பெறு வது, அதற்காக அவர்களை அதீதமாக வருத்து வது, வெல்லும் பிள்ளைகளோடு சதா ஒப்பிடுவது... இவையெல்லாமே இன்று பெற்றோரைப் பிடித்தி ருக்கும் ஒரு மன வியாதியின் கூறுகளே.

'ஒரே நதியில் நாம் இருமுறை குளிக்க முடியாது' என்கிறது ஒரு ஜென் வாசகம். குழந்தைகளுடன் பிணைந்த நம் வாழ்வு ஒரு நதி போன்றது. அது கடந்து சென்றபின் அதை நாம் ஒரு போதும் பெற முடியாது. அந்தக் குறுகிய காலத்தில் அவர்களை வெற்றி பெற ஊக்கப்படுத்துவது மிக முக்கியம். ஆனால், மெதுவாக... ப்ளீஸ் மிக மெதுவாக... அந் தப் பாத்திரம் கொள்ளும் அளவே அதில் நம் கனவு களை ஊற்றுவோம்.

அதைவிட நமக்கு முக்கியம்... அவர்களோடு பேசு வது, அவர்களை அறிவது, அவர்களுடான நமது உரையாடல்களில் நாம் இழந்த, நமக்குள் இருக் கும் குழந்தைத்தன்மையை மீட்டெடுப்பது, அவர் களின் இயல்பான திறமைகளைக் கண்டுபிடிப்பது, அந்தத் திறமை ஒளிர உதவி செய்வது, ஒரு திற மையும் இல்லாவிட்டாலும், 'என் அன்பு உனக்கு நிச்சயம்' என்று உறுதிப்படுத்துவது, அந்த உறுதி

யின் உற்சாகத்தில் எழுந்து நிற்கும் அவர்களின் உயரங்களை ஆசீர்வதிப்பது... இவை மட்டுமே!

# 9. அக்னி மூலையின் அறை... பெண்களுக்கெல்லாம் சிறை!

அன்று திருச்சியிலிருந்து வந்த மலைக் கோட்டை ரயில், காலை 5.30 மணிக்கு எழும்பூரில் வந்து நின்ற போது உதிர்ந்த பயணிகளில் நானும் ஒருத்தி.

அதிகாலைக் குளிரில் ஆட்டோ பிடித்து வீடு நோக்கிப் பயணிக்கும்போது, வீதிகளைப் பார்த் தால் ஆச்சரியமாக இருக்கிறது. எத்தனை பேர் இந்த அதிகாலையில் தெருவில் இருக்கிறார்கள்..! ஏதேதோ கோச்சிங் வகுப்புகளுக்குப் போகும் +2 பிள்ளைகள் ; இன்ஜினீயரிங் கல்லூரிப் பேருந்துக் காக காத்திருக்கும் இளைஞர்கள்; அதிகாலையி லேயே கிளம்பும் சாஃப்ட்வேர் பறவைகள்... இத் தனை பேர் வீட்டிலும் இவர்கள் கிளம்பும் முன் னரே, வீட்டில் இருக்கும் அம்மாக்கள் எழுந்து இவர்களுக்காக சமையல் அறையில் எதையோ அவசர அவசரமாகச் செய்கிறார்கள். நாலு, நாலரை மணிக்கே பல வீடுகளில் குக்கர் விசில் அடிக்கிறது. "அம்மா, டைம் ஆச்சு" என்ற அலற லும், "இதோ ரெடி ஆயிடுச்சு... போயிடாதே.." என்ற பதில் கெஞ்சலும் வீடுகள் தோறும் கேட்கின்றன.

காலோடு தலை தெரியாமல் போர்வைக்குள் தஞ் சம் புகுந்து தூக்கம் என்னும் சுகானுபவத்தில் நாமெல்லாம் சொக்கிக் கிடந்த காலங்கள், கனாக் காலங்கள். அவை நீடித்தது பெண்களுக்கு மட்டும்

இளமை வரைதானே..! 'காலமிது காலமிது கண் ணுறங்கு மகளே... காலம் இதைத் தவறவிட்டால் தூக்கமில்லை மகளே...' என்ற பழைய சினிமா பாடல் என் நேசத்துக்குரியது. குழந்தையாக இருந் தவரை மட்டுமே நம்மைத் தட்டித் தூங்கச் செய் தார்கள். அதன்பின்..? யார் பெண்களைத் தூங்க அனுதித்தார்கள்?

ஆண்டாள். எனக்குப் பிடித்த கவிஞர்களில் முதன் மையானவர். ஆனால், அவரிடம் எனக்குப் புதிரான ஒரே விஷயம், எதற்காக எல்லாப் பெண்களையும் இத்தனை அதிகாலையில் எழுப்புகிறார்... 'குருவி எழுந்தது, மாடுகள் எழுந்துவிட்டன, வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று. நீ மட்டும் ஏன் எழுந் திருக்கவில்லை..?'

ஆண்டாளம்மா... குருவியும் மாடும் முந்தின இரவு ஆறு மணிக்கு உறங்கப் போயின. நாங்கள், பாலில் பிறை குத்திவிட்டு, கொசுவத்தி ஏற்றிவிட்டு, வாசல் பூட்டியிருக்கிறதா என்று பார்த்துவிட்டு, குழந்தை களை எழுப்பி பாத்ரூம் கொண்டுவிட்டு, எல்லா விளக்குகளையும் அணைத்துவிட்டுப் படுக்கப் போனது பதினோரு மணிக்குத்தானே..?

"அதெல்லாம் ஆறு, ஏழு மணிக்கே ஊரடங் கிய, அந்தக்காலத்தில் வாழ்ந்த பெண்களுக்கு..." என்கிறீர்களா? அப்படியென்றால், 'பால்காரர் வந் தாச்சு... ஆணே, நீ இன்னும் உறங்குதியோ...' என்று ஒரு பாடலும் அன்றிருந்தே இல்லையே..?

வாழ்க்கைப் பயணத்தில் பிரியமான விஷயங்களை இழப்பது இயல்பு. ஆனால், இப்படி இழந்தப் பட்

டியல் ஆணுக்கானதை விட பெண்ணுக்கு எப்போதுமே அதிகம். மிக அதிகம். தூக்கத்தைத் தொலைக்கிறோம்; தோழிகளை இழக்கிறோம்; அடையாளங்களை, ஆசைகளை, கனவுகளை, பிரியமானவற்றை, கவிதை எழுதுவதை, பாஸ்கெட் பால் ஆடுவதை, சத்தம் போட்டுச் சிரிப்பதை என்று பல நூறு விஷயங்களை நடுவிலேயே விட்டுவிட்ட எத்தனை எத்தனை பெண்களை நமக்குத் தெரியும்?

விட்டுவிடப் பெரிய காரணம்... நம் வீடுகளின் அக்னி மூலையில் இருக்கும், அளவில் சிறிய சமையல் அறைகள்தான். அரைப்பதும், கரைப்பதும், பொறிப்பதும், வறுப்பதும், வடியப்போடுவதும், வேகவைத்து உரிப்பதுமாக, திரும்பத் திரும்ப நிகழும் சமையல் வேலை, கையில் அள்ளிய நதி நீர் போல நம் கண்முன்னே நம் வாழ்வின் நேரத்தையெல்லாம் நம்மிடமிருந்து ஒழுகச் செய்து விடுகிறது.

சமையல், கலைகளின் ராணி. மறுப்பதற்கில்லை. ஐம்புலன்களையும் ஈடுபடுத்தும் கலை சமையலைத் தவிர வேறு எது? அடுப்பில் வறுக்கும் பொருளின் நிறத்தைக் கண் அனுமானிக்கிறது. கொதிக்கும் ரசத்தின் மணத்தை வைத்தே 'உப்பு ஒரு கல் குறைவு என்று கவனிக்கிறது நாசி. பொங்கும் பாலின் ஓசையை காதுகள் உள்வாங்கி அடுப்பை நிறுத்தக் கைகளுக்குக் கட்டளை இடுகின்றன. ஒரு பானைச் சோற்றிலிருந்து எடுக்கும் ஒரு சோற்றின் பாதத்தை ஒரு விரலின் தீண்டல் உணர்த்துகிறது. நாவில் இடப்படும் ஒரு துளி, பாயசத்தின் முழுச் சுவைக்கும் உறை கல்லாகிறது. ஐம்புலனும்

அளந்து சமைத்த உணவில் அன்பும் அக்கறையும் ஒரு ஸ்பூன் சேர்க்கும்போது அந்த உணவு அமிர்த மாகிவிடும். அழியாத ரசவாதம்தான் சமையல்!

உணவின் வழியாக பெண்களுக்கு பிள்ளைக ளோடு ஏற்படும் பந்தம் பல ஆயிரம் ஆண்டு களாக மரபணுக்களில் கலந்திருப்பது உண்மை தான். மகாபாரத கிளைக்கதை ஒன்றை எஸ்.ரா மகிருஷ்ணன் ஒருமுறை எழுதியிருந்தார். கிருஷ் ணனின் அரண்மனைக்குச் சாப்பிடப் போனாராம் கோபமிக்க துர்வாசர். அவருக்கு யார் எந்தச் சமை யல் செய்தாலும் பிடிக்காதாம். பிடிக்காத சமையல் செய்தவரை சபித்துவிடுவாராம். கிருஷ்ணனின் அரண்மனையில் எல்லோரும் பயந்து நடுங்க, ஒரு சமையல்காரர் மட்டும், துர்வாசர் மெச்ச சமையல் செய்துவிட்டாராம். "என்ன மந்திரம்?" என்று எல் லோரும் கேட்க, "ஒன்றும் பெரிய விஷயமில்லை. அவரின் அம்மாவிடம் போய், சிறு வயதில் என் னவெல்லாம் சமைத்துக் கொடுப்பீர்கள் துர்வாச ருக்கு?' என்று கேட்டு, அதையே சமைத்தேன்!" என்றாராம் சமையல்காரர்.

ஆம்... மனிதர்களின் ருசி அரும்புகள், பெரும்பா லும் குழந்தைப் பருவத்தில் தாய் தந்த உண வின் சுவையையே வாழ்நாளெல்லாம் நினைவில் வைத்திருக்கின்றன. ஆனால், இந்த சுவையின் மறுபக்கம்தான் காலம் காலமாக சமையல் அறை களின் இருண்ட சுவர்களில் பெண்களின் வாழ்வு சிறைப்பட்டிருக்கும் எழுதப்படாத வரலாறு. வீட்டின் மற்ற அறைகளில் உள்ள வசதிகள் எதுவும் இல் லாத பகுதியே சமையல்கட்டு. பெரும்பாலும் மிகக் குறுகியது. நாங்கள் குழந்தைகளாக இருந்தபோது

டியூப் லைட் போட்ட சமையல் அறைகளைப் பார்த்ததே இல்லை. குண்டு பல்புதான். காற்று வசதி இருந்ததே இல்லை. அதிலும், நம் பண்டிகைகள் பெண்களுக்கான டபுள் ஷிஃப்ட்டுகள். ஒவ்வொரு பண்டிகைக்கும் வேறு வேறு பலகாரங்கள். சில தெய்வங்களுக்குக் கொழுக்கட்டை பிடிக்கிறது. ஏனையவற்றுக்குப் பாயசம் தேவையாகிறது. சில பண்டிகைகளுக்கு சர்க்கரைப் பொங்கல். மற்றவற்றுக்கு பிரியாணி, கேக்குகள், இன்னும் பல. இவை தவிர வடை, அடை, பணியாரம் என்று சாமிகள் பேரைச் சொல்லி ஆசாமிகள் கேட்கும் முடிவில்லாத மெனு கார்ட்.

நல்லவேளையாக இந்த முப்பது ஆண்டுகளில் மிக்ஸி, கிரைண்டர், குளிர்சாதனப் பெட்டி, கேஸ் அடுப்பு என நம் சமையல் அறைகளில் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஆனாலும் மாறாதது, பெண்களின் மூளையின் எல்லாப் பகுதிகளிலும் ஓடிக்கொண்டிருக்கும் சமையல் செய்திகள்.

காலை எழுந்தவுடன், 'சமையலுக்கு மாவு உண்டா?', 'வெங்காயம் இருக்கிறதா?', 'பால் எக்ஸ்ட்ரா வேண்டுமா?' என உடல் இயக்கம் மாதிரி ஓயாத கேள்விகள். போன தலைமுறை குழந்தைகள் போல் கொடுப்பதை உண்பவர்கள் அல்ல இந்த நூற்றாண்டுப் பிள்ளைகள். இட்லி, தோசை... இவையெல்லாம் கெட்ட வார்த்தை என்று சொல்லும் மகனுக்காக அவசர சப்பாத்தி, கணவரின் மெனுவில் ஒரு குழம்பு, இரண்டு காய்கள், மகளுக்கு டயட் சமையல். விடுமுறை நாட்களில்கூட, 'ஞாயிறு என்றால் என்ன, திங்கள் என்றால் என்ன... எனக்கு எல்லாம் ஒன்றே' என்ற

சமநோக்கோடு அன்றைக்கும் வீட்டில் வழக்கமான நேரத்தில் எழுந்து வழக்கமான நேரத்தில் சாப்பி டும் 'பெரிசு'கள். ஞாயிற்றுக்கிழமை என்றால் மதி யத்துக்கு முன் எழுவது பாவங்களில் பெரும் பாவம் என்ற சீரிய கொள்கை கொண்ட இளமை சிங் கங்கள், மற்றவரெல்லாம் லஞ்ச் உண்ணும்போது எழுந்து வந்து, 'எங்கே என் காபி?' என்று கேட்க... எத்தனை சாதனம் வந்துமென்ன? 'விடாது கருப்பு' ஸ்டைலில் தீராதத் தொல்லை சமையல் அறை வேலை.

இன்னொரு பக்கம், "சமையல் அறை வேலை என்னைச் சுழி மாதிரி இழுக்கிறது" என்று ஓயா மல் அலுத்துக் கொண்டாலும், நம் பெண்களுக்கு அதை வேறு யாரிடமாவது ஒப்படைப்பதிலும் ஒரு தயக்கம் இருப்பது சுவாரஸ்யமான உளவியல் உண்மை. "நானே செய்ய வேண்டும். நான் செய்து தேய்வதைப் பார்த்து எல்லோரும், 'நீ மெழுகுவத்தி' என்று உருக வேண்டும்" என்ற ரகசிய தாகம் எப் போதுமே அவர்களை விட்டு விலகாமல் இருக்கி றது. ஆனால், சமையல் அறையில் வேலைப் பகிர்வு என்ற கட்டத்தை நோக்கி நம் குடும்பங்களைச் செலுத்த வேண்டியதுதான் இப்போது உள்ள அவசர, அவசியப் பணி. இப்படி வேலைகளைப் பங்குபோடும் வீடுகள் இப்போது ஐந்து சதவிகிதம் கூட இந்தியாவில் கிடையாது என்பது என் கணிப்பு.

'காலையில் வீட்டு வாசலில் இருக்கும்

பால் பொட்டலத்தை அம்மாவிடமும்!

செய்தித்தாளை அப்பாவிடமும் கொடுக்க

குழந்தைக்கு யார் சொல்லிக் கொடுத்தது?'

என்ற அ.வெண்ணிலாவின் கவிதை நினைவுக்கு வருகிறது. "இது என் வீடு. அம்மா சமையல் செய்கிறாள். அப்பா செய்தித்தாள் படிக்கிறார். அக்கா வீட்டைக் கூட்டுகிறாள். தம்பி விளையாடுகிறான்..." - இதுதானே குடும்ப உறவுகள் பற்றி நம் குழந்தைகள் படிக்கும் இரண்டாம் வகுப்பு பாடம்!

"இது என் வீடு. அப்பா சமையல் செய்கிறார். அம்மா ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையை தயாரிக்கிறார். வேலை முடிந்த பிறகு அம்மாவும் அப்பாவும் சேர்ந்து சமையலை கவனிப்பார்கள். அக்காவும் நானும் கூட உதவுவோம்" என்று இந்தப் பாடத்தை மாற்றியமைப்பதே நல்லது.

"எங்க வீட்டில் இதெல்லாம் நடக்காது..." என்கிறீர்களா?

என் பாட்டி சொல்வார். வீட்டின் பின்புறம் ஆட்டுக்கல்லில் இட்லி மாவு அரைக்கும்போது, அவரின் மாமனார் அங்கு வந்து நிற்பாராம். மாமனார் எதிரில் உட்கார்ந்து கொண்டு மாவு அரைப்பது மரியாதை இல்லை என்று நின்றுகொண்டே மாவு அரைப்பாராம். அந்த காலங்கள் மறையவில்லையா? ஆண்கள் வீட்டு வேலைகளில் உதவி செய்வது கொஞ்சமாக ஆரம்பித்திருக்கவில்லையா? அப்படியென்றால் சமையல் அறை வேலைப் பகிர்வும் சீக்கிரம் வரும்.

பத்து வயது தாண்டிய மகனுக்கும் மகளுக்கும் சமையலின் ஆரம்பகட்ட வேலைகளைப் பழக்கப்

படுத்துவது, 'இந்த வேலைகள் குடும்பத்தின் ஒவ்வொரு நபருக்குமான பொறுப்பு' என்ற உணர்வை உருவாக்குவதே பெண்ணின் மீது காலம் சுமத்திய இந்தக் கல்வாரிப் பயணத்தை எளிதாக்கும் வழி!

# 10. கமலாம்மாவும் கடன் அட்டையும்!

கமலாம்மா, வங்கியில் என்னைப் பார்க்க வந்தபோது அவர் யாரென்றே எனக்குத் தெரியாது. அவரின் தம்பி, என் பக்கத்து வீட்டுக்காரருக்கு தூரத்துச் சொந்தம். எப்படியோ தேடிப் பிடித்து என்னைப் பார்க்க தம்பியோடு வந்திருந்த கமலாம்மா, பதற்றமாகவே இருந்தார். கீழாகவே பார்க்கும் பார்வை. தோற்றத்தில் ஏதோ ஒரு சோகம். அலுவலகத்தின் பள பளப்பும் பர பரப்பும் அவரை பயமுறுத்தியிருக்க வேண்டும்.

எனக்கு, ஆபீஸ் நேரங்களில் வேலைக்கு அப்பாற்பட்டு யாரையும் சந்திப்பது கொஞ்சம் எரிச்சல் தரக்கூடிய விஷயம். இருந்தாலும் கமலாம்மாவின் தோற்றம் தெரிவித்த ஏதோ ஒரு பரிதாபம் என் எரிச்சலை விரட்டியது. விளிம்பு நிலையில் இருப்பவர்களின் தோற்றத்தில் மட்டுமே காணப்படும் பரிதாபம் அது.

விஷயம் இதுதான். கார்மென்ட் பிஸினஸ் செய்து கொண்டிருந்த கமலாம்மாவின் கணவர், ஒரு வருடம் முன்பு விபத்தில் இறந்துவிட்டார். இரு மகள்களும் பள்ளியில் படிக்கிறார்கள். ஆறு மாதம் முன்புதான் தெரிந்தது. கணவர், வங்கிக்கடன் அட்டை (கிரெடிட் கார்ட்) வைத்திருந்த விவரம். அதில் உள்ள பாக்கியைக் கட்டச் சொல்லி ஏதேதோ கடிதங்கள் வங்கியில் இருந்து வருகின்றன. யார் யாரோ போன் செய்து கடனைக் கேட்கிறார்கள்.

என்ன செய்வது என்று தம்பியிடம் யோசனைக் கேட்டு, கடைசியில் என்னிடம் வந்திருக்கிறார்கள்.

“விஷயம் தெரிஞ்ச உடனேயே, ஆறு மாசத்துக்கு முன்னாலயே வந்திருக்கலாமேம்மா... இப்போ ஒரு வருஷம் ஆகிப் போச்சே..."

“இல்ல... தம்பி பாண்டிச்சேரியில் இருக்கான். அவனுக்கு லீவு கிடைச்சு வரும் போதுதான் பார்க்க முடியும். அதான் லேட்டாயிடுச்சு..."

கமலாம்மாவின் குரல் மிகவும் சன்னமாக இருந்தது. "அவருதானேம்மா பாண்டிச்சேரியில் இருக்காரு. நீங்க சென்னையிலதானே இருக்கீங்க..."

"தனியா எங்கேயும் போனதில்லம்மா... பண விஷயம், பேங்க் விஷயம், கணக்கு வழக்கு எதுவும் பார்த்ததில்ல.."

கமலாம்மாவின் கண்களை நான் பார்க்க, அவர் இமைகளைச் சிமிட்டி கண்ணீரை அடக்கிய நாள், எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அந்த நாள்தான் சந்தா கோச்சார் என்பவர் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட நாள். இந்திய வங்கித் துறையின் மிகப்பெரிய பொறுப்புகளில் ஒன்றை, அதற்காகக் காத்திருந்த பல ஆண்களை பின்னே தள்ளி, சந்தா கோச்சார் வென்றெடுத்த நாள் அன்றுதான்.

பணம், கணக்கு, நிதி நிர்வாக விஷயங்களில் இந்தியப் பெண்களுக்கு எவ்வளவு தெரியும் என்று ஒரு கோடு போட்டால்... அதன் இரு எல்லைகளி

லும் நிற்கிறார்கள் கமலாம்மாவும் சந்தா கோச்சா ரும். ஒரு சர்வே எடுத்தால், கமலாம்மாவைப் போல இருப்பவர்கள்தான் அதிகம் என்று தெரியவரும்.

விஷயத்தைக் கவனிப்பதாகச் சொல்லி கமலாம் மாவையும் அவர் தம்பியையும் அனுப்பி வைத் தேன்.

ஆண்கள் மாதிரி அல்லாது, பெண்கள் பொருளா தாரத் தரையில் கவனமாகக் கால் பதித்து நிற் பவர்கள். சொல்லப் போனால், கஞ்சர்கள். கத்தி ரிக்காய்க்கு இரண்டு ரூபாய் அதிகம் கொடுத்தால், இரண்டு மணி நேரம் தூக்கம் தொலைப்பவர் கள். அமெரிக்கா போயிருந்தபோது, சுதந்திர தேவி சிலையருகே என் அண்ணன் குழந்தையின் காதி லிருந்த சிறு வெள்ளித் தோடு ஒன்று விழுந்துவிட் டது. அண்ணன் மனைவி, "எக்ஸ்யூஸ் மீ, கொஞ் சம் நகர்றீங்களா?" என்று சுமார் நூறு பேரிடமா வது கேட்டு, தோட்டைக் கண்டுபிடித்து, அதன்பின் தான் சுதந்திரதேவி சிலையை நிமிர்ந்து பார்த்தாள்.

வீட்டில் இருக்கும் நகைகளின் எடை எவ்வளவு? வாங்கிக் கொடுத்த ஆணுக்கு நினைவிருக்காது. ஆனால், பெண் அறிவாள். "பெரியப்பா மகன் கல் யாணத்துக்கு எவ்வளவு மொய் எழுதலாம்? 1,001 ரூபாய் போதுமா?" என்று கேட்பது ஆணாகவும், "உங்க தம்பி கல்யாணத்துக்கு அவங்க வெறுமே 501 ரூபாய்தானே எழுதினாங்க, ஒரு நூறு ரூபா சேர்த்து, 601 எழுதினா போதும்" என்று அவருடைய தம்பியின் கல்யாணம் முடிந்து மூணு வருஷம் ஓடி யும் மறக்காமல் சொல்வது பெண்ணாகவுமே எப் போதும் இருக்கிறது.

பண விஷயத்தில் மிக எச்சரிக்கை; அதிகம் செல வாகக் கூடாது என்ற தீவிரம்; அதேசமயம், வீட்டின் மொத்த நிதி நிலைமை என்ன என்றே தெரியாத அறியாமை... இவற்றின் சுவாரஸ்யமான கலவையே பெண்..

கணவருக்கு எங்கெங்கே அக்கவுன்ட் இருக்கி றது? என்னென்ன கடன் இருக்கிறது? முதலீடுகள் எங்கே? இன்ஷூரன்ஸ் பாலிஸி எவ்வளவு? அவ ருடைய எல்லா பாலிஸியிலும் நாமினேஷன் சரி யாகப் பதியப்பட்டிருக்கிறதா? வீட்டுக் கடனுக்காக ஈ.எம்.ஐ., எவ்வளவு? அதிலே வட்டிவிகிதம் எந்த விதம்? படிக்காதவர்கள் மட்டும் அல்ல; படித்த, ஏன், வேலையில் இருக்கும் பெண்களில்கூட பாதிப் பேருக்கு மேல் இந்த விவரங்கள் தெரி யாது. வேலைக்குப் போகிற பெண்களிலேயே சில பேருக்கு, பேஸிக் சேலரி (அடிப்படை சம்பளம்) என்ன... டி.ஏ. (அகவிலைப் படி) என்ன, டாக்ஸ் (வருமான வரி) பிடித்தம் எவ்வளவு போன்ற அடிப்ப டைக் கணக்கு கொஞ்சம் அலர்ஜிதான்.

பல வீடுகளில் மனைவிகளை இந்த விஷயங்க ளில் ஈடுபடுத்த முயன்று, கடும் தோல்வி கண் டவர்களாகவே இருக்கிறார்கள் ஆண்கள். "இந்த விவரம் ஏதாவது சொல்ல வந்தா, 'அடுப்புல பால் கொதிக்குது, குழந்தை அழுவுது'னு ஏதோ ஒரு சாக்கு சொல்லிட்டுப் போயிடறா. அவளுக்கு தெரிஞ்சுக்க ஆர்வமே இல்லை..." என்று ஆண்கள் முறையிடுகிறார்கள். நிதி நிர்வாகத்தின் அடிப்ப டைகளை அறிந்துகொள்வதில் அக்கறை இல்லா மல்... ஆனால், பணம் பெருக்கெடுத்து ஓட வேண் டும் என்ற ஆசை மட்டும் இருக்கும் பல பெண்

களின் பலவீனம்தான், பாதியில் திவாலாகி விடும் சீட்டு கம்பெனிகளின் மூலதனமாகிறது.

இது என்ன கம்ப சூத்திரமா? முதல் தேவை ஆர்வம். இரண்டாவது, தெரிந்து கொண்டே ஆக வேண்டும் என்கிற பிடிவாதம். மூன்றாவது, குடும் பத்தின் வரவு - செலவுக் கணக்கு விவரம். மூன்றும் இருந்தால் போதும். 'வரவு எட்டணா செலவு பத் தணா' இல்லையென்றாலே உங்களுக்குப் பாஸ் மார்க். அடுத்து, செலவு போக மிஞ்சும் பணத்தை என்ன செய்வது? சேமிப்பது என்றால் எங்கே? இதில் இரண்டே விதிகள்தான். உங்கள் வயதை நூறில் கழித்து, எவ்வளவு வருகிறதோ, சேமிப்பில் அத்தனை சதவிகிதம் முதலுக்கு மோசம் வராது' என்னும் உறுதி இருக்கும் வங்கி டெபாசிட்களில் தான் இருக்க வேண்டும். பாக்கியை ஷேர்ஸ், மியூச் சுவல் ஃபண்ட் என்று போடலாம்.

“அவன் 15 சதவிகிதம் கொடுக்கிறானாம். கூடவே ஒரு தோசைக்கல் ஃப்ரீயாம்" என்றெல்லாம் ஆசை காட்டும்போது, “வங்கியில் எட்டு சதவிகிதமே கொடுக்கும்போது, இவர்களால் எப்படி அதிகம் தர முடியும்..?" என்ற கேள்வியை எழுப்புங்கள்.

யாரையும் துணைக்குக் கூப்பிடாமல், தனியே போய் ஒருமுறை ஏ.டி.எம்-மில் பணம் எடுத் துப் பாருங்கள், பயமாக இருக்கிறதா? பயமாகத் தான் இருக்கும். ஏ.டி.எம்மில் பணம் எடுத்துவிட் டுத் திரும்பும்போது கதவு திறக்காவிட்டால் என்ன செய்வது என்ற அலிபாபா ஃபோபியா என் எழுத் தாள நண்பருக்கு உண்டு. கூடவே மகனைக் கூட் டிப் போய் அவனைக் கதவைத் திறந்தபடியே பிடித்

திருக்கச் செய்வார். உங்களுக்கு பயமாக இருப்பது இயற்கைதான். தனியாக முதல் நாள் ஸ்கூலுக்குப் போனபோது, முதன்முறை தோசை செய்தபோது, புகுந்த வீடு வந்த முதல் நாளில் எல்லா முதல் தடவைகளும் பயமாகத்தான் இருக்கும். அதெல்லாம் இப்போது? எனவே, ஏ.டி.எம்-மும் கைப்பழக்கம் தான்.

பண விஷயங்கள் மாதிரிதான் டெக்னாலஜி விவரங்களும். பல வீடுகளில் அம்மாவின் செல்போன் பிள்ளைகள் கைவசம். " போன் அடிச்சா, பச்சை பட்டனை அழுத்தி 'ஹலோ'னு சொல்லத்தான் எங்க அம்மாவுக்குத் தெரியும். எஸ்.எம்.எஸ். வந்தாலும் எடுத்து 'ஹலோ ஹலோ'னு கத்துவாங்க" என்று சிரிக்கும் குழந்தைகள் பெருகிய காலம் இது. எனவே, அந்தப் பிள்ளைகளையே சொல்லித் தர வைப்பதுதான் டெக்னிக். "எனக்கு வர்ற காலோட நம்பரை காண்டாக்ட்ல எப்படி சேர்ப்பது?, கம்ப்யூட்டர்ல வீட்டு வரவு - செலவுகளை ஸ்டோர் பண்ணிக்க சொல்லிக்கொடு..." - திரும்பத் திரும்பக் கேட்கலாம். பிள்ளைகள் கேலி பேசினால், "ஆமாண்டா, சின்ன வயசில் உனக்கு ஏ, பி, சி, டி-கூடத் தெரியாது. அப்போ நான் சொல்லிக் கொடுக்கலையா?" என்று கேட்டுப் பார்க்கலாம்.

ஒரு சீனப் பழமொழி சொல்கிறது... 'சந்தேகம் வரும்போது கேள்வி கேட்கிறவன் அந்த நேரம் மட்டும் முட்டாள். கேள்வி கேட்காதவன் வாழ்நாள் முழுவதும் முட்டாள்...'

அடுத்த மாதம் கமலாம்மா மட்டும் வந்தார். தனியாகத்தான், தம்பிக்கு லீவு இல்லையாம். நல்லவே

ளையாக கணவரின் கடன் அட்டையோடு, சேர்த்து எடுத்திருந்த இன்ஷூரன்ஸ் தொகை கை கொடுத்தது. கடன் பாக்கி போக மீதித் தொகைக்கான செக்கை நீட்டினேன். "செக்கை என்கேஷ் பண்ண அக்கவுன்ட் இருக்கா?" என்றேன்.

"பக்கத்து பேங்க்ல தொடங்கியிருக்கேன். அதுமட்டுமில்ல, ஒரு டெய்லரிங் யூனிட் வச்சிருக்கேன். அவருக்குத் தெரிஞ்சவங்க ஆர்டர் கொடுக்கறாங்க. ஓரளவு சமாளிக்கிறேன்" என்றார். சந்தோஷமாக இருந்தது. வறண்ட நதியில் ஊற்று மீண்டும் புறப்பட்டது போல், அவரின் வாழ்வில் ஒரு பிடிப்பு வந்திருப்பதை வார்த்தைகள் தெரிவித்தன. "அப்புறம்?" என்றேன். "என் பேர்ல ஒரு கிரெடிட் கார்ட் கிடைக்குமா?" என்றார்.

# 11. வீசப்பட வேண்டியது... எதிர்பார்ப்பு... விரும்பப்பட வேண்டியது... விவேகம்!

எனக்கு பத்து வயதிருக்கும். நாங்கள் வசித்தது சென்னை, திருவல்லிக்கேணியின் நூறு நூறு சந்துகளில் ஒரு மிகச்சிறிய சந்தில் இருந்த வீட்டில். எங்கள் குறுக்குச் சந்திலேயே முதலில் கல்யாணம் ஆனது எதிர் வீட்டு ஆண்டாளுக்குதான். தலை தீபாவளிக்கு வந்த மாப்பிள்ளையைப் பார்க்க தெருவே கூடியிருந்தது.

பட்டாசு வெடிக்க மாப்பிள்ளை வெளியே வந்தார். பின்னாலேயே நீள ஊதுவத்தியோடு ஆண்டாள். மாப்பிள்ளை சட்டென்று திரும்பவும் ஆண்டாள் முன்னேறவும் சரியாக இருக்க, ஊதுவத்தியின் நெருப்பு முனை புது மாப்பிள்ளையின் சிவப்புக் கன்னத்தில் சுட்டு விட்டது. மாப்பிள்ளை துடிக்க, ஆளாளுக்குக் கூப்பாடு போட, பதறிய ஆண்டாள், மாப்பிள்ளையின் மறுகன்னத்தில் 'பச்'சென்று இதழ் பதித்தாள். சினிமாவில் கூட அதிகம் முத்தக் காட்சிகளைப் பார்த்திராத எங்களுக்கு ஒரே அதிர்ச்சி. தெரு முழுவதும் பர பரப்பு. வெட்கப்பட்ட ஆண்டாளும், அதைவிட அதிகம் வெட்கப்பட்ட மாப்பிள்ளையும் 'கண்ணேறு' பட்டுவிட்டதாக வீட்டுக்குள் அழைத்துச் செல்லப்பட்டனர். எங்கள் தெருவின் சரித்திர சம்பவம் அதுதான்.

பின்பு, பிரசவத்துக்காக அம்மா வீட்டுக்கு ஆண்டாள் வந்தபோது மாப்பிள்ளையிடமிருந்து தினமும் 10-15 பக்கத்துக்குக் கடிதம் வரும். மாடியின் புகைக்கூண்டுச் சுவரில் சாய்ந்து கொண்டு, நாள் முழுதும் அவற்றைப் படித்தவாறு இருப்பாள் ஆண்டாள். அவளும், என் அக்காவும் நெருங்கிய தோழிகள் என்பதால், என் அக்காவுக்கு மட்டும் கடிதங்கள் படித்துக் காட்டப்படும். நாங்கள் அருகே போனால்... உதை விழும்.

அண்மையில் நானும் என் அக்காவும் எதேச்சையாக ஆண்டாளைப் பார்த்தோம். தலை நரைத்து, எடை கூடியிருந்தாள். 'மாப்பிள்ளை ' பற்றி ஆவலுடன் அக்கா விசாரித்தாள். அவருக்கு நாலு வருஷமாகவே கரூரில் போஸ்ட்டிங்காம். மகளோடு இவள் இங்கே. “இப்பவும் பதினஞ்சு பக்க லெட்டர் உண்டா?" என்றாள் அக்கா விளையாட்டாக.

"மூணு வார்த்தை எஸ்.எம்.எஸ். வந்தா அதிகம். அப்படியெல்லாம் லெட்டர் எழுதின ஆளா இதுனு சிலசமயம் நினைப்பேன்" என்றாள் ஆண்டாள், ஒரு வறண்ட சிரிப்புடன்.

ஆம்! இந்தக் கல்யாண கெமிஸ்ட்ரி, நாளாக நாளாக காலாவதி ஆவது எப்படி? கல்யாணம் ஆன புதிதில் கரை காணாத கங்கை போலப் பெருகும் நேசம், வருடங்கள் ஓடும்போது கையில் பிடித்த ஐஸ்கட்டியைப் போல கரைந்துவிடுகிறதே! நிரந்தரமாகப் பிரிவது ரொம்பக் கஷ்டம், அந்த ஒரே காரணத்துக்காகத் தொடரும் உறவு. குழந்தைகளுக்கான வாழ்க்கை. பலசமயங்களில் சண்டைகள், கண்ணீர். மெள்ள மெள்ள அதுவும் குறைந்

துபோய் சலிப்பு மிக்க அன்றாட வேலைத் தொடர் சங்கிலிகளால் நெய்யப்பட்டதாகி விடுகிறது உறவு. 'ஏதாவது சொன்னா, சண்டையாகும். எதுக்கு வம்பு?" என்ற எண்ணம் இருபுறமும் ஆழமாக ஊன்றிவிடுகிறது. இருவரின் உலகங்களும் மிக விலகி விடுகின்றன.

இந்த இடைவெளி வந்தபிறகு, பெண்கள் மனதில் மூண்டு விடுகிற நெருப்பு பற்றி, ஆண்கள் அறிவதேயில்லை. அவளுக்குத் தேவை வார்த்தைகள், திரும்பத் திரும்ப வார்த்தைகள். ஏதோ ஒரு நேரம் கைப்பிடித்து விரல் வழியே சொல்லும் பிரியம். பிள்ளைகள் அம்மாவைக் கேலி பேசும்போது, "ஏய், அவ மட்டும் இல்லைனா இந்த வீடு வீடாவாடா இருக்கும்?" என்ற சிறு பாராட்டு. "நீ ஒரு நேரமாவது உக்காரு. குதிகால் வலி இருக்குனியே காலையில், இப்ப எப்படி இருக்கு?" என்ற விசாரிப்பு. இவை போதும் நெருப்பை அணைக்க. இதுவும் இல்லாத போது சிறு நெருப்பு பெரும் காட்டுத்தீயாக பரவிவிடுகிறது.

ஆண்களுக்கோ, "இவ மட்டும் என்ன? கல்யாணம் ஆன புதுசுல எவ்வளவு மென்மையா பேசுவா? இப்போ? என்ன காட்டுக் கத்தல்! எல்லாத்துக்கும் குறை, எது பேசினாலும் தப்பு, ஓயாமல் புலம்பல். என்ன பேச முடியும் அவகிட்ட? ஏதோ குழந்தைகளுக்காக ஓட்ட வேண்டியதுதான். கல்யாணமான புதுசில கோயில் அம்மன் மாதிரி இருப்பா. இப்போ வாசலுக்கு வந்த துவாரபாலகி மாதிரி இருக்கா..." என்னும் கடும் சலிப்பு.

இரு வேறு மனங்களின் எதிரெதிர்க் குரல். திசை தெரியாத காட்டில் பிரிந்துபோன இருவர், ஒரு வரை மற்றவர் அழைக்கும் ஓசை இருவருக்குமே எட்டாமல் போகும் சோகம்!

எல்லா உறவுகளின் பரிமாணங்களும் மாறித்தான் போகும் என்று அறிந்து கொண்டால், இந்தப் பெரிய ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ளலாம். அப்பாவுக்கும் மகனுக்குமான, ஏன் அம்மாவுக்கும் மகளுக்குமான உறவுகளிலும் இந்த நெருடல்கள் உண்டு. அதீதப் பிரியம், பிறகு விலகல், கொஞ்சம் வெறுப்பு, பின் மீண்டும் நன்றியுடன் நினைவுகூரல் என்று ஒரு வட்டம் எந்த உறவிலும் உண்டு.

"எங்க அப்பாவால சூப்பரா சண்டை போட முடியும், ஹீ இஸ் கிரேட்."

இப்படிச் சொல்லும் மகனின் வயது ஐந்து.

"எங்க அப்பா நல்லவர்தான். என்ன கொஞ்சம் கத்துவாரு..." –

இப்போது வயது பத்து.

"அம்மா, ஏன் இப்படி டென்ஷன் பார்ட்டியா இருக்காரு அப்பா? நீ எப்படிம்மா இவரைப் போய் கல்யாணம் பண்ணிகிட்ட?"

நிச்சயம் டீன் ஏஜ்தான்.

"அடிக்கடி என் ரூட்ல கிராஸ் பண்றாரு. கொஞ்சம் சொல்லி வை." –

இது வாலிபனின் வார்த்தைகள்.

“நான் என் அப்பாவோடு பேசறதே இல்ல சார். நான் எது பண்ணினாலும் அவரு தப்புங்கறாரு..."

வயது முப்பதுக்கும் மேலே.

"எங்க அப்பா கத்துவாரு. ஆனா, ரொம்ப டிசிப்ளின் உள்ள ஆளு."

சொல்லும் மகனுக்கு நடுத்தர வயது.

"எங்க அப்பா வசதியில்லாத நேரத்தில்கூட எங்களை எல்லாம் எப்படி வளர்த்தாரு தெரியுமா? ஹீ இஸ் கிரேட்..."

மகனின் வயது இப்போது ஐம்பது.

ஐந்து வயதில் சொன்ன, "அப்பா இஸ் கிரேட்" திரும்பி வர நாற்பத்து ஐந்து வருடம் பிடிக்கிறது. இதுதான் வாழ்வின் யதார்த்தம். கணவன் - மனைவி உறவும் விதிவிலக்கல்ல. ஒருவேளை லைலாவும் மஜ்னுவும் கல்யாணம் செய்திருந்தால் அந்தக் காதல் அமரத்துவம் வாய்ந்த காதலாக தொடர்ந்திருக்குமா என்பது சந்தேகம்தான்.

'லைலா மாதிரி திமிர் பிடித்த பெண்ணே கிடையாது' என்று மஜ்னுவும், 'மஜ்னு மாதிரி உதவாக்கரை ஆணே இல்லை' என்று லைலாவும் நினைத்திருக்கக்கூடும்.

'எல்லாப் பிரச்னைகளையும் பேசி சரி செய்ய முடியும்' என்று மனோதத்துவ நிபுணர்கள் தொடர்ந்து

சொல்கிறார்கள். சிலசமயம் இந்த முயற்சி சிறு கீறல்களை, கிழிசல்களாக்கி விடும் அபாயம் உண்டு. "போன வாரம் நீ என்ன சொன்ன? போன வருஷம் என்ன செய்தே?"

புதுப்புது பூதங்கள் கிளம்பும் அபாயம்.

இதைவிட, எதிர்பார்ப்புகளை அப்படியே தூக்கி வீசிவிட்டு, 'இது இவ்வளவுதான்' என்ற விவேகம் பெறுதல் மட்டுமே மன காயங்களுக்கு மருந்து. இந்த விவேகத்தின் அடுத்த கட்டம், மனதில் அரும்பத் துவங்கிவிட்ட வெறுப்பை அழிப்பது.

'அலுப்பான வாழ்க்கை... அன்பில்லாத கணவன்' என்ற லேபிளை முகத்தில் ஒட்டித் திரிவதைப் போன்ற ஆபத்து பெண்ணுக்கு வேறு இல்லவே இல்லை. கணவரின் நண்பர் வீட்டுக்கு வந்து, சாப் பிட்டு, ஓயாமல் சமையலைப் புகழும்போது, பக் கத்தில் ஒரு வார்த்தையும் பேசாமல் இருக்கும் கணவன் எந்தப் பெண்ணுக்கும் வேதனைதான். ஆனால், இதன் தீர்வு, அடுத்த முறை நண்பர் விருந்துக்கு வருவாரா என்று அடிமனதில் எதிர் பார்ப்பதல்ல. அவரும் வீட்டில் மனைவியைப் புக ழவே மாட்டார் என்ற யதார்த்தத்தை நினைவில் கொள்வது மட்டுமே. எதிர்பார்ப்புகளைக் குறைத் துக் கொள்வதும், வெறுப்பை அழித்து, அந்த இடத் தில் அன்பான உரையாடல்களை அமைப்பதும் உறவுகளுக்கு ஒரு புதுப் பரிமாணம் தரும்.

"உங்க கிரீன் ஷர்ட் சூப்பர்", "உங்க அம்மா வீட்டுக்கு சண்டே போகலாமா?", "லஞ்ச் இன்னிக்குப் புதுசா இருக்கும். பிடிச்சா போன் பண்ணுங்க..."

இதுபோன்ற உரையாடல்கள் விரிசல்களை குறைக்கும்.

இதை ஏன் ஆண் செய்யக்கூடாது? முதலில் நீளும் கை ஏன் அவளுடையதாகவே இருக்க வேண்டும்? சலிப்பு ஊட்டும் அன்றாட வாழ்விலும் உறவுகளை சீர்செய்ய ஒலிக்கும் முதல் குரல் ஏன் பெண்ணு டையதாக இருக்க வேண்டும்? இந்தப் பெண் உரி மைப் பிரச்னைகளை இங்கே எழுப்ப வேண்டிய தில்லை. அவள் செய்ய வேண்டும். ஏனென்றால், அவளால் மட்டுமே இதைச் செய்ய முடியும்.

'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி

இருந்ததும் இந்நாடே...' –

என்கிறான் பாரதி.

தாயும் தந்தையும் மகிழ்ந்து வாழ்வதைப் பார்த்து வளரும் குழந்தைகள் கொடுத்து வைத்தவர்கள். வாழ்க்கையின் வெற்றிடத்தை வார்த்தைகளால் நிரப்பப்பட்ட அன்பு நிறைந்த இல்லங்களை அவர் களுக்குத் தரலாம்தானே?

# 12. 'வலி' நிரம்பிய இழப்புகள்... வராமல் இருக்கக் கடவோம்!

சமீபத்தில் படித்த இந்த வரிகள், என்னைச் சிரிக்கவும்... ரசிக்கவும் வைத்தன.

'பள்ளி முடிந்து சிறு பையன் வீட்டுக்குள் வந்து விட்டான். கற்பனை 'மெஷின் கன்னைக் கையில் பிடித்து, ஆயிரம் பேரைச் சுட்டு வீழ்த்திவிட் டான். ஹெலிகாப்டரில் தொங்கியபடியே கண்ணுக் குத் தெரியாத எதிரிகளைப் பறந்து பறந்து அடிக் கிறான். சோஃபாவும் கட்டிலும் துவம்சமாகின்றன. பூச்சாண்டியிடம் பிடித்துக் கொடுப்பதாக அம்மா சத்தம் போடுகிறாள். எங்கே பிடித்துக் கொடுத்து விடுவாளோ என்று பயந்து நடுங்கியபடி மூலையில் நிற்கிறது பூச்சாண்டி!'

இதைப் படித்ததும் எனக்கு ஆனந்தம் தாங்க வில்லை. எத்தனை பேர் நம்மை மாதிரி கஷ்டப்படு கிறார்கள் என்று தெரிந்து கொள்ளும் போது வரும் நிம்மதி கலந்த ஆனந்தம் அது. விஷயம் என்ன வென்றால், பிள்ளைகளுக்கு இருக்கும் சக்தி, பலம் பெற்றவர்களுக்கு இருப்பதில்லை.

தண்ணீர் வராத ஒரு கடும் சென்னைக் கோடை யில்... நான் கஷ்டப்பட்டுப் பிடித்திருந்த மூணு பக் கெட் தண்ணீரை முழுக்கப் பயன்படுத்தி, தன் பன் னிரண்டு பார்பி பொம்மைகளை, விலையுயர்ந்த ஷாம்பூ போட்டு சுத்தமாகக் குளிப்பாட்டியிருந்தாள்

என் மகள். நான் முக்கியமானது என்று கருதி வைத்திருக்கும் என் அலுவலகம் தொடர்பான பேப்பர்களில் விதவிதமான குச்சி பொம்மைகள் முளைத்திருக்கும். ரெண்டு சாக்ஸில் ஒன்று சமர்த் தாக ஷூவுக்குள்ளும், இன்னொன்று கடுகு டப்பா பக்கத்திலும் காட்சியளிக்கும்.

'இவளை என்ன செய்வது...' என்று நான் யோசிக் கும்போதே, எதிர் வீட்டிலிருக்கும் இரண்டு ஆண் குழந்தைகள் போடும் சண்டை காதுகளில் எதி ரொலிக்கும். மூன்றாவது உலக யுத்தம் மூண்டு விட்டதோ!' என்று மொத்தக் குடியிருப்பும் அதைப் பார்த்துக் கலங்கி நிற்கும்.

ஆக, குழந்தைகளை உலகுக்குக் கொண்டு வரு வது எளிது. அவர்களை சமாளிக்கத் தேவையான பொறுமையும் திட்டமும் இல்லாமல் நாம் படும் அவதி... கொடிதினும் கொடிது.

பிரச்னை என்னவென்றால்... குழந்தை பிறந்தவு டன் அதை வளர்க்கும் திறமையை இயற்கை தமக்கு உடனடியாக வழங்கி விடுகிறது என்று எல் லாப் பெற்றோரும் நம்புவதுதான். உண்மை அது வல்ல. எல்லோருக்கும் இதுபற்றி ஆலோசனை கள் தேவை. குழந்தை வளர்ப்பின் ஒவ்வொரு விஷயத்துக்கும் சரியான முறையும் தவறான முறை யும் உண்டு. ஏகப்பட்ட பேர் அனுபவப்பட்டும் ஆராய்ச்சி செய்தும் புத்தகங்கள் எழுதியிருக்கிறார் கள். அது என்ன... சரியான முறை, தவறான முறை?

குழந்தை, டீ கப்பை கீழே போட்டு உடைத்துவிட் டால், "அறிவிருக்கா உனக்கு? எப்பப்பாரு எதை

யாவது போட்டு உடை..." என்பது ரொம்ப இயல்பாக வாயிலிருந்து குதிக்கும் வார்த்தை. "நீயும்தான் உன் செல்போனை ஆறு தடவை கீழ போட்டிருக்க..." என்ற பதில் கிடைக்கலாம். இதையே... "இந்த கப், நாம் ஆசையா வாங்கினது. வேணும்னு நீ கீழ போட்டிருக்க மாட்ட, இனிமே கவனமாயிருக்கணும் சரியா?" என்று சொல்லிப் பாருங்கள்... பெரும்பாலும் நல்ல பலன் இருக்கும்.

பாராட்டப்படாத குழந்தையும் தண்ணீர் ஊற்றப்படாத பூச்செடியும் ஒன்றுதான். ஒருமுறை பாராட்டப் பெற்ற குழந்தை, அதைத் தக்க வைத்துக்கொள்ள கடுமையாகப் போராடுகிறது. ஆனால், இதிலும் சரியான தவறான முறைகள் உண்டு.

"எங்க திவ்யா மாதிரி ஒரு பொண்ணு இருக்கவே முடியாது. சமத்துன்னா சமத்து. இந்த வீடே அவளாலதான் நீட்டா இருக்கு.." என்று ஓவராக மற்றவர் முன்னால் பில்ட் அப் கொடுப்பது சரியான முறை அல்ல.

"திவ்யாவோட கப்போர்ட் எப்பவும் நீட்டா இருக்கும். புக்ஸுக்கு அட்டைகூட அவளே போடுவா..." என்பதுதான் சரி.

பாராட்டு என்பது அவர்கள் செய்த குறிப்பிட்ட செயல்களுக்காக பொத்தாம் பொதுவாக விடப்படும் உடான்ஸ் அல்ல என்று குழந்தைகள் உணர வேண்டியது அவசியம்.

விலையுயர்ந்த பரிசுகளைவிட, அவர்களின் அருகே படுத்து கதைகள் பேசித் தீர்க்கும் பொழு

துகளையே அவர்கள் விரும்புகிறார்கள். ஏனென்றால், அவர்களின் உலகமே கதைகளால் ஆனது. என் மகளோடு கதைகள் சொல்லிச் சொல்லித் தான் ஒரு விஷயத்தைத் துல்லியமாக விவரிக்கும் ஆற்றலை கொஞ்சமாவது நான் வளர்த்துக் கொண்டேன். ஒரே கதையை திரும்பத் திரும்பக் கேட்பாள். தகவல்கள், வர்ணனைகள் மாறக் கூடாது. கோல்டிலாக்ஸ் கரடிக் குட்டியைத் தன் படுக்கையில் பார்த்தபோது, கரடி ரோஸ் கலரில் தான் போர்வையைப் போர்த்தி இருக்க வேண்டும். ஒருநாளும் அது பச்சைப் போர்வையாக முடியாது. உணவு சம்பந்தப்பட்ட கதைகள் அவர்களுக்கு உவப்பானவை. மீனாட்சி கல்யாணம் கதையில் வரும் குண்டோதரன், சாதத்தில் நெய்யும் பருப்பும் சேர்த்து உருண்டை பிடித்து சாப்பிடுகிறவனாக இருத்தல் அவசியம். அப்போதுதான் அடுத்த நாள் அதைச் சொல்லி இரண்டு பிடி சாதமாவது அதிகம் ஊட்ட முடியும்.

கதை கேட்பதிலிருந்து, கதைப் புத்தகம் படிக்கும் வழக்கத்துக்கு மெதுவாக நகர்த்தப்படும் பிள்ளைகள்... பெரும்பாலும் டி.வி. வெறியர்கள் ஆவது இல்லை. அவ்வப்போது பரிசாகக் கிடைக்கும் புத்தகங்கள், வீட்டில் இருக்கும் புத்தக அலமாரி, அம்மாவும் அப்பாவும் படிப்பதைப் பார்க்கும் சூழல் வீட்டில் இருந்தால், "எப்பப் பாரு டி.வி. பார்த்துட்டே இருக்கா" என்ற புலம்பல் குறையும். கூடவே தேவை, ஓர் ஒப்பந்தம் - பிள்ளைகளோடு எந்த நேரம் டி.வி. பார்க்க வேண்டும், என்ன நிகழ்ச்சி என்கிற முடிவு.

ஒரு நண்பரைப் பார்ப்பதற்காக அவருடைய குடியிருப்பின் படிகளில் ஏறிக்கொண்டிருந்தேன். எனக்கு முன்னே படியேறிக் கொண்டிருந்தது ஓர் அழகிய, ஆறேழு வயதுக் குழந்தை. ஒரு திருப் பத்தில் சரசரவென்று படியிறங்கிய ஓர் இளைஞன், நான் ஏறுவதைக் கவனிக்காமல், அந்தச் சிறு குழந் தையின் உதடுகளில் முரட்டுத்தனமாக முத்தம் பதிக்க முயல, நான் போட்ட சத்தத்தில் ஓடிவிட் டான். மெள்ளக் குழந்தையிடம் விசாரித்த போது இது அடிக்கடி நடக்கிற விஷயம் என்று தெரிய, அதிர்ந்து போனேன்.

வீட்டில் இருக்கும் சிறு குழந்தைகளுக்கு எது 'குட் டச்' (Good touch), எது 'பேட் டச்' (Bad touch) என்று சொல்லித் தர வேண்டியது அவசிய அவ சரம்! வளர் பருவத்தை நெருங்கும் பெண்களிடம், மாறி வரும் அவர்களின் உடல் பற்றிய சின்னச் சின்ன உரையாடல்களையும் இன்றைய பெற்றோர் செய்தே தீர வேண்டும். "நீ கொஞ்சம் கொஞ்சமா பிக் கேர்ள் ஆகிட்டு இருக்க, என்ன சந்தேகமோ பிரச்னையோ அம்மாகிட்ட ஷேர் பண்ணிக்கடா..." என்பது போன்ற உரையாடல்கள் இருந்தே தீர வேண்டிய ஒன்று.

ஒருவேளை, குழந்தையை நாம் தத்தெடுத்து வளர்த்துக் கொண்டிருந்தால்... எத்தனை சீக்கிரம் முடியுமோ... ஏன் இரண்டரை வயதில் இருந்தே, உண்மையை... கதை போல் அவர்களிடம் சொல்ல வேண்டியது முக்கியம்.

“அம்மாவுக்கும் அப்பாவுக்கும் குழந்தையே இல் லையா... சாமிகிட்ட கேட்டோம். உடனே ஹோம்ல

இருந்து ரோஜாப்பூ மாதிரி இருந்த உன்னை நம்ம வீட்டுக்குக் கொண்டு வந்தோம்..." என்று சொல் லிச் சொல்லி வளர்ப்பதுதான் சரியான வழி. வேறு யார் மூலமோ அவர்கள் திடீரென்று தெரிந்து கொள்ளும் தண்டனையிலிருந்து அவர்களைத் தப்ப வைக்கும் வழி.

நாம் வாழ்ந்த, வாழும் வாழ்க்கையை ஒரு பாலன்ஸ் ஷீட்டாகப் போட்டால்... பலசமயம் மிஞ்சுவது, நஷ் டக் கணக்கே. நழுவ விட்ட வாய்ப்புகள், நடுக் கழூட்டும் தவறுகள், 'இன்னும் படித்திருக்கலாம், அப்பா பேச்சைக் கேட்டிருக்கலாம், கணவரோடு சண்டையைக் குறைத்திருக்கலாம்'... இத்யாதிகள், இவை எதுவும் பெரிய இழப்பல்ல. சரி செய்து கொள்ளலாம். சரி செய்யா விட்டாலும் பரவா யில்லை.

ஆனால்... 'நான் நல்ல அம்மாவா இல்லையோ?' என்ற குற்ற உணர்வு வந்துவிட்டால் அது பெரும் இழப்பு. ஒருநாளும் சரி செய்ய முடியாத வலி நிரம் பிய இழப்பு. அப்படி ஓர் இழப்பு வரும்முன், மேலே நாம் பேசியவற்றை... முன்ஜாக்கிரதையாக சரி பார்த்து வைத்துக் கொள்வது நல்லதுதானே!

"குழந்தைகள் நம்மிலிருந்து வந்தவர்கள் இல்லை. நம் வழியாக வந்தவர்கள்" என்கிறார் கவிஞர் கலீல் ஜிப்ரான். நம் வழியாக வந்த அவர்கள், இந்தப் பெரு நிலத்தில் கால் பதித்து நிற்கவும், கனவுச் சிறகுகள் விரித்துப் பறக்கவுமான உறுதியையும் நம்பிக்கை யையும் நாம்தானே அவர்களுக்குத் தர முடியும்!

# 13. மோதி மிதிக்க... முகத்தில் உமிழ...

எத்தனை பேர் தயார்?

'இன்று இரவு என்னோடு தங்குவதற்கு உனக்கு விருப்பமா?' (Would you like to stay with me tonight?) என்று மேலதிகாரி அஜய் சக்கரவர்த்தி அலுவலக கான்ஃபரன்ஸுக்காக வந்த இடத்தில், கேட்டபோது, சுமித்ரா அரண்டு போனாள். தெருவில் போகிறவளை 'வர்றியா?" என்று அழைக்கும் அதே ஆபாசம்தான் இதிலும். என்ன, சர்க்கரை தடவிய ஆங்கிலத்தில் கேட்கிறான்.

கல்யாணமாகி ஒரு குழந்தையும் பெற்ற ஒரு பெண்ணைப் பார்த்து, திருமணமான ஓர் உயர் அதிகாரி எந்தத் துணிச்சலில் இப்படிக் கேட்கிறான்? நான் அலறமாட்டேன்; பளாரென்று கன்னத்தில் அறையமாட்டேன்; எம்.டி-யிடம் புகார் செய்யமாட்டேன் என்று என் நெற்றியில் எழுதியிருக்கிறதா?'

எம். என்.சி. (மல்டி நேஷனல் கம்பெனி) ஒன்றில் கண்ணியமான பதவியில் இருக்கும் என் தோழி சுமித்ரா எனக்கு அனுப்பியிருந்த இ - மெயில் நீண்டுகொண்டே போனது.

பெரும் அலுவலகங்களில் பதவிகளை அலங்கரிக்கும் சுமித்ராக்களுக்கு மட்டுமா இந்தச் சோதனை? போன வாரம் என் வீட்டில் வேலை செய்யும் நாகம்மா திடீரென்று இரண்டு நாள் வரவில்லை.

'சேவகரால் பட்ட சிரமம் மிக உண்டு கண்டீர்; சேவகர் இல்லாவிடிலோ செய்கை நடக்கவில்லை' என்ற பாரதியார் கவிதையை முணுமுணுத்தபடி இரண்டு நாளும் நானே பாத்திரம் தேய்த்து, வீடு பெருக்கி வெறுத்துப் போனபின், நாகம்மா வந்து சேர்ந்தாள். கன்னங்கரிய முகம்; அழுது அழுது மினுமினுத்திருந்தது. ரௌத்ரம் ஏறிச் சிவந்த விழிகள் படபடக்க நாகம்மா பேசியதைக் கேட்டு நான் அதிர்ந்து போனேன்.

கணவன், குடிகாரன் என்பதால், என் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு, கட்டட வேலைக்கும் போகிறாள் நாகம்மா. எப்படியாவது குழந்தைகளுக்குக் கால் வயிற்றுக் கஞ்சியாவது ஊற்றியாகணுமே! அவ்வப்போது அவளிடம் பல்லைக் காட்டி வந்த 'மேஸ்திரி' என்ற பெயரில் திரியும் ஓர் ஓநாய், நேற்று முன்தினம் அவள் 'பாண்டு' தூக்கும்போது திடீரென வந்து புடவை ஒன்றை நீட்டியிருக்கிறான். ஞாயிற்றுக்கிழமை வேலை இருப்பதாகப் பொய் சொல்லிவிட்டுத் தனியாக அவள் வர வேண்டுமாம். 'பாண்டை' தூக்கிப் போட்டுவிட்டு வீட்டுக்குப் போய் முடங்கியவள்தான். இரண்டு நாட்கள் கழித்து, என் முகத்துக்காக இப்போது வேலைக்கு வந்திருக்கிறாள்.

எனக்கு, சுமித்ராவின் கையையும், நாகம்மாவின் கையையும் பிடித்து என் இரு கன்னங்களிலும் வைத்துக் கொள்ளத் தோன்றியது. யுக யுகாந்திரங்களின் கண்ணீர் வாசம் அடிக்கும் கைகள்தானே இவை?

மகாபாரதத்தில், "இந்த உலகில் நீங்காத விசித்தி ரம் எது?" என்று யட்சன் கேட்க, "நாள்தோறும் மற் றவர் இறப்பதைப் பார்த்தும் தான் சாஸ்வதம் என்று மனிதன் நினைக்கிறானே, அதுதான் விசித்திரம்" என்கிறான் தருமபுத்திரன். அதைவிட விசித்திரம், பெண்ணின் உடல் வழியாக மண்ணுக்கு வரும் ஆண், பெண்ணை வெறும் உடலாக மட்டுமே பார்ப்பது.

'காவிரி, தென்பெண்ணை, பாலாறு தமிழ் கண்ட தோர் வைகை, பொருநை நதி...' என்று தமிழ் நாட்டு ஆறுகளை பாரதி பட்டியல் போட்டார். இன்று தமிழ்நாடு எல்லா நதி வளத்தையும் இழந்து நிற்பது போல, பெண்ணை சக்தி என்று உருவகம் செய்த இந்த மண்ணில்தான் அவள் வெறும் காமப் பொருளாக மட்டும் உருவகிக்கப்படுகிறாள்.

போரில் வென்ற அரசன், தோற்ற மன்னனின் நக ருக்குள் நுழைந்ததும் முதலில் சிறை பிடிக்கப்பட் டவர்கள் பெண்கள் என்பது தான் சங்க காலம் தொட்டு நமது சரித்திரம். எந்த இனத்தின் மீது பகை வந்தாலும் முதல் 'டார்கெட்' அந்த இனத்தின் அபலைப் பெண்கள்தான் என்பது காலம் கால மாக இந்தச் சமூகம் அங்கீகரித்திருக்கும் அவமா னம். தேசப் பிரிவினையின்போது கொல்லப்பட்ட வர்களைவிட, பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பெண்களின் எண்ணிக்கை அதிகம் என்கிறது புள் ளிவிவரம்.

ஹோட்டலில், தியேட்டரில், பஸ், ரயில் பயணத்தில், அலுவலக லிஃப்ட்டில், கூட்டமான கடையில்... சற் றும் எதிர்பாராத நேரத்தில் மேலே ஊறும் ஆண்

விரல்கள், காதில் மோதும் ஆபாச 'கமென்ட்டுகள்', அஜய் சக்கரவர்த்தி மாதிரி, ஓநாய் மேஸ்திரி மாதிரி வெளிப்படையான 'அழைப்புகள்'... இவற்றைச் சந் திக்காத பெண் இருக்க முடியுமா என்ன?

பெரும்பாலும், பாலியல் சீண்டல்களை தைரிய மாக எதிர்த்து நிற்பதற்குப் பெண் தயாராக இருப் பதில்லை என்பதே உண்மை, சம்பவம் நடந்த உடனே, மனசுக்குள் மிகக் குன்றிப் போகிறாள். 'யாராவது கவனிச்சாங்களா?' என்று பார்க்கிறாள். கால்கள் நகர மறுக்கின்றன. 'அடுத்து என்ன செய் யப் போகிறான்?' என்ற பயம் போர்வை போல் கவிழ் கிறது. சில மணி நேரத்தில் இருந்து சில நாட் கள் வரை அந்தச் சம்பவத்தின் தாக்கம் அவளுள் இருக்கிறது. நிகழ்ந்துவிட்டதை, வேறு வேறு வித மாக மனசுக்குள் பெண் நடத்திப் பார்க்கிறாள்.

அவன் அருகில் வந்தபோதே உஷாராகி சத்தம் போட, கூட்டம் சூழ்ந்து அவனை உதைக்கிறது... இல்லை.... கையிலிருந்த மிளகாய்த் தூள் ஸ்ப் ரேயை அவன் முகத்தில் அடிக்க, எரிச்சலில் கதறித் துடிக்கிறான் அந்தக் கயவன்... இல்லையில்லை... கராத்தே கற்றிருந்த அவள் கையால் ஒரு வெட்டு வெட்ட அலறிச் சரிகிறான் அந்த அயோக்கியன்... இவை எல்லாம் கானல் நீர் கற்பனை.

நிஜத்தில், பெரும்பாலும் நடப்பது - சுமித்ரா ஒரு மாதம் 'மெடிக்கல் லீவ்' போட்டதும், நாகம்மா வேறு ஒரு 'கன்ஸ்ட்ரக்ஷன் சைட்டில் வேலைக்குப் போன தும்தான்.

விஷயம் வேறு விதமாகவும் விமரிசனம் செய்யப் படுவது நமக்குத் தெரியாததில்லை. 'பிரச்னையே பெண்களின் உடைகளால்தான்' என்று ஒரு கோஷ்டி கத்திக் கத்தி தொண்டை கமறிப் போயி ருக்கிறது. என்ன ஆபாச உடைகள்? 'துப்பட்டா' இல்லாத 'குர்த்தி', 'ஸ்பெகட்டி' ஸ்ட்ராப் உள்ள 'டி-ஷர்ட்', 'லோ வெயிஸ்ட்' ஜீன்ஸ். 'இப்படி அரைகு றையா டிரெஸ் போட்டு ஆண் மனசை கலைத் தால், பாவம் அவனும்தான் என்ன பண்ணுவான்..' என்கிற மாதிரி உருக்கம் ஏகப்பட்ட நபர்களிடம் இருக்கிறது.

உண்மையில், இந்த மாதிரி 'அல்ட்ரா மாடர்ன்' பெண்களிடம் பெரும்பாலும் எந்த ஆணும் வம்பு செய்வதேயில்லை. பாதிக்கப்படுவதெல்லாம் பாந் தமாக உடை உடுத்தியிருக்கும் நடுத்தர வர்க்கத் துச் சராசரிப் பெண்கள்தான். இவர்கள் பெரும்பா லும் குரலற்றவர்கள்; நாளைய பிரச்னைகள் கருதி இன்றைக்கு நடக்கும் எதையும் சகித்துக் கொள்ப வர்கள்.

கண்ணகியும் கோவலனும் கவுந்தி அடிகளு டன் மதுரைக்கு நடந்துபோனபோதே போக்கிரி கள் சிலர் கிண்டல் செய்தார்களாம். நல்லவேளை யாக, கண்ணகியின் உடைதான் அந்தக் கயமைக் கும் காரணம் என்று யாரும் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியதாகத் தெரியவில்லை. காலம் காலமாக, ஆணுக்குப் பெண் உடல் ஒரு கேளிக்கை சாத னம். அவளைச் சிநேகிதியாக, சக உயிராகப் பார்க் கப் பழகாத பார்வைக் கோளாறுதான் காரணமே தவிர உடைகள் மட்டுமே அல்ல. மகாகவி பாரதிக் கென்ன? சொல்லிவிட்டார். 'மோதி மிதித்து விடு

பாப்பா... பாதகம் செய்பவரின் முகத்தில் உமிழ்ந்து விடு', என்று. நிஜத்தில்...

மாநகரப் பேருந்தில் ப்ளஸ் டூ மாணவி கம்பியைப் பிடித்தபடி நிற்கிறாள். பின்பக்கமாக ஒரு தடிமாடு அவள் மேல் சாய்ந்து சரிகிறது. குழந்தையின் முகம் கலங்கிப் போயிருக்கிறது. 'ஹேண்ட்பேக்' பெண்கள் எல்லாம் இதை கவனித்தும், கவனிக்காதது மாக இருக்கிறார்கள். கடைசி ஸீட்டில் மீன் கூடையோடு ஒருத்தி நிற்கிறாள். கூறு கட்டி மீன் விற்றுக் குடும்பம் நடத்தும் அன்றாடங்காய்ச்சி அவள். அந்தக் குழந்தைக்கு நடக்கும் கொடுமையைக் கண்டதும் கூச்சல் போடுகிறாள். "ஏய்! யாருடா அவன், கஸ்மாலம்... பேமானி..." - அவளது சத்தத்தில் தடிமாடு தானே விலகி பஸ்ஸில் இருந்து தாவிக் கீழே குதிக்கிறது.

உட்கார்ந்திருந்த பெண்களின் படிப்பும், பதவியும் அவர்தம் தைரியத்தை உலர வைத்துவிட்டது. கூடைக்காரிக்கோ இழக்க எதுவுமில்லாத இழுபறி வாழ்க்கை. சிறுமை கண்ட இடத்தில் சீறுகிறாள். இதுதான் கொடுமையை எதிர்ப்பது.

எல்லா ஆண்களும் கெட்டவர்கள் அல்லதான். ஆனால், சீண்டும் ஆண் யாராகவும் இருக்கக்கூடும் என்ற எச்சரிக்கைதான் கொடுமையை எதிர்ப்பதில் முதல் கட்டம்.

அலறிக் கத்தி அத்தனை பேரின் கவனம் ஈர்த்தல், கையில் கிடைக்கும் 'ஹேர் பின்னோ, மிளகாய்ப் பொடியோ, செருப்போ, நகமோ... தவிர்க்க முடியாத

நேரத்தில் எதிர்த் தாக்குதலுக்குத் தயங்காத மன நிலை இரண்டாவது 'ஸ்டெப்'.

"இதுக்கு ஒப்புக்கிடலைனா உனக்கு வேலை போயிடும்" என மிரட்டும் மேலதிகாரியிடம், "உன் வேலை... என் கால் தூசுடா நாயே" என்று முகத் தில் அறையும் துணிச்சல் மூன்றாம் நிலை.

வேறு யார் மூலமாவது விஷயம் வீட்டில் தெரியுமுன் நாமே விளக்கிச் சொல்லிவிடும் நெஞ்சுரம் நான் காவது 'ஸ்டேஜ்'.

ஒருவேளை எதுவும் சாத்தியமில்லை என்றாலும், நடந்த சம்பவத்துக்காகக் குமைந்தும் பயந்தும் போகாமல் நிமிர்ந்த நன்னடை; நேர் கொண்ட பார் வையோடு தொடர்ந்து செல்லும் ஞானச் செருக்கு – எல்லாவற்றையும் விட அவசியத் தேவை!

# 14. பிரியாத நட்பென்னும் பெரு வரம் வாய்க்குமோ?

சமீபத்தில் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றேன். மதுரையின் வெயில் போலவே... மழையும் உக்கிரம் தான். அடித்துக் கொட்டிய மழையில்... வடக்குக் கோபுர வாசலில் முழங்காலுக்கு மேல் தண்ணீர், பின்னால் தொங்கும் சேலைத் தலைப்பும், கணுக் கால் புடவையும் நனையாமல் தூக்கிப் பிடித்து, கவ னமாக ஒவ்வோர் அடியாக வைத்தேன், அப்போது தான் அவர்களைப் பார்த்தேன்.

இரு சிறு பெண்கள். பத்து, பன்னிரண்டு வய திருக்கும். 'உடைகள் நனையுமே' என்ற கவ லையோ 'தலை ஈரமாகி விடுமே' என்ற கவ லையோ இன்றி, 'சளப் சளப்' என்று தண்ணீர் காலில் படும் இன்பத்தை முழுவதும் அனுபவித் தபடி, ஒருவர் கையை இன்னொருவர் பிடித்து, சிரிப்பில் குலுங்கியபடி நடந்தனர். அந்தத் தோழி கள் பற்றிக் கொண்ட கைகளில் என்ன சுவாதீ னம். என்மீது நீர் தெறிக்குமோ என பயந்து நான் ஒதுங்கிய ஒரு நொடியில், "அக்கா... பயப்படாதீங்க" என்று கோரஸாகக் கத்திவிட்டுப் போகும் குர லில் எத்தனை சுதந்திரம், எத்தனை சந்தோஷம்! அந்த மழைக் குளிரை விரட்டிய கதகதப்பு அவர்க ளின் தோழமை தந்த கதகதப்பல்லவா? பார்த்துக் கொண்டே நின்றேன்... கையிலும் மனதிலும் கனக் கும் சுமைகளுடன்!

கடந்து வந்த பாதையைக் கொஞ்சம் திரும்பிப் பார்ப்போமா? தோழிகளை எங்கே இழந்தோம் நாம்? பத்தாம் வகுப்பில் நான், அனிதா, சுதா, முத்துலட்சுமி எல்லோரும் ஒரே பெஞ்ச். வகுப்பில் எங்கள் ரகளை ரொம்ப பிரபலம். ஃபிஸிக்ஸ் நடத்தும் பொறுமை மிகு அமலோற்பவம் மிஸ்ஸின் வகுப்பில், பசி பொறுக்காது சுதா பெஞ்ச் கீழே உட்கார்ந்து சாப்பிட்டு, விக்கியதும், சத்தம் எங்கே வருகிறது என்று மிஸ் குனிந்து பார்த்ததும் மறக்க முடியாத சம்பவம்.

ஒரே பெஞ்ச்சில் இருப்பதால்தான் தொல்லை என்று வேறு வேறு பெஞ்ச்சுக்கு மாற்றிவிட்டார். நான்கு பேரும் உடனே வாழ்வை வெறுத்தோம். மையிட்டு எழுதவில்லை. மலரிட்டு முடியவில்லை. உணவையும் உலக இன்பங்களையும் துறந்து மூன்று நாள் அழுது களைத்தோம். என் அழுகை பொறுக்காமல், என் அம்மா மிஸ்ஸிடம் வந்து வேண்டுகோள் வைக்க, 'இனி சேட்டை கூடாது' என்ற உத்தரவுடன் திரும்பவும் ஒரே பெஞ்ச்சில் உட்கார வைக்கப்பட்டோம். -

அவர்கள் மூவரும் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்றுகூட எனக்குத் தெரியாது. விசித்திரமாகத் தோன்றலாம். ஆனால், அதுதான் பெண்ணின் வாழ்க்கை.

ஒரு நிலத்தில் முளைக்கும் நாற்றைப் பிடுங்கி எடுத்து, வேறு ஒரு நிலத்தில் நடுவது போல், பெண்ணும் ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டுக்குள் திருமணத்துக்குப் பின் நடப்படுகிறாள். இதில்,

அவள் இழந்து போனவை பட்டியலில் முதல் இடம் பிடிப்பது, அவளின் நட்பும் தோழிகளும்தான்.

'பசங்க' படத்துல வர்றது மாதிரி, 'இந்த அடிய நாளைக்கு வரைக்கும் மறக்காத..'னு தினமும் ஸ்கூல் விட்டுப் போகும்போது அடிச்சுட்டு ஓடுற விஜயாவோட கல்யாணப் பத்திரிகை வந்ததே... அப்போ பார்த்து மாமியார் காலை ஒடிச்சுக்கிட் டாங்க; போக முடியல. காலேஜ்ல எதுக்கெடுத் தாலும் சிரிப்பாளே சாந்தி... எங்கேன்னே தெரி யலப்பா. எப்படியோ தீபாவோட போன் நம்பர் கிடைச்சுது. ஆனா, இன்னும் பேச நேரம் வாய்க் கல..."

காலேஜில் நானும் ராணியும் எத்தனை நெருங்கிய ஃப்ரெண்டுகள். கவிதை என்றால் உயிர் எங்க ளுக்கு. இப்போது? அவள், கல்யாணமாகி குழந் தையும் பிறந்து, ஆளே மாறிப் போய்விட்டாள். எப் போது பார்த்தாலும் 'எங்க அர்ஜுன்... எங்க அர் ஜுன்' என்று சதா பெருமை...

இப்படி நழுவிப் போனவர்கள், தொலைந்து போன வர்கள், மறந்து போனவர்கள், மாறிப் போனவர்கள் பட்டியல் பெரிது, ரொம்ப ரொம்ப பெரிது.

சா.கந்தசாமியின் 'தொலைந்து போனவர்கள்' நாவ லில் வரும் கதாநாயகன் மாதிரியோ, 'ஆட்டோகி ராப்' படத்தின் சேரன் மாதிரியோ... பழைய நட்பைத் தேடிப் போய்ப் புதுப்பிக்கும் பெண்கள் யாராவது இருக்க முடியுமா? (அதுசரி... பள்ளிக்கால நண் பன், கல்லூரி நண்பன் என்று தேடித் தேடி பெண் ஒருத்தி தன் கல்யாணத்துக்குப் பத்திரிகை வைக்

கும் கதையை யாராவது சினிமா எடுக்க முடியுமா என்ன?) நேரத்தை விழுங்கும் வேலைச் சங்கிலியா, 'தான், தன் குடும்பம்' என்று பெண் மீது கவியும் தன்னலப் போர்வையா... எது காரணம் என்று தெரியவில்லை. ஆனால், திருமணத்துக்குப் பின் பெண்ணின் தோழமை தொலைந்து போய்விடுவது என்னவோ நிஜம்.

கிராமத்துச் சிறுமிகள் இருவரின் நட்புப் பற்றி வைரமுத்துவின் கவிதை நினைவில் கண் சிமிட்டுகிறது. புழுதியில் விளையாடி, பிரியாமல் இருக்க 'ஒரே புருஷனுக்கு இருவரும் வாக்கப்பட' கனவு கண்ட குழந்தைப் பருவ நட்பு சிதறிப் போகிறது...

'எப்படியோ பிரிவானோம்: இடி விழுந்த ஓடானோம்

தண்ணியில்லா காட்டுக்கு தாலி கட்டி நான் போக...

வரட்டூரு தாண்டி வாக்கப்பட்டு நீ போக...

உன் புருசன் உன் பிள்ளை உன் பொழப்பு உன்னோட...

என் புருசன் என் பிள்ளை என் பொழப்பு என்னோட...'

கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார், துரியோதனன் - கர்ணன், ராமன் - குகன், கிரேக்க புராணத்தில் வரும் டேமன் - பிதியஸ் என்று இலக்கியங்கள், புராணம்தோறும் போற்றப்படும் நட்பெல்லாம் ஆண்களுக்கு உரியது. மருந்துக்குக்கூட பெண்ணும் பெண்ணும் கொள்ளும் நட்பென்னும் பெருநேசம் பேசப்படவில்லை. நம் சங்க இலக்கியங்க

ளில் வரும் தோழியர், தலைவியின் காதலுக்குத் துணை போன அல்லது தலைவன் வருவான் என உறுதி கூறிய நன்னம்பிக்கை முனைகள் மட்டுமே.

நிஜத்தில்... அத்தி பூத்தது மாதிரி காட்சிக்குத் தெரியும் சில நட்புகள். போலீஸ் அதிகாரி ரத்தோர் போன்ற கொடூரர்களால் பாலியல் கொடுமைக்கு ஆளான டெல்லி டென்னிஸ் வீராங்கனை ருச்சிகா, தற்கொலை செய்து கொண்டாள். ரத்தோரின் முகத்திரையை உலகுக்குக் கிழித்துக் காட்டிய ஒரே சாட்சி, ருச்சிகாவின் தோழி ஆராதனா. 'என் தோழிக்கு நீதி வேண்டும்' என்று பதினெட்டு ஆண்டுகளாக வழக்கு நடக்கும்போதெல்லாம் இந்தியா வந்து போகிறாள். தற்போது ஆஸ்திரேலியாவில் செட்டில் ஆகியிருக்கும் ஆராதனா.

'எதிர் நீச்சல்' படத்தில் நாகேஷ் ஒரு வசனம் சொல்லுவார். 'நண்பனின் மரணத்தைவிட நட்பின் மரணம் கொடியது' என்று. தோழியின் மரணத்துக்குப் பின்னும், தோழமையை உயிர்ப்போடு வைத்திருக்கும் ஆராதனா மாதிரி எத்தனை பேருக்கு நட்பு வாய்க்கும்?!

என் மகளிடம் பள்ளியில் அவள் சிநேகிதிகள் யார் யார் என்று கேட்டேன். இரண்டு, மூன்று பேர்களைச் சொன்னாள்.

"எப்பவும் முதல் மார்க் வாங்கும் அர்ச்சனா இல்லையா?"

"அவளோடயும் பேசுவேன். ஆனா, ஃப்ரெண்ட் இல்ல."

"அட பைத்தியமே, முதல் ரேங்க் வர்ற பெண்ணை ஃப்ரெண்ட் பிடிச்சுக்கோ அதுதான் உனக்கு நல்லது..."

அவளது பெரிய கண்கள் என்னைப் பார்க்கின்றன. தீவிர யோசனையில் முகம் குவிய, கொஞ்ச நேரம் கழித்துச் சொல்கிறாள்...

"முதல் ரேங்க் வர்றான்னு ஃப்ரெண்டை மாத்த முடியாது. என் பழைய ஃப்ரெண்ட் வருத்தப்படுவா இல்ல?

நான் என் பெண்ணைப் பார்க்கிறேன். மூன்றரை அடியா அவள்! எத்தனை விஸ்வரூபம் எடுத்துவிட்டாள். 'நட்பைக்கூட கற்பைப் போல எண்ணுவேன்' என்று சொல்லாமல் சொல்லி விட்டாள் என் குட்டி தேவதை. வளர்ந்துவிட்ட நம் உலகத்தில் நட்பு என்பதே ஏதோ லாபம் கருதி. ஆனால், குழந்தைகள் எத்தனை புனிதமான இடத்தை நட்புக்குத் தருகிறார்கள்!

ஏதோ சர்டிஃபிகேட்டுகளைத் தேடும்போது என் பள்ளிப் பருவப் புகைப்படம் கிடைக்கிறது. வரிசை வரிசையான இரட்டைப் பின்னல் பெண்களுக்கு நடுவில் கன்னத்தில் திருஷ்டிப் பொட்டுடன் நான். ஐந்தாம் வகுப்பு 'ஏ' பிரிவு போட்டோவில் கீழ் வரிசையில் மூன்றாவதாக அமர்ந்திருக்கும் சுபத்ரா காந்திதான் எங்கள் க்ளாஸ் ஹீரோயின். காரணம், அவளுடைய அப்பா எங்கள் பள்ளி பஸ் டிரைவர். 'இவ்ளோ பெரிய பஸ்ஸை ஓட்டுற டிரைவரோட பொண்ணு பெரிய்ய ஆளாத்தானே இருக்கமுடியும்' என்று எங்களுக்குள் ஒரு நினைப்பு. பாண்டி

விளையாட்டுக்காகத் தாண்டி குதிக்க நாங்கள் கிழித்த கோடுகளைக் காலம் அழித்து விட்டது.

ஆனால், இப்போதும் கடற்கரைச் சாலையில் பயணிக்கும் போதெல்லாம், என்ன அவசரமானாலும், 'லேடி வெல்லிங்டன்' பள்ளிக்கூடத்தைக் கண்களில் ஈரம் கசிய, கழுத்து வலிக்கும்வரை திரும்பிப் பார்க்காமல் என்னால் கடக்க முடிந்ததில்லை.

பெருநதியில் விழுந்த மரம் போன்றது பெண்களின் வாழ்வு. நதியில் பயணத்தை ஒன்றாகவே தொடங்கிய பல மரங்களில் ஒவ்வொன்றின் பயணமும் வேறு வேறாகிப் போவது போல, தோழிகளின் சிரிப்பொலியோடு தொடங்கும் வாழ்வின் ஓட்டத்தில் ஒவ்வொருவராகப் பிரிவதும், ஒவ்வொரு நட்பையும் இழப்பதுமே இயல்பாகிறது.

'எதற்காகவும் என் சிநேகிதியைப் பிரியமாட்டேன்' என்று நிற்கும் என் மகளைப் பார்க்கிறேன். மதுரை மீனாட்சி அம்மன் கோயில் வாசலில் தேங்கிய மழை நீரில் கைப்பிடித்து நடந்த இரு சிறு பெண்களை நினைக்கிறேன்.

பிரியாத நட்பென்னும் பெரு வரம் இவர்களுக்காவது வாய்க்கட்டும்!

# 15. ஓர் இனிய மைல் கல்!

பதின்மூன்று வயது... பெண்ணின் வாழ்வில் ரொம்பச் சிக்கலான வயது.

'ரெண்டும் கெட்டான்' என்பார்கள் வீடுகளில், 'குழந்தை' என்று கொஞ்சவும் முடியாது.... 'வளர்ந்தவள்' என்று விலகவும் முடியாது.

கலீர் என்ற சிரிப்பு. ஓயாமல் யாரைப் பற்றியோ விமர்சனம். ரேகாவின் லேயர் ஹேர் கட் சூப்பர். ஷீலாவின் லஞ்ச் ரொம்ப போர். கெமிஸ்ட்ரி மிஸ்ஸுக்கு கெமிஸ்ட்ரியைத் தவிர மற்றது எல்லாம் தெரியும்...

சில நேரங்களில் ஓயாத பேச்சும், சில நேரங்களில் உறைந்த மௌனமுமாக திரியும் வயது. ஒரு பொழுது... 'அம்மா' என்பவள் ரொம்ப நெருக்கமான மனுஷியாகவும், இன்னொரு பொழுது... உலகில் தன் ஒரே எதிரி அவள்தான் என்றும் தோன்றும் வயது!

"கார்த்தி இஸ் ச்சோ ஸ்வீட் யா! வாட் அபௌட் ஷாருக்?! சீ... சீ... அதெல்லாம் அங்கிள்டி!"

கண்ணும் மனதும் மலர விழிக்கும் பருவம். உடலளவில் மாற்றங்கள்... எரிச்சலும், ரகசிய சுவாரஸ்யமும் தரும் மாற்றங்கள். அதை எதிர்கொள்ளப் போதிய அறிவோ, மனது விட்டுப் பேச ஆட்களோ இல்லாத ஏதோ ஓர் ஏக்கம் மனதைக் கவ்வும் பருவம். காரணம் தெரியாமலேயே சிலசமயம் கண்ணீர்; சில நிமிடங்களிலேயே குபீர் சிரிப்பு.

பதின்மூன்றில் தொடங்கும் பதின்பருவ வாழ்வு, பெண்ணைப் பொறுத்தவரை கொந்தளிக்கும் நதியில் செய்யும் 'ரிவர் ராஃப்டிங்' மாதிரி ஆபத்தான பயணம்தான்!

இன்று சென்னையில் எழுந்திருக்கும் பெரிய மால் ஒன்று என் அலுவலகத்துக்கு அருகில் உள்ளது. இரண்டு ஆண்டுகளாக அங்கு வேலையில் ஈடுபட்டு வந்த கொத்தனார்களையும், சித்தாள்களையும் நான் கவனித்து வந்திருக்கிறேன். அவர்களுள், ரவிக்கைக்குக் கீழே தெரியும் கை முழுக்க தேள் பச்சை குத்தியிருந்த அந்த நாற்பது வயது மதிக்கத்தக்க பெண்ணும், அவளின் பதினைந்து, பதினாறு வயதிருக்கும் பெண்ணும் எப்போதும் என் கவனம் இழுப்பார்கள். குறிப்பாக, அந்தப் பதின்வயதுப் பெண். நடையில் ஒரு திமிர். ரவிக்கையின் பின்பக்கக் கழுத்தின் சரிவு கொஞ்சம் அபாய அளவைத் தாண்டும். அம்மா என்ன சொன்னாலும், 'தே, சும்மா கிட' என்று சொன்னவாறே இருப்பாள்.

இரண்டு ஆண்டுகளில் வேலை முடிந்து, மால் திறக்கப்பட்டு விட்டது. ஒரு வாரம் முன்பு லஞ்ச் டைமில் வெளியே வந்தபோது, அந்த அம்மா, தன்னை உள்ளே விடச் சொல்லி வாசல் செக்யூரிட்டியோடு சண்டை போட்டுக் கொண்டிருந்தார். "இந்த வழியெல்லாம் க்ளோஸ் மா. அப்படிக்கா போ..." என்று விரட்டினார் செக்யூரிட்டி அந்த அம்மாவிடமிருந்து வெளிப்பட்ட கெஞ்சல், கத்தல், புலம்பல் என்று எதையுமே செக்யூரிட்டி சட்டை செய்யவில்லை. எனக்குத்தான் மனதைப் பிசைந்தது. பக்கத்துக் கடையில் டீ வாங்கிக் கொடுத்து, அந்த அம்மாவிடம் மெள்ள விசாரித்தேன்.

"இத்தா பெரிய கட்டடத்தை நாங்கதான் கட்டி னோம். தினக்கும் இந்த வாசல் வழியாத்தான் போவோம், வருவோம். இப்போ நாங்க போகக் கூடாதாம்ல..." என்று கோபத்துடன் கைகளை நெட்டி முறித்தார்.

"என் பொண்ணும்மா. பதினஞ்சு வயசுதான். இங்க வேலை செய்யும்போதே அப்படி இப்படினு நடுநடு வுல காணாம போயிடும். கழுதை... கேட்டா கத் தும், சண்டை போடும், ஆசிட் குடிச்சிடுவேன்னு மிரட்டும். நான் இந்தப் பாப்பேனா, வீட்டைப் பாப் பேனா..? ஒருநாள் பாத்தா ஆளைக் காணோம். மூணு மாசமா தேடுறேன். நேத்துத்தான் சொன் னாங்க... இங்க இருக்கிற செக்யூரிட்டி ஒருத்தன் தான் இட்டுக்கினு போயிருக்கான்னு. அதான் ஓடி வந்தேன்" என்ற குரல் கரகரத்தது.

"பாவம்மா இது. பசி தாங்காது. துடிச்சுடும். நல்லா வெச்சிருக்கான்னு தெரிஞ்சாகூட போதும். நான் போயிடுவேன்" என்று சொல்லும்போது வாழ்க் கைச் சூட்டில் அடிபட்ட அவருடைய கறுப்பு முகம் கன்றிச் சிவந்துவிட்டது.

பதின்பருவத்தில் வரும் காதல்... புயல் மாதிரி. காரண காரியங்கள், எதிர்காலம் என்ற எதையும் யோசிக்காத பயங்கரம் அது. தன்னை வித்தியாச மாகப் பார்க்கும், அல்லது மதித்து ஒரு வார்த்தை பேசும் முதல் ஆணிடம் சரிந்து விடுகிற முடிவற்ற இருள் பள்ளம் இந்தக் காதல்.

சித்தாள் வேலை செய்து கை காய்த்துப் போன அந்தத் தாயை, பார்த்துக் கொண்டே நின்றேன்.

அவள் கையால் கல் சுமந்து எழுந்த இந்த பிர மாண்ட கட்டடத்தில் அவளுக்கு அனுமதி இல்லா தது போலத்தான், பலசமயம் பெற்று வளர்த்த பிள் ளைகளின் பதின்பருவத்துக்குப் பின்னால் உள்ள வாழ்வுக்குள் பெற்றவர்களுக்கு அனுமதி இல்லா மல் போய்விடுகிறது.

சரி... பதின்பருவ மகள்களோடு தாய் எப்படிப் பழகு வது?

"தடி மாடு மாதிரி மேலே விழாதே", " அம்மா வீட்டுல இல்லைனா, குக்கர்ல ஒரு டம்ளர் சாதம் வைக்கத் தெரியாது..?", "தானா தலையைச் சீவிக்க ஒரு பதி மூணு வயசுப் பொண்ணால முடியாதா?" என்று வய தைக் குறிப்பிடும் விமரிசனங்கள் வேண்டாம்.

மாறாக, வீட்டுப் பிரச்னைகளில், " நீயும் உன் ஐடியா வைச் சொல்லு. கடைசியா அப்பா முடிவு எடுக்கட் டும்" என்று கேட்டு, நாம் அவர்களுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தின் மூலம் அவர்களின் வயதையும் பொறுப்பையும் உணரச் செய்யலாம்.

தனியறையில் போய் கதவைச் சாத்துவது, சதா போனில் பேசுவது, அடிக்கடி எரிச்சல்படுவது என் றிருந்தாலும் உடனே பாய்ந்து கண்டிக்காமல், விஷயத்தை அப்போதைக்கு விட்டுவிட்டு, பிறகு ஒருசமயத்தில், " நீ அப்படிச் செய்தது சரியா? நீயே யோசிச்சுப் பாரு..." என்று நட்பாகச் சொல்லலாம்.

பதின்மூன்று - வாழ்க்கைப் பாதையில் அது இனிய மைல் கல். சாதனைகளை நிகழ்த்தத் தேவையான உச்சகட்ட சக்தி அலைகள் உடலில் ஊறும் பரு

வம். வாழ்வைப் பற்றிய கனவுகள் மலரத் துவங்கும் தருணம். அப்போது தோன்றும் கனவுகள் எதிர் கால வெற்றிக்கான அஸ்திவாரங்கள்.

இந்த வயதில் வீடு அவர்களை அணைத்துக் கொண்டால், அவர்களின் தடுமாற்றங்களைத் தாங்கிக் கொண்டால், பதின்பருவப் பயணம் சுகமாக ஓடி, வெற்றி என்னும் கடலில் சங்கமிக்கும்... ஒரு நதி போல!

# 16. பயணம் செய்ய விரும்பு!

அலுவலக வேலையாக மும்பை சென்று, விமானத்தில் திரும்பும்போது அந்தப் பெண்ணைப் பார்த்தேன். இருபத்தி மூன்று வயதிருக்கும். ஜீன்ஸ், முரட்டுச் சட்டை, தட்டைத் தலைமுடி!

விமானத்தில் ஏறியதுமே லேப்டாப் பையை மேலே வைத்து விட்டு, பெல்ட் அணிந்து கொண்டாள். விமானப் பணிப்பெண், 'சாண்ட்விச்' விற்றபோது, ஜீன்ஸ் பாக்கெட்டிலிருந்து ஆண்கள் பயன் படுத்தும் பர்ஸை எடுத்து, ரூபாயை நீட்டினாள். கவ சகுண்டலமாக என் தோளில் தொங்கும் பெரிய ஹேண்ட்பேக், அந்த பர்ஸைப் பார்த்து வியந்தது. 'தனி வழிப் பயணம் எனக்கு ரொம்பவே பழக்கம்' என்று அவளது தோற்றம் வெளிப்படுத்திய தன்னம் பிக்கை, இன்றைய இளம்பெண்கள் மீது பிரமிப்பை ஏற்படுத்தியது.

நான் சிறுமியாக இருந்தபோது, எதிர்வீட்டில் இரு பது வயது மஞ்சுளா அக்கா, தெருமுனை கடைக்கோ தோழி வீட்டுக்கோ சென்றால், அவ ளின் பத்து வயதுத் தம்பி துணைக்கு வருவான். மானசீக காரை சதா ஓட்டிக்கொண்டும், எதிரே இல்லாத கவாஸ்கருக்கு பந்து போட்டுக் கொண் டும் வரும் அந்தப் பயல், அவளுக்கு எப்படிப் பாது காப்பு என்று எனக்குப் புரிந்ததே இல்லை.

இன்றைக்கும்கூட தனியே பயணம் செய்யும் பெண் களின் எண்ணிக்கை பத்து சதவிகிதம்தான் என்கி

றது புள்ளிவிவரம். பயணம் என்பது எல்லா காலங்களிலும் பெண்ணுக்குப் பெரும் சுமையே. ஔவையாரும், காரைக்கால் அம்மையாரும் தனிவழிப் பயணத்தின் ஆபத்துகளுக்கு அஞ்சியே கிழத்தன்மையையும் பேய் உருவத்தையும் வரமாக வேண்டிப் பெற்றனர். எனக்குத் தெரிந்து எந்த ஆண் பயணியும் கிழவனாகவோ... பேயாகவோ... வரம் கேட்டதில்லை. ஆணுக்குப் பயணம் என்பது சிறகு. பெண்ணுக்கு அதுவே விலங்கு.

'பின் வாசல், முன் வாசல் எல்லாம் கவனமாப் பூட்டணும், மூணு நாளைக்கு பால் பாக்கெட், நியூஸ் பேப்பர் வேண்டாம்னு சொல்லிடணும், திரும்பி வர்ற அன்னிக்கு ரெண்டு குடம் கார்ப்பரேஷன் வாட்டர் பிடிக்கச் சொல்லி பக்கத்து வீட்டு அகிலாம்மாகிட்ட மறக்காம சொல்லணும்...' என்று கிளம்பும் நேரத்திலும் அலை பாய்வது எப்போதும் பெண் தான். "லேட்டாயிடுச்சு. இதுக்குத்தான் நான் உன்கூட வர்றதில்ல" என்று கடுகடுப்பது எப்போதுமே ஆண்தான்.

ஆண்கள், 'ஸ்ட்ரெஸ் ஜாஸ்தியாயிடுச்சு' என்று சொல்லிவிட்டு தன் நண்பர்களுடன் நாலு நாள் டூர் கிளம்பி விடுகிறார்கள். டூர் வேண்டாம்... அட்லீஸ்ட் உறவினர் வீட்டுத் திருமணத்துக்காவது பெண்களால் உற்சாகத்துடன் கிளம்ப முடியுமா?

கிளம்பும் திட்டம் வந்தவுடனே காலண்டரைக் கண்கள் தேட வேண்டும். இந்த நாட்கள் மாதத்தின் கஷ்டமான தினங்களா? அதற்கான கூடுதல் ஆயத்தங்கள், தவிர்க்கவே முடியாத மாத்திரைகள்; சிறு குழந்தைகளுடன் பயணம் என்றால், அவர்

களுக்குத் தேவையான டயாப்பர் சமாசாரங்கள், பால் பவுடர் டப்பாக்கள், தெர்மாமீட்டர்; வீட்டிலிருப்பவர்கள் வயிறு வாடிவிடாமல் இருக்க இட்லிப் பொடி, புளிக்காய்ச்சல், வத்தல் எல்லாம் காலை நான்கு மணிக்கே ரெடியாக வேண்டும். அத்தனையும் முடித்துக் கிளம்பினாலும், வீட்டைப் பற்றிய நினைவே அவள் பயணம் முழுக்கத் துணையாக வரும். ஆமை, தன் ஓட்டைச் சுமப்பது போல... எல்லாப் பயணங்களிலும் பெண் வீட்டைச் சுமக்கிறாள்.

இயற்கையின் பிரமாண்டத்தை வியக்கவும், மனிதர்களைப் புரிந்து கொள்ளவும், வீட்டின் நாலு சுவர்களுக்குள் பெற முடியாத சில வாழ்க்கை தரிசனங்களைப் பெறவும் பயணங்கள் தேவை. பெண் தனியே போவது ஆபத்தா? இருக்கலாம். ஆனால்...

* பயணத்தின்போது உரத்த குரலில் தன் பயண விவரங்களை போனில் சொல்வதைத் தவிர்ப்பது.

* போகும் இடத்தின் விலாசம், அழைத்துப் போகும் நபரின் விவரங்களை பர்ஸிலும், செல்போனிலும் குறித்து வைப்பது.

* முக்கியமாக, 'நான் இல்லாவிட்டாலும் வீடு நன்றாகத்தான் இருக்கும்' என்ற நம்பிக்கையுடன் பயணத்தின் ருசியை அனுபவிக்கும் மன நிலையோடு இருப்பது!

இதை நினைவில் கொண்டால் ஆபத்துகளைத் தவிர்க்கலாம். மகாபாரதத்தில், "தனியே போகிறவ

னுக்கு எது துணை?" என யட்சன் கேட்க, "கல்வி" என்று பதில் தருகிறான் தரும் புத்திரன்.

இன்றைய இளம் பெண்கள் கல்வி தந்த சிறகுக ளைக் கொண்டு அடிக்கடி தனியே பயணிக்கிறார் கள். அவர்களின் இன்றைய பயணமும் பாதையும் சொகுசாக இருக்கலாம். ஆனால், கல்லிலும் முள் ளிலும் ரத்தம் சொட்டச் சொட்ட முதலில் நடந்த பெண் பயணி... ஔவையார்.

'புறநானூறு' மூலம் ஔவை சொல்வதைக் கேளுங் கள்...

'என் மூட்டையை எடுத்துக் கொண்டேன்

பொருட்களைக் கட்டிக் கொண்டேன்

மரம் வெட்டும் தச்சனிடம் தொழில்

கற்ற அவனது பிள்ளை

கோடரியுடன் காட்டுக்குச் செல்வது போல

நான் செல்கிறேன்

நான் எந்த திசை சென்றாலும்

அந்தத் திசையில்

எனக்கு சோறு கிடைக்கும்!'

இன்று நாம் பயணிக்கும் பாதைகளில் தட்டுப்படு வது ஔவையின் ரத்தம் தோய்ந்த காலடித் தடங் கள்தானே!

# 17. பெண்ணுக்கு எதிரி பெண்ணேதானா?

"காலேஜுல இருந்து நான் வீட்டுக்குப் போக ஏழு மணியாவது ஆயிடும். என் வீட்டுக்காரர் ஆறு மணிக்கே வந்துடுவாரு. பாவம்... நான் போய் டீ போட்டுத் தர்ற வரைக்கும் காத்துட்டே உட்கார்ந்திருப்பாரு..." என்று சொன்ன செல்வி, மாலை நேர கல்லூரி ஒன்றின் பேராசிரியர்.

"டீ போட்டுக்கக்கூட தெரியாதா அவருக்கு?"

"அப்படித்தான் அவங்கம்மா வளர்த்து இருக்காங்க!"

"உன் வீட்டுல வேலை செய்யறாங்களே தாயம்மா... சாயங்காலமானா... வந்து துணி மடிச்சு, பெருக்கிட்டு போறாங்கதானே. அப்படியே டீயும் போட்டுக் கொடுக்கச் சொல்லேன்..."

தலையாட்டினாள்.

மூன்று மாதம் கழித்து, செல்வியைப் பேருந்தில் பார்த்து, தாயம்மாவின் தேநீர் சேவை எப்படிப் போகிறது என்று கேட்டேன்.

"அவள வேலையில இருந்து நிறுத்திட்டேன்!"

"என்ன ஆச்சு?"

"இல்ல... அவ டீ ரொம்ப நல்லா போடறானு... பத்து முறை சொல்லிட்டாரு. நாம உசுரை உருக்கி எது செய்தாலும் ஒரு சொல்லு வராது... 'ஒரு டீக்கு இவ்வளவு பாராட்டா?'னு கடுப்பாயிடுச்சு."

அன்றிரவு என் குளிர்ந்த அறையின் மௌனத்தில், செல்வியைப் பற்றி மன நல மருத்துவரான இன்னொரு தோழியிடம் போனில் பேசிக்கொண்டிருந்தேன். "இன்னொரு பெண்ணின் உயர்வை சட்டென்று ஏற்க முடியாமைதான் பெண்களின் ஆழ் மனக்கூறு. அதுவே அவர்களின் தீராத போராட்டத்தனத்துக்கான அஸ்திவாரம் கூட. பெண்ணின் அக உணர்வுகளில் ஒருநாளும் ஆண் அவளுக்குப் போட்டியே அல்ல. இன்னொரு பெண்தான்!" என்று சொன்னாள்.

"பெண்கள் எம்.எஸ்.சுப்புலட்சுமியை ரசிக்கலையா? இந்திரா காந்தியைப் பார்த்து வியக்கலையா?" - இது நான்.

"செலிப்ரிட்டியா உயரத்துல இருக்கறவங்கள ரசிப்பாங்க, வியப்பாங்க. அன்றாட வாழ்க்கையில எதிர்படறவங்கன்னா ஏற்கறது கொஞ்சம் கஷ்டம்!" - அவள்.

உண்மையா?

'எங்க பிராஞ்ச்சுக்கு புது மேனேஜரா வந்திருக்காளே லதா சௌத்ரி... ஒரு நாளைக்கு நாலு மணி நேரம் கஸ்டமர் மீட்டிங்னு வெளியே போயிடறா. பாஸோட ரொம்ப நெருக்கமாம்!'

'விமலாதான் இந்த வருஷ கிளப் செக்ரட்டரியா? என்ன பிரயோஜனம்? வீட்டைக் கவனிக்கறதே இல்லையாமே!'

நிறைவை ஏற்க முடியாத குறைகள்... குறைகள்... குறைகள்!

வீட்டுக்கு வரும் மருமகளுடனான மாமியாரின் உறவு எந்தப் புள்ளியில் விலக ஆரம்பித்தது. தன் மகனுக்கு அவளை ரொம்பப் பிடிக்கிறது என்று உணரத் தொடங்கிய அன்றுதானே? 'இப்படியா உங்க வீட்டில் ரசம் வைப்பாங்க?', 'ஒரு மண்ணும் சொல்லிக் கொடுக்கலை உங்க வீட்டில' - இப்படி தொடங்கும் சுருதி பேதங்கள். 'ஏன் உங்கம்மா எல் லாத்திலேயும் 'இன்டர்ஃபியர்' பண்றாங்க?' என்று ஒலிக்கும் எதிர்க் குரலின் வெம்மை.

ரசத்துக்குக் கரைத்துவிடும் பெருங்காயத்தோடு சிறிது பெருந்தன்மையையும் கரைத்து விட்டால் ரசமும் மணக்கும், வாழ்க்கையும் இனிக்கும் என்ற புதிய சமையல் குறிப்பைப் புரிந்துகொள்ள ஏன் தயங்குகிறது பெண்ணின் மனம்? இதை உணர மறுக்கும் பிடிவாதம்தான் பெண்மையா?

ஒரு பெண்ணின் ஒழுக்கம் பற்றிய விமரிசனங் கள் மிகப் பல நேரங்களில் பிற பெண்களாலேயே தொடங்கி வைக்கப்படுகின்றன!

நெருங்கிய உறவாகவே இருந்தாலும் மற் றொரு பெண்ணுக்கு தன்னைவிட எதுவும் அதி கம் கிடைத்துவிடுவதில் மன நெருடல், கோபம் கொள்ளாத பெண்கள் ரொம்பக் குறைவு!

பெண்ணுக்கு பெண்ணே எதிரி!

பெண்கள் மீது வீசப்படும் குற்றச்சாட்டுகள் இவை எல்லாம்.

பள்ளி நாட்களில் மனித பிரமிட் என்று ஓர் உடற்ப யிற்சி உண்டு. பத்துப் பெண்கள். ஒருவரை ஒருவர் பிடித்துக் கொண்டு வட்டமாக குனிந்த தலையுடன் நிற்க வேண்டும். அவர்களின் தோள்கள் மீது ஐந்து பெண்கள் நிற்பார்கள். ஐந்து பேரின் மீது மூன்று பேர். அவர்கள் மேல் இருவர். கடைசியாக இரு வரின் தோள்களில் காலை வைத்து ஒரு பெண் தேசியக் கொடியை வீசியபடியே நிற்பாள். கைதட் டும் கூட்டம் பார்ப்பது உச்சியில் நிற்கும் அந்த ஒரு பெண்ணைத்தான். ஆனால், எங்களுக்குப் பயிற்சி தரும் சாரா டீச்சர் சொல்லுவார்.

"உச்சியிலே இருக்கிறவ அங்க நிக்கணும்னா கீழே இருக்கிற பத்துப் பேர்ல ஒருத்திகூட மறந்தும் தலையைத் தூக்கக்கூடாது. இவ தலையைத் தூக் கினா, அவ பேலன்ஸ் போயிடும்."

இன்று பெண்கள் அடைந்திருக்கும் எல்லா முன் னேற்றமும் இந்த பிரமிட் மாதிரிதான். நமக்காக உழைத்த அம்மா, அழுத அக்கா, குரல் நடுங்க ஆசீர்வாதம் செய்த பாட்டி, உதவி செய்த பக்கத்து வீட்டு அத்தை, பெருந்தன்மையான ஒரு மாமியார், படிக்கச் சொன்ன டீச்சர், ஃபீஸ் கட்ட உதவிய சிநேகிதி... யார் யார் தோள் மேலோ நின்று ஒவ் வொரு பெண்ணும் ஏறி வருகிறாள். அவளையும் கடந்து ஏறிப்போகும் இன்னொரு பெண்ணுக்கு

இவள் தோள் தருவது, மனிதாபிமானம் மட்டுமல்ல அவளது தார்மீகக் கடமைகூடத்தான்.

# 18. அச்சம் தவீர்!

நதிகளில் யமுனைக்குத் தனி இடம் உண்டு. இந்திய நதிகளில் கருப்பானவள் அவள் தான். குழந்தை கிருஷ்ணனை வசுதேவர் யமுனைக்கு நடுவே தூக்கிச் செல்கையில், பால கிருஷ்ணனின் பாதம் பட்டு யமுனை கருப்பானாள் என்று விவரிக்கிறது ஓர் இந்திப்பாடல்.

யமுனையில் குளிப்பவர்களுக்கு மரணமும் கிடை யாதாம்; பயமும் தோன்றாதாம். ஏனெனில் யமுனா, சூரியனின் புதல்வி. எமனோடு கூடப்பிறந்த இரட் டைப் பிறவி. எமன் மரணபயம் தருகிறவன். யமு னையோ அதைப் போக்கி விடுபவள்.

நதிகளின் பெயர்களைச் சூடிக்கொண்ட பெண் களை எனக்கு மிகவும் பிடிக்கும். அதிலும் குறிப் பாக யமுனா...

என் கல்லூரி நாட்களில் NSS (என்.எஸ்.எஸ்.) எனும் சமூகசேவைக்காக வாரத்தில் ஒருநாள் எங் களை வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்வார் கள். அதில் ஒருமுறை பார்வையற்ற மாணவியர்க் குப் பாடம் படித்துக் காட்டும் பணி எனக்குக் கிடைத்தது.

அங்குதான் யமுனா எனக்கு அறிமுகமானாள். என் வயதுக்காரி. குழந்தைப் பருவத்தில் 'கண்வ லிக்காக' கிராமத்து மருந்து எதையோ கண்களில் ஊற்றியதால் அவளுக்குப் பார்வை பறிபோனதாம். அம்மா இல்லை. குடும்பமும் அவளை ஒதுக்கிவிட்

டது. எப்படியோ தட்டுத் தடுமாறி எம்.ஏ., வரை வந்துவிட்டாள்.

கேம்ப் முடிந்த பின்னரும் எங்கள் நட்பு தொடர, அவளுக்காக பரீட்சை எழுதும் 'ஸ்க்ரைப்' (Scribe) ஆக நான் ஒப்புக் கொண்டேன்.

ஒரு மழை நாளில், என் வீட்டுக்கு வந்த யமுனாவுக்காக நான் அங்குமிங்கும் நடந்தவாறே பாடம் வாசித்துக் கொண்டிருந்தேன். இடையே வந்த என் அத்தை இருவருக்கும் 'காபி' தர, படிப்பு தடைபட்டது. அத்தையின் கரிசனமும், கைமணமும் காபியின் சுவை கூட்ட, அதில் லயித்துக் கிடந்த நான் சில நிமிடங்கள் கழித்துப் பார்த்தால் புத்தகத்தைக் காணவில்லை.

டெலிபோன் மேஜையில்... டீப்பாய்க்கு அடியில் நாற்காலியின் பின்னால்... நாளிதழ்க் குவியலில் பல இடங்களில் தேடியும் புத்தகம் என் பார்வையில் படவில்லை.

'எங்கே தொலைஞ்சுது இந்த புக்?', என்று நான் பொறுமை இழக்க, "பாரதி... நீங்க நடந்துக்கிட்டே தானே படிச்சீங்க... எதுவரைக்கும் நடந்து போனீங்களோ... அங்கே பாருங்க", என்றாள் யமுனா. அங்கேதான் இருந்தது.

பார்வையில்லாதவர்களின் வாழ்வியல் முறைகளில் ஒரு துல்லியம் உண்டு. இந்த உலகை உடலின் எல்லா உறுப்புகளாலும் அவர்கள் அறிகிறார்கள். எந்தப் பொருளையும் கை மறதியாக வைத்து

விட்டு அவர்கள் தேடுவதில்லை என்பதை அன்று தான் நான் தெரிந்து கொண்டேன்.

ஒருநாள் யமுனாவிடமிருந்து போன். "ஃபீஸ் கட் டாத்தால் என்னை ஹாஸ்டல்லேர்ந்து வெளியேத் திட்டாங்க பாரதி. லக்கேஜோட தெருவுல நிக்கி றேன்" என்றாள். அரக்கப் பரக்க ஓடி அவளது விடுதிக் காப்பாளரைப் பார்க்க முயற்சித்தேன். பல னில்லை. "சரி யமுனா, என் வீட்டுக்கு வா" என்று அவளை அன்போடு அரவணைத்து, அவளின் பெட்டிப் படுக்கை மற்றும் இதரப் பொருட்களை ஆட்டோவில் அடைத்து வீட்டுக்கு வந்தேன்.

"ரெண்டு நாள் தங்க இடம் கொடுத்தாப் போதும்... அப்புறமா, நான் எப்படியாவது பாத்துக்கிறேன்"... கலங்கிய யமுனாவைக் கைப்பிடித்துத் தேற்றினர் என் பெற்றோர். ஆறுபேர் வசித்த எங்கள் சிறு வீட் டில் ஓரிருநாள் தங்கிவிட்டு, அவளது மாமா வீட் டுக்கு யமுனா போகலாம் என முடிவானது.

கிளம்பும் நாளன்று காலை... கையில் சாப்பாட்டுத் தட்டோடு யமுனா இருந்த அறைக்குச் சென்றேன். ஒரே திசையைப் பார்த்தவாறே, முகத்தில் பவுடர் பூசிக்கொண்டிருந்தாள். வாயில் மெல்லியதாக ஒரு பாட்டு... நிதானமாக கணக்குப் பார்த்துக் கொசுவம் வைத்துப் புடவையை அழகாகக் கட்டிக்கொண் டாள்... சின்ன 'ஸ்டிக்கர் பொட்டை நெற்றியில் ஒட் டியபடியே, “இது மஞ்சள் கலர்தானே பாரதி?" என்று கேட்டபடி, சேலைக்குப் பொருத்தமான வளையல் களை மாட்டிக்கொண்டாள்.

"என்ன! ஜம்முன்னு வாசனை தூக்குது? இன்றைய டிபன் பொங்கல், வடையா?"-ன்னு விசாரித்து, ரசித் துச் சாப்பிட்டாள். பிறகு, என் அப்பா - அம்மா, அத்தை ஆகியோருக்கு நன்றி கலந்த வணக்கத் தைத் தெரிவித்துவிட்டு, அழைக்க வந்த மாமாவு டன் வேண்டா வெறுப்போடுப் புறப்பட்டுச் சென் றாள் யமுனா.

அவள் சென்று அரைமணி நேரம் ஆன பிறகும், எனக்குள் எழுந்த பிரமிப்பு அடங்கவில்லை. 'என்ன பெண் இவள்?... எல்லா இடங்களிலும் நிராகரிக் கப்பட்டிருக்கிறாள்... வீட்டிலிருந்து... ஊரிலிருந்து... விடுதியிலிருந்து... மாமா வீட்டில் இனி என்ன நிலைமையோ? தெரியாது. தொடர்ந்து படிக்க முடி யுமா? வேலை கிடைக்குமா? பார்வையில்லாதவ ளுக்கு வாழ்க்கைத் துணை அமையுமா?' தெரி யாது... தெரியாது... தெரியாது... ஆனாலும், வாழ்க் கையின் மீதுதான் யமுனாவுக்கு எத்தனை ஈடு பாடு... எத்தனை ரசனை... எடுத்து வைக்கும் அடுத்த அடிக்கு நிலம் இருக்குமா என்றுகூடத் தெரியாத பயணத்தில் எத்தனை உற்சாகம்'.

அதுவரை என்னிடம் பாடம் கேட்டுக் கொண் டிருந்த யமுனாவிடமிருந்து அன்று நான் கற் றுக்கொண்டேன், 'வாழ்வில் எதற்கும் பயப்படத் தேவையில்லை' என்று. குழந்தையாக இருக்கும் போது பயம் என்பது சுவாசம் போல இயல்பானதாக நம்மோடு இருக்கிறது. இருட்டுக்கும், திடீரென்று எழும் இரைச்சலுக்கும், பாதி ராத்திரியில் பாத் ரூம் போவதற்கும், பரணில் ஓடும் சுண்டெலிக்கும், இடிக்கும், மின்னலுக்கும் நான் பயந்திருக்கிறேன்.

அப்போதெல்லாம் இரவுகளில் 'டீனேஜ் அக்காக் கள்' பேய்க் கதைகளைப் பேசுவார்கள். 'மாடி வீட்டு அகல்யாவுக்கு பேய் பிடிச்சிருக்குமோ?' என்பது போன்ற ரகசிய ஆராய்ச்சிகள் அலசப்படும்போது எங்களுக்கு அங்கே இடம் கிடையாது. ஆனா லும், விரட்டப்படும் ஈக்கள் பலகாரக் கடையையே திரும்பத் திரும்ப மொய்ப்பது போல, நாங்கள் அந்த இடத்தில் ஆஜராவோம்.

பி.டி.சாமியின் 'பேய்... பேய்தான்' கதையைப் பக் கத்து வீட்டு ஷியாமளா அக்கா 'சவுண்ட் எஃபெக் டோடு' சொல்லியதை ஒட்டுக்கேட்டு, இரவெல் லாம் பயத்தில் உறங்காமல் கழித்தக் கடும் பொழு துகளை இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகி றது.

வயது ஏற ஏற, பயங்கள் இடம் மாறுகின்றன. திங்கட் கிழமை காலை 'ஹோம் வொர்க்' நினைவு வந்து, 'ரெண்டு நாளா என்ன செய்தே" என்று காதை முறுக்கும் கணக்கு டீச்சருக்குப் பயந்து திடீர் வயிற் றுவலி' வராதக் குழந்தைகள் யாரேனும் இருக்க முடியுமா, என்ன? பரீட்சை பயம், பாஸா, ஃபெயிலா எனும் அச்சம், நேர்முகத் தேர்வுகளில் நிமிர்ந்து உட்கார்ந்து நேர்த்தியாக பதில் சொல்ல நடுக்கம்... இப்படி இதன் நீட்சி தொடர்கிறது. பிறகு, பெண்க ளுக்கான பிரத்தியேக பயங்களின் ஆக்கிரமிப்பும், அடர்த்தியும் நிறைந்ததாகிறது வாழ்க்கை.

கல்யாண நாளன்று, மேக்கப்புக்கும், மேனியைத் தழுவும் மூகூர்த்தப் புடவைக்கும், மினு மினுக்கும் நகைகளுக்கும் மேலாக ஏதோ ஒன்று உடலைக் கவ்வுகிறதே! அதுவா?

புகுந்த வீட்டில், புரியாத புதிய மனிதர்கள் மத்தியில் விட்டு விட்டு அம்மாவும் அப்பாவும் புறப்படும்போது தொண்டையை இறுக்கிப் பிடிக்கிறதே! அதுவா?

தொடரும் உறவுப் பயணத்தில் கசப்புகளை விழுங் குகையில் கண்ணீராய்ச் சுடுகிறதே! அதுவா?

வெளி உலகில், அலுவலகத்தில் தனிமைப்ப டுத்தப்பட்டு, தோல்வியையோ அவமானத்தையோ எதிர்கொள்ளும்போது அடிவயிற்றில் கல் போலத் திரள்கிறதே! அதுவா?

முதுவுக்குப்பின் உலவும் 'நடத்தை' பற்றிய விமரிச னங்கள் காதில் விழும்போது உயிர் உறைகிறதே! அதுவா?

கோவையில் பத்து வயசுக் குழந்தை பாலியல் வன் முறைக்கு ஆளானதைக் கேட்ட பின்னர் நெஞ்சு பதறி, நம் மகளை வாரி அணைக்கையில் உடல் நடுங்கிறதே! அதுவா?

எந்த பயத்தின் அடர்த்தி பெரியது? எது நம் உயிர் உண்ணும் எமன்? அச்சம் என்பது பெண்களுக் கான நான்கு குணங்களுள் ஒன்றெனச் சொல்லி யது ஒரு காலம். இதை மாற்றி, 'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்', என முரசறைந்தார் மகா கவி பாரதி. 'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதி லும் அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்ப தில்லையே! என்ற பாரதியின் வரிகள் வெறும் கவி தையில்லை. ஒரு மந்திரம். சொல்லச் சொல்ல, உள்ளத்தில் தைரியத்தை ஊற்றெடுக்கச் செய்யும் மந்திரம். நமக்கு முன் வாழ்ந்த கோடி கோடி மனி

தர்க்கு வராத துயரங்களோ, வாழ்க்கை இக்கட்டு களோ நமக்குப் புதிதாக வரப்போவதில்லை எனும் தெளிவைத் தரும் மந்திரம்.

தைரியம் என்பதே, ஒரு விதத்தில் பயம் இல்லாதது போல பாவனை செய்து கொள்ளும் நடிப்புத்தான். ஆனால், நடிக்க நடிக்க உண்மையில் பயம் அகன்று போகும் அழகான அனுபவமும் பலருக்கு வாய்த்தி ருக்கிறது.

நம்முடைய பயம் எதில்? அதன் ஆணிவேர் என்ன? என்ற மனக்குவிப்பு; என்னை விடப் பெரியவர் எவ ருமில்லை, என்னைவிடச் சிறியவர் யாருமில்லை என்ற மனச் சமன்பாடு இவை இரண்டும் போதும், எந்த பயத்தையும் வற்ற வைக்க.

எத்தனையோ வருடங்களுக்குப்பின் சமீபத்தில் யமுனாவைச் சந்தித்தேன். "பி.சி.ஓ. வச்சுப் பிழைச் சுக்கிட்டிருக்கேன் பாரதி. இப்பெல்லாம் பிச்சை எடுக்குறவுங்க கையில கூட செல்போன் வந்து டுச்சே. டெலிபோன் பூத்துக்கு யார் வர்றா? கஷ் டந்தான்... ஆனாலும் எப்பிடியாச்சும் பொழைச்சுப் பேன்... பயமில்லை..." என்று சிரித்தபடியே பி.சி.ஓ. கடையின் கதவைப் பூட்டிவிட்டு, குச்சியைத் தட்டி யபடியே எந்தத் தடுமாற்றமும் இல்லாமல் நடந்தாள் யமுனா.

அவளது காலடிச் சத்தத்தைக் கேட்டு உலகின் எல்லா பயங்களும் பயந்துபோய்க் கிடந்தன.

பயங்கள் அகல, யமுனையில் குளிக்க வேண் டுமா... என்ன? யமுனாக்களைப் பார்த்தால் போதுமே!

# 19. போராட்டமே பெண்ணின்

வாழ்வியல்பு!

1971-ல், இந்திய வீரர்கள் பாகிஸ்தானோடு போராடி சுதந்திர பங்களா தேஷை உருவாக்கிய சரித்திரப் பிரசித்திப் பெற்ற சண்டை, 'பத்மா யுத்தம்' (Battle of Padma) என்று அழைக்கப்படுகிறது. கங்கையும் பிரம்மபுத்ராவும், வங்கத்தில் 'பத்மா' எனும் பெயருடன் சங்கமிக்கின் றன. அந்தப் போரில் பத்மா நதியும் உணர்ச்சி மிக்க ஒரு போராளியாக வங்கத்துக்காகப் போராடியது என்று வரலாற்று ஆசிரியர்கள் வர்ணிக்கும் அள வுக்கு பத்மா நதி ஆவேசமானது. பெண்கள் எந்த வகையிலாவது பங்கேற்காத ஓர் அணி, எந்தப் போரையாவது வென்றிருக்க முடிந்திருக்கிறதா?

மகாபாரதக் கதையை இன்றைய நவீன மேனேஜ் மென்ட் சித்தாந்தங்களோடுப் பொருத்தி ஏகப் பட்டப் புத்தகங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதில் தனிச் சிறப்பான புத்தகம், குருசரண்தாஸ் எழுதிய 'நல்லவனாய் இருப்பதன் சங்கடங்கள்' எனும் புத்தகம்தான்.

தன் புத்தகத்தை அறிமுகப்படுத்த சென்னை வந்த அவர், ஒரு விழாவில் பேசினார். அவரின் பேச்சு படு சுவாரஸ்யமானது. " இந்திய அம்மாக்களில் பத்தில் ஒருவர்தான் ஆண் குழந்தைக்கு, 'அர்ஜூன்' என்று பெயர் வைக்கிறார்கள். ஆனால், ஒருவர் கூட 'யுதிஷ்டிரன்' என்று பெயர் வைப்பதில்லை" என்ற

வித்தியாசமான தகவலைச் சொன்னார். மேலும், தன் பிள்ளை வெற்றி பெறுபவனாக, வசீகரமானவனாக இருக்க வேண்டும் என்பதே முக்கியம்; நல்லவனாக இருப்பது அல்ல" என்றார்.

எங்களைக் குழுக்களாகப் பிரித்து, 'பாண்டவர்கள் ஏன் வென்றார்கள்? கௌரவர்கள் ஏன் தோற்றார்கள்? என்பதற்கு மேனேஜ்மென்ட் கோணத்திலிருந்து காரணங்கள் சொல்லச் சொன்னார். 'கௌரவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. பீஷ்மருக்கும் கர்ணனுக்கும் சண்டை, சல்லியனுக்கும் கர்ணனுக்கும் தகராறு. ஆனால், பாண்டவர்களிடம் ஒற்றுமை இருந்தது..' என்பதுதான் அவர் எதிர்பார்த்த பதில்.

பெண்கள் அதிகம் இருந்த எங்கள் குழுவில் புதிய கருத்தாக்கம் ஒன்று எழுந்தது. 'பாண்டவர்களின் குழுவில் ஒரு பெண் இருந்தாள். அவள்தான் போருக்கான காரணம். போரைக் கைவிட அத்தனை பேரும் தயாராக இருப்பினும், அவள் தொடர்ந்து போர் செய்ய அவர்களைத் தூண்டினாள். அவளது அறச்சீற்றம்தான் பாண்டவரது வெற்றியை உறுதி செய்தது. பெண்களே இடம் பெறாத கௌரவர் அணி தோற்றது' என்ற எங்களின் கருத்துக்கு கொஞ்சம் முணு முணுப்போடு கைத்தட்டல் கிடைத்தது.

பீகாரில் வழக்கப்படும் கதை இது. சந்திரகுப்த மௌரியன் என்னும் வீரன் (இவனது அமைச்சர்தான் சாணக்கியர்), பாடலிபுரத்தை ஆண்ட நந்தர்களோடு பலமுறைப் போராடித் தோற்றான். ஒரு பெருந்தோல்விக்குப் பின், ஓடி ஓடிக் களைத்து, பசி, குளிர், தாகம் வாட்ட, ஓர் ஏழைப் பெண்ணின்

குடிசைக் கதவைத் தட்டினான். அந்தப் பெண் தன் சிறு மகனுக்கும், விருந்தாளியான சந்திரகுப்தனுக்கும் இலை போட்டு சுடச்சுட சோறு வைத்தாள். அவசரமாக சோற்றை நடுவில் தொட்ட பிள்ளை சூடு தாங்காமல், 'ஆ' என்று அலறினான். "என்னடா நீ சரியான சந்திரகுப்தனா இருக்கிறே.." என்றாள் ஏழைத்தாய். 'சொரேல்' என்றது நம்ம ஆளுக்கு அடையாளம் தெரியாமலேயே எய்தப்பட்ட அம்பு, ஆழமாகத்தான் தைத்தது.

"ஆனால், சந்திரகுப்தனுக்கும், சூடு சோற்றில் கை வைத்ததற்கும் என்ன சம்பந்தம்?" கேட்டே விட்டான் சந்திரகுப்தன். ஏழைத்தாய் விளக்கினாள். "சோறு சூடாக இருந்தால், நட்ட நடுவில் கை வைக்காமல் ஓரத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிடணும். அப்போதுதான் நடுவே வருவதற்குள் சோறு ஆறியிருக்கும். சுகமாக சாப்பிடலாம். அது போலத்தான், எதிரியின் தலைநகரான பாடலிபுத்திரம் வளமையாக இருந்தால், அந்த வளமையும் பாதுகாப்பும் இல்லாத எல்லைப்புற கிராமங்களை முதலில் பிடிக்க வேண்டும். ஓரங்கள் வசப்பட வசப்பட நடுவே உள்ள தலைநகரமும் வலிமை இழக்கும். இப்போது அதைப் பிடிப்பது எளிது. சந்திரகுப்தனுக்கு சண்டை செய்யத் தெரியவில்லை. என் மகனுக்கு சாப்பிடத் தெரியவில்லை" என்றாள் அந்த புத்திசாலி பெண். அடுத்தமுறை போரில் யார் வெற்றி பெற்றார்கள் என்று சொல்லவும் வேண்டுமா?

அமெரிக்காவில் நிறவெறி தலைவிரித்தாடிய போது, கருப்பின மக்கள் தங்களுக்கென தனியே ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் மட்டுமே அமர

வேண்டும் எனும் நிலை இருந்தது. அப்படி அவர்களுக்கான இருக்கைகள் எதுவும் காலி இல்லாத ஒரு மாலை நேரப் பேருந்தில், 'ரோஸா பார்க்' என்ற கருப்பினப் பெண், காலியாக இருந்த வெள்ளையர் இருக்கையில் அமர்ந்தாள். உடனே, பேருந்தின் ஓட்டுநரால் கடுமையாகக் கண்டிக்கப்பட்டாள். இருக்கையிலிருந்தும் எழுந்திருக்க மறுத்தாள். அவளின் உறுதியைப் பார்த்த பஸ், போலிஸ் ஸ்டேஷன் போனது. ரோஸா சிறை வைக்கப்பட்டாள். தொடர்ந்து மூன்று வருடங்கள், எந்தக் கருப்பினத்தவரும் அமெரிக்க முதலாளிகளின் பஸ்ஸை பயன்படுத்தாமல் புறக்கணித்தனர். மார்ட்டின் லூதர் கிங் தலைமையில் நடந்த இந்தப் போராட்டம் வெற்றி கண்டு, இன்று ஒபாமா அமெரிக்கத் தலைவராவதில் முடிந்துள்ளது. ஆனால், இந்த வெற்றிக்கான வித்து ரோஸாவின் தைரியம் தான்.

இவை மட்டுமல்ல, தசரதனின் போரில் தேர் அச்சாணி கழன்றுவிட, தன் கைவிரலையே அச்சாணியாகக் கொடுத்து, தேரையும், புருஷன் பேரையும் காத்த கைகேயி, நரகாசுரனுடனான போரில் கண்ணன் கொஞ்சம் மயங்கிச் சாய, சண்டையை முடித்து சரித்திரம் படைத்த சத்யபாமா, உயிர் பிரியும் வேளையிலும் 'சுதந்திரத்துக்காக என் உயிரை ஒருமுறையல்ல, எத்தனை முறையும் தருவேன்' என்று சொல்லி ஒரு சத்யாக்கிரகியின் ஆன்ம பலத்தை காந்திக்கு உணர்த்திய தில்லையாடி வள்ளியம்மை... இப்படி நம் புராணங்களிலிருந்து அண்மைக்கால சரித்திரம் வரை பெண்கள் தான் போராட்டங்களை முன்னே நகர்த்துகிறார்கள். ஆனால், தங்கப் பதக்கங்களும், சரித்திரக் கல்

வெட்டுகளும் தாங்கி நிற்பவையெல்லாம் ஆண்க ளின் வெற்றிகளை மட்டுமே...

இதோ சமீபத்தில்... பிரதீபா என்னும் பெங்களூர் கால் சென்டர் பெண், ஒரு டிரைவரால் பாலியல் பலாத்காரம் செய்து, கொல்லப்பட்டாள். இந்தக் கேஸை கோர்ட்டில் நாலு வருடங்கள் இழுத்தார் கள். இதற்குள், இறந்த பிரதீபாவின் இன்சூரன்ஸ் பணம், அலுவலகப் பணம் அனைத்தும் நாமி னியான கணவனுக்குப் போய்விட்டது. அவனும் அதை வாங்கிக் கொண்டு, வாங்கிய கையோடு இன்னொரு கல்யாணமும் செய்துகொண்டு செட் டில் ஆகிவிட்டான். பிரதீபாவின் கல்யாணத்துக்கு வாங்கிய கடனையே இன்னும் அடைத்து முடிக் காத அவளின் ஏழை விதவைத் தாய், நான்கு வருடங்கள் கோர்ட் படியேறிப் போராடி, தன் பெண் ணைக் கொலை செய்தவனுக்கு ஆயுள் தண் டனை வாங்கித் தந்துவிட்டாள். அதை மரண தண் டனையாக மாற்ற, தொடர்ந்து போராடப் போகிறா ளாம்.

காலம் காலமாக போராட்டமே பெண்ணின் வாழ் வியல்பாக உள்ளது. அவளின் தார்மீகக் கோபமும், தீராத மன உறுதியும் இந்த உலகில் மூடப்பட்ட நீதி யின் கதவுகளைத் தட்டியவாறே இருக்கின்றன.

# 20. நேரில் நின்று... பேசும் தெய்வம்

தீபாவளியன்று என் அம்மாவைப் பார்க்கப் போயிருந்தேன். சமீப காலமாக உடல் நலம் குன்றிப் படுக்கையிலிருக்கும் அம்மா, பிறர் பேசுவதை உள் வாங்கவும், திரும்ப பதில் சொல்லவும் சிரமப்படுகிறார். கொஞ்ச நேரம் அம்மாவின் கைகளை ஆதரவாகப் பிடித்து அமர்ந் திருந்தபோது, அவளின் நேற்றைய உருவங்கள் என் நினைவுத் திரையில் மாறி மாறி வந்து போயின.

எம். எஸ்சி -யில் 'கோல்ட் மெடல் வாங்கிய அம்மா, மத்திய அரசு அலுவலக அதிகாரியாக கம்பீரமாக வலம் வந்த அம்மா, என் சிறு வயதில் பேச்சுப் போட்டிக்குத் தயார் செய்து எனக்கு இலக்கிய ஆர் வம் ஊட்டிய அம்மா, மதிய உணவை மறந்துவிட்டுப் போன ஒரு கல்லூரி நாளில், டிபன் பாக்ஸை தூக் கிக் கொண்டு வியர்க்க விறுவிறுக்கக் கல்லூரிக்கு ஓடி வந்த அம்மா.... நெஞ்சை நிறைத்த அம்மாவின் வடிவங்களை நினைத்து நெகிழ்ந்தேன்.

அம்மாவின் குரல் சன்னமானது. மிக மெல்லிய குரலில் பேசும் அவள் சொல்லும் எதையும் எங் கள் யாராலும் தாண்டிச் செல்ல முடிந்ததில்லை - அப்பா உட்பட. அம்மா சொல்லும் கதைகள். 'அம்மா, தண்ட சோத்து தடிராமன் கதை வேணும்'. கணக்குப் பரீட்சை அன்று மட்டும் அம்மா ஆபீ ஸுக்கு லீவு போட வேண்டும். சினிமா நடுவில்

சண்டைக் காட்சி வந்தால், கண்ணை மூடும் அம்மாவின் மெத்தென்ற விரல்கள். ஒவ்வொரு வகுப்பிலும் எனக்குப் புது வாட்டர் பாட்டில், யாரையாவது கடிந்து பேசினால் 'இனிய உளவாக இன்னாத கூறல்' என்று அவள் சொல்லும் திருக்குறள். வாழ்வின் எந்தப் பள்ளங்களையும் இட்டு நிரப்பிவிடும் அவளின் பிரியம்...

அம்மா... நம் வாயிலிருந்து வார்த்தைகளை வரவழைத்தவள். எல்லா உறவுகளும் அவள் அறிமுகப்படுத்தியவை. அவள்தான் நம் முதல் குரு. நம் பசி, ருசி, விருப்பு, வெறுப்பு, சந்தோஷம், கவலை எல்லாவற்றையும் நம் உடல் மொழியாலேயே உணர்ந்து கொள்பவள். 'உனக்கு என்ன தெரியும்?' என்று இளமை வேகத்தில் அவளை ஆயிரம் முறை அலட்சியம் செய்திருந்தாலும், ஒருநாளும் அவள் நம்மை வெறுத்ததில்லை. மகளின் திருமணத்துக்காக நாள் குறிக்கப்பட்ட இரவின் அமைதியில் 'பெண் தூங்கிவிட்டாள்' என நினைத்து அவளின் தலையை மெள்ள வருடும் அம்மாவின் கைகளின் வழியே கசியும் கவலையும் கரிசனமும் எந்தக் கடலையும்விட ஆழமானது.

ஒவ்வொரு பெண்ணும், தன் முதல் பிரசவத்தில் ஓர் உயிரை உலகுக்குக் கொண்டுவரும் வலி நிரம்பிய போராட்டத்தில் தான் அம்மாவின் மகத்துவத்தையும் தாய்மையின் தூய்மையான சிகரங்களையும் தரிசிக்கிறாள். எனக்கும் அப்படித்தான். அந்த இரவை எப்படி மறக்க முடியும்? சித்திரவதைக் கூடம் போன்ற பிரசவ வார்ட்.

எக்கித் தள்ளப்பட்ட ஊஞ்சல் குறிப்பிட்ட தாள லயத்தில் திரும்பத் திரும்ப வருவது போல, ஒரு தாள லயத்துடன் போய்ப் போய்த் திரும்ப வரும் வலி. அது எங்கே தொடங்குகிறது? பின் முதுகிலா? வயிற்றிலா? விலாவிலா? நெஞ்சிலா? கரிய வானில் கோடு போடும் மின்னலின் திசை தெரியாதது போல் உடலில் எங்கே கோடு போடப் போகிறாய், அடுத்து வரும் வலியே? வலியின் உக்கிரம் உச்சந்தலையைப் பிளக்கிறது. சாய்த்து வைக்கப்பட்டிருக்கும் ரெக்ஸின் மெத்தையைக் கைகள் பிராண்டுகின்றன. வலி, கால்களை ஒன்றோடு ஒன்று இறுக்கி, முதுகைக் குறுக்கத் தூண்டுகிறது. அப்படிச் செய்ய விடாமல் இறுக்கிப் பிடிக்கும் தாதியர். உச்சகட்ட வலி ஓர் உன்னத அனுபவம்.

உச்சகட்ட வலியில், முழுக்க முழுக்க முள்ளால் செய்த சாட்டை சுழன்று சுழன்று நம் உடலை விளாசும் வேகம். 'அம்மா... அம்மா...' என்று அழுது அரற்றிய எனக்குள் உயிர் போய் உயிர் வருவது போல் ஓர் அலறல். சில நிமிடங்களுக்குப் பின், 'ரோஜாப் பூ' மாதிரி குழந்தையை மெல்லிய துணியில் சுற்றித் தன் கைகளில் ஏந்தி என் அருகில் வந்தார் ஒரு தாதி. அந்த நொடியில் என் அம்மாவின் கருவறைக்குள் மீண்டும் போக எனக்குள் ஓர் ஆசை.

'பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால் மிகப் பீழையிருக்குதடி' என்று பேசுவதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. பெண்ணுக்கென்றே பிரச்னைகள். பிரத்தியேக நெருக்கடிகள். காலம் காலமாக கட்டம் போட்டுப் பாண்டி ஆடுவது போன்ற கட்டுப்பாடுகள்... வீட்டுக்குள். 'எல்லா துறைகளிலும் நீ வளரலாம்... ஆனால், என்

தோளுக்கு மேல் வளரக்கூடாது' என்று நசுக்கும் ஆணாதிக்கம்... வெளியில். பத்திலிருந்து ஐம்பது வரை எல்லாப் பெண்களையும் 'ஃபிகர்' என்று நோக்கும் வக்கிரப் பார்வையின் அக்னித் தீண்டல்கள், அவமானங்கள், ஆபத்துகள்.

ஆனால், இத்தனைக்கும் மத்தியில் ஓர் அம்மாவாக வாழும் அனுபவமும், தாயாகும்போது தன் அம்மாவைப் போற்றும் அனுபவமும் எந்த ஆணுக்கும் கிடைக்கவே முடியாத மிகப் பெரிய வரம்! இறைவன் பெண்ணுக்கே கொடுத்த பிரத்தியேகக் கொடை!

மீண்டும் என் அம்மாவின் முகத்தைப் பார்க்கிறேன். அவளின் பேச்சு நாவிலிருந்து கண்களுக்கு மாறிவிட்டதை உணர்கிறேன். "பாட்டி சீக்கிரம் பேசுவாம்மா... கவலைப்படாதே. எங்க கிளாஸ்ல நேத்து ஒரு 'ஜோக்'மா... 'முகேஷ்ன்னு ஒரு மொக்கைப் பையன் இருக்கான்ல..." என்று எதை எதையோ பேசி என் மனசை மாற்ற முயலும் என் மகளின் சொற்களில் மெல்லியதாக ஒரு தாய்மையின் கீற்று.

ஏதோ ஒரு பயணத்தில் காசியில் கங்கையை தரிசித்தேன். அந்தி மயங்கும் வேளையின் சௌந்தர்யத்தில் கங்கைக்கு ஆரத்தி எடுத்து, சிறு சிறு விளக்குகளை கங்கையில் மிதக்கவிடும் காட்சி யாருக்கும் ஆன்மச் சிலிர்ப்பை ஏற்படுத்தும். இந்தியாவின் வாழ்வே கங்கையோடு பிணைந்தது. 'கங்கா மாதா' என்று கண்ணீர் மல்கப் போற்றி அனைவரும் வழிபடும் புனிதத்துக்கு உரியவள் கங்கை.

தனக்கு எத்தனை வயதானாலும், முதுமை, புலன்களின் வீரியத்தைக் குறைத்தாலும் தன் குழந்தைகளின் நன்மைக்காகவே பிரார்த்திக்கும் அம்மாக்களையும், தன் முதிய அம்மாவையும் தன் குழந்தை போல் பார்த்துக் கொள்ளும் மகள்களையும் விடவா கங்கை புனிதமானவள்!

(முற்றும்)